
# திருக்கோயில்

"என்கடன் பணி செய்து கிடப்பதே"

CONNEMARA ...
7 - AUG 1965
MADRAS



ஸ்ரீ மகாலட்சுமி,
காயாரோகணேசுவரர் கோயில், காஞ்சிபுரம்

மாலை 7] விசுவாவசு ஆடி — ஆகஸ்ட் 1965 [ மணி 11

சென்னை அரசாங்க அறநிலையப் பாதுகாப்புத் துறை வெளியீடு.



மாயூரம் ஏ. வி. சி. கல்லூரியில் நிகழ்ந்த ஆலய நிர்வாக அதிகாரிகள் கோடைப் பயிற்சிப் பள்ளியின் நிறைவு விழாவில், நமது தமிழக முதலமைச்சர் திருமிகு **M.** பக்தவத்சலம் B. A. B., L., அவர்கள் கலந்துகொண்டு, உரை நிகழ்த்துதல்.

## பொருள் அடக்கம்


1. நடராஜ வடிவம்
2. தெய்வம் என்பதோர் சித்தம்
3. திருவாய்மொழி
4. விடை தெரியுமா
5. எடுத்துச் சுமப்பான்
6. திருச்சந்த விருத்தம்
7. விசயமங்கலம்
8. வட திருச்சிற்றம்பலம்—கல்வெட்டுக்கள்
9. ஸ்ரீவைஷ்ணவ குருபரம்பரை
10. சமயக் பொருட்குறிப்புகள்
11. பாரதப் பண்போவியங்கள்
12. தருமலிங்கேசர் மாலை
13. திருஞான சம்பந்தர் பிள்ளைத் தமிழ்



**ஆண்டுச் சந்தா ரூ. 10/-** **தனி இதழ் விலை ரூ. ஒன்று**


## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விரும்புபவர்கள் **"திரு. ஆணையர் அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-34"** என்னும் முகவரிக்கு ரூபா **பத்து** அனுப்பி, எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்கள் ஆகச் சேர்ந்து கொள்ளலாம்.

அல்லது, அவ்வவ் வட்டார **அறநிலைய உதவி ஆணையாளர்களின்** அலுவலகங் களிலும், மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

ஓர் ஆண்டின் நடுவில் எந்தமாதத்திற் சேர்ந்தாலும், அடுத்த ஆண்டில் அந்த மாதம் வரையில், 12 இதழ்கள் அனுப்பப்பெறும்.

ஓர் ஆண்டிற்குக் குறைந்த சந்தாத் தொகை ஏற்கப் பெறுவதில்லை.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்துதவுதல், இதழ்கள் தவறுமற் சேர்தற்கு மிகவும் இன்றியமையாதது.

—ஆசிரியர்.

திருக்கோயில்
திங்கள் வெளியீடு

மாலை 7] விசுவாவசு ஆடி—ஆகஸ்ட் [மணி 11

# நடராஜ வடிவம்

**முன்னுரை :**

எல்லாம் வல்ல இறைவன், தனக்கென ஓர் உருவும், ஒரு பெயரும் உடையன் அல்லன். ஆயினும் நம் பொருட்டு, எம் பெருமான் பல உருவமும் பல பெயரும் கொண்டு விளங்கியருளுகின்றான். "ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்றுமிலாற்கு ஆயிரம் திருநாமம் பாடித் தெள்ளேணம் கொட்டாமோ" என்பது **திருவாசகம்.** அங்ஙனம் சிவபிரான் உயிர்களின் பொருட்டுக் கொண்டருளிய திருவுருவங்கள் பலவற்றுள், **நடராஜ வடிவம்** மிகவும் சிறந்து திகழ்வதொன்று.

'நடராஜ வடிவம்' நலங்கள் பலவும் நிறைந்தது; பழமையும் பெருமையும் வாய்ந்தது; தமிழ் நாட்டின் தனிப் பெருங்கலையிற் செல்வமாகக் கவினுற்றுப் புகழோங்கிப் பொலிவது! நடராஜப் பெருமான் எழுந்தருளி விளங்கும் தில்லைத் திருச் சிற்றம்பலம் ஆகிய **சிதம்பரம்** ஒன்றுமே, ஏனை எத்துணையோ பல எண்ணிறந்த கோயில்கள் எல்லாவற்றிலும் மிக மேலானதாக, சைவப் பெருமக்கள் அனைவராலும், ஒரு முகமாகக் **கோயில்** எனச் சிறந்தெடுத்துத் தனிப்பெரு மாட்சிமையுடன், போற்றி வழங்கப் பெறுகின்றது! எனினும் நடராஜத் திருவுருவம் இடம் பெறாத கோயில் எதுவும் இல்லை. நடராஜத் திருவுருவம் எல்லாச் சைவக் கோயில்களிலும் வைத்துச் சிறப்புறப் போற்றி வழிபடப் பெறுகின்றது!

**இராமலிங்கர் :**

நடராஜப் பெருமானிடத்தும், அப்பெருமானின் திருவுருவச் சிறப்பிலும் சைவத் தமிழ்ச்சான்றோர்கள் எல்லோருமே மிகவும் ஈடுபட்டுத் திளைத்து இன்புறுகின்றனர். "அருட்சோதித் தெய்வம், எனை ஆண்டுகொண்ட தெய்வம், **அம்பலத்தே ஆடுகின்ற ஆனந்தத் தெய்வம்.**" என்றெல்லாம் சமரச ஞான சன்மார்க்கச் சான்றோர் ஆகிய அருட்டிரு இராமலிங்க அடிகளார், பல வகைகளில் நடராஜப் பெருமானைப் பாடிப் பரவுகின்றார்.

**சுந்தரர் :**

சைவசமய அருளாசிரியன்மார் நால்வர்களுள் ஒருவராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் தில்லைத் திருச்சிற்றம்பலத்திற்குச் சென்று நடராஜப் பெருமானைக்

கண்டு வணங்குகின்றார்! அப்பொழுது அவர் தம் "ஐந்து பேரறிவும் கண்களே கொண்டன; அளப்பருங் கரணங்கள் நான்கும் சிந்தையே ஆயின; குணம் ஒரு மூன்றும் திருந்து சாத்துவிகமே யாகிச் சிறந்தன." அந்நிலையில் அவர், நடராஜப் பெருமான் இயற்றும் 'ஆனந்த எல்லையில் தனிப்பெருங் கூத்தினை'த் தரிசித்தார்; பேரின்ப வெள்ளத்துள் திளைத்து மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்.

நடராஜ வடிவத்தினையும், அப்பெருமான் இயற்றும் திருநடனத்தினையும், கண்டு கும்பிட்டு மகிழ்தலினும் சிறந்த பேறு வேறொன்றில்லை. இப்பேறு கிடைக்குமாயின், துன்பம் நிறைந்த மனிதப் பிறப்புங்கூட, மிக மேலான இன்பச் சிறப்பை அளிப்பதாக விளங்கும். சுந்தரமூர்த்தி சுவாமிகளின் இவ்வனுபவ மன நிலைமையினைச் சேக்கிழார் சுவாமிகள், பின்வருமாறு செவ்விதின் விளக்கிப் பாடி யருள் கின்றார்.

தெண்ணிலா மலர்ந்த வேணியாய்! உன்றன்
திருநடம் கும்பிடப் பெற்று,
மண்ணிலே வந்த பிறவியே எனக்கு
வாலிதாம் இன்பமாம்! என்று,
கண்ணில் ஆனந்த அருவி நீர் சொரியக்
கைம்மலர் உச்சிமேற் குவித்துப்
பண்ணினல் நீடி அறிவரும் பதிகம்
பாடினர்; பரவினர்; பணிந்தார்.

**திருநாவுக்கரசர்:**

இவ்வாறே திருநாவுக்கரசு சுவாமிகளும், நடராஜப் பெருமான்பால் எல்லையில்லாத ஈடுபாடு கொண்டு விளங்குகின்றார். நடராஜ வடிவம் கண்டு தரிசித்து மகிழ்தலில், திருநாவுக்கரசர்க்கு இருந்த ஆர்வமிகுதியின் சிறப்பினை,

கையும் தலைமிசை புனைஅஞ் சலியன;
கண்ணும் பொழிமழை ஒழியாதே
பெய்யும் தகையன; கரணங் களும்உடன்
உருகும் பரிவின; பேறெய்தும்
மெய்யும் தரைமிசை விழும்; முன்பு எழுதரும்
மின்தாழ் சடையொடு நின்றாடும்
ஐயன் திருநடம் எதிர்கும் பிடும்அவர்
ஆர்வம் பெருகுதல் அளவின்றால்!

எனச் சேக்கிழார் பெருந்தகை சிறந்தெடுத்துக் கூறிப் பாடி விளக்கியருள் கின்றார்.

திருநாவுக்கரசரின் திருவுள்ளத்தில் நடராஜ வடிவின் முடிகொண்ட மத்தமும், முக்கண்ணின் நோக்கும், முறுவலிப்பும், துடிகொண்ட கையும், துதைந்த வெண்ணீறும், சுரிகுழலாள் படிகொண்ட பாகமும், பாய் புலித்தோலும், குரைகழலும் ஆகியன எல்லாம், '**சரக்கறையோ என் தனி நெஞ்சமே**' என்று அவரே பிறிதோர் இடத்திற் பாடுமாறுபோலக் குடி கொண்டு விட்டன,

நடராஜப் பெருமானின் திருநடன தரிசனம் செய்து வியப்பும் விம்மிதமும் மேலோங்கி நின்ற திருநாவுக்கரசர், 'சிற்றம்பலத்துக் **கூத்தனிற் கூத்து வல்லார் உளரோ?**' எனவும், 'தில்லை அம்பலத்துக் **கூத்தனுக்கு ஆட்பட்டு இருப்பதன்றே** நந்தம் கூழைமையே' எனவும் வினவி, வியந்து உருகி மகிழ்ந் தருள்கின்றார்.

நடராஜ வடிவின் நலங்களைக் காண்டலும், கண்டு உணர்ந்து களித்து உள்ளம் கசிந்துருகி மகிழ்தலும், ஒருவர்க்குப் பெறலரிய பெரும்பேறு எனலாம். எல்லோர்க்கும் அத்தகைய அரும்பெறற் பெரும்பேறு நேர்தல் அரிது! காணுந் திறன் எல்லோர்க்கும் வாய்த்துளதே யாயினும், காணும் வாய்ப்பும் பேறும் கலையுளமும் எல்லோர்க்குமே கிடைப்ப தில்லை. ("Sight is a faculty, but seeing is an art"). நடராஜ வடிவின் நலங்களைக் கண்டு திளைக்கும் நற்பேறு நணுகுமாயின், நம்முடைய மனிதப் பிறவி நனிமிகச் சிறந்த பயனைப் பெற்ற தாகும் எனத் திருநாவுக்கரசர், நயந் துருகிப் பாடி நவிலுகின்றார்!

குனித்த புருவமும் கொவ்வைச்
செவ்வாயிற் குமிண்சிரிப்பும்,

பனித்த சடையும், பவளம் போல்
மேனியிற் பால்வெண் நீறும்
இனித்தம் உடைய எடுத்த
பொற்பாதமும் காணப் பெற்றால்,
மனித்தப் பிறவியும் வேண்டுவதே
இந்த மாநிலத்தே!

**திருஞானசம்பந்தர் :**

இவ்வாறே திருஞானசம்பந்த சுவாமிகளும், தில்லைக்குச் சென்றார்; அம்பலத்தை அடைந்தார், இறைவன் தமக்கு அளித்த மெய்ஞ்ஞானமே, அம்பலமாகத் திகழ்தலை அறிந்தார். அதன்கண் இறைவன் இயற்றும் ஆனந்த ஒரு பெருந் தனிக்கூத்தைக் கண்டார். தம் உள்ளத்தில் நிறைந்த ஞானத்தின்கண் அருவாய் அகத்தே நிகழும் திருக்கூத்தே, தில்லையம்பலத்தில் தம் கண்களின் முன்னர்ப் புறத்தே உருவாய்ப் புலப்பட்டுத் தோன்றக் கண்டு, கும்பிட்டுக் களிப்புற்றார். ஐம்பொறிகளுக்கும் எட்டாததாய், நுண்ணிதாய், அருவமாய், மெய்யுணர்விற்கு மட்டுமே நேர்பெற வரும் சிவ போகத்தினை, உருவமாய்ப் பருப்பொருள் போல ஐம்பொறிகளின் அளவினும் எட்டுமாறு, எளிதிற் கிடைக்கும்படி வழங்கியருளிய இறைவனின் பெருங் கருணையை ஏத்தினார்; இன்னிசைப் பதிகம் பாடினார்; விழிமாரி பொழிந்து வந்தார்.

அன்ன லார்தமக்கு அளிந்த மெய்ஞ்
ஞானமே ஆன அம்பல மும், தம்
உள் நிறைந்த ஞானத்து எழும்
ஆனந்த ஒருபெருந் தனிக்கூத்தும்,
கண்ணின் முன்புறக் கண்டு கும்பிட்டு
எழும் களிப்பொடும், கடற்காழிப்
புண்ணியக் கொழுந்து அனையவர்
போற்றுவார் புனிதர் ஆடிய பொற்பு.

**கலித்தொகை :**

இம்மட்டோ! **காரைக்காலம்மையார், சேக்கிழார்** முதலிய எத்துணையோ பெருமக்கள் பலர், நடராஜப் பெருமானிடத்தும், அவர்தம் திருவுருவின் மாட்டும் பேரன்பும் பெரும்பத்திமையும் மிக்கவர்களாக விளங்கினர். 'கற்றறிந்தோர் ஏத்தும் கலித்தொகை' என்னும் சங்க கால நூலின் கடவுள் வாழ்த்துப் பாடல், நடராஜப் பெருமானைக் குறித்ததாகவே அமைந்துள்ளது.

அதன்கண் சிவபிரான் வாக்குக்கும் மனத்துக்கும் எட்டாத இயல்பினனாயினும், நடராஜ வடிவம் கொண்டு நின்று கட்புலனாந் தன்மையனாகுந் திறம், கவினுறக் குறிப்பிடப்பட்டுள்ளது. அருமறைகள் பல பகர்ந்தும், கங்கைநீர் சடைக்கரந்தும், திரிபுரம் தீமடுத்தும், மணிமிடறும் எட்டுக்கைகளும் கொண்டதாய், அத்திருவுருவம் அழகுற விளங்குகின்றது. **கொடுகொட்டி, பாண்டரங்கம், கபாலம்** என்னும் திருக் கூத்துக்களைப் பெருமான் இயற்றுகின்றான். அழித்தற்றொழிலை நிகழ்த்துகின்ற காலங்களில் இறைவன் இயற்றி யருளும் இம் மூன்று திருக்கூத்துக்களுக்கும், ஆண்டுப் பிறர் ஒருவரும் இல்லாமையினால், உமாதேவியார்தாம் **பாணி தூக்கு சீர்** என்னும் தாள வகைகளை அருகிருந்து ஒற்றறுத்துத் தருகின்றார்! எனக் கலித்தொகைநூல் கவினுறப் பாடுகின்றது.

**சிலப்பதிகாரம் :**

செந்தமிழ்ப் பெருஞ்சான்றோர் ஆகிய **இளங்கோவடிகள்,** இயற்றிய **சிலப்பதிகாரம்** என்னும் செஞ்சொற் காப்பியத்திலும் கூட, இறைவனின் திருநடனங்களைப் பற்றிய குறிப்புக்கள் வருகின்றன. புகார் நகரத்தில் நிகழ்ந்த இந்திர விழாவில் **மாதவி** மக்கள் எல்லோரும் கண்டு களிக்கும்படி, பல்வேறு தெய்வங்கட்கும் உரிய பல்வேறு நடனங்களையும், அவரவர் அணியுடன், அவரவர் கொள்கையின் நிலையும் படிதமும் நீங்கா மரபின், விதிமாண் கொள்கையின் விளங்க ஆடிக் காட்டிய செய்தியைக் கூறும் "கடலாடு காதை" என்னும் பகுதியில், இளங்கோவடிகள் பல வகைக் கூத்துக்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றார் :—

1. கொடுகொட்டி }
2. பாண்டரங்கம் } ... சிவபிரான்

| | | | |
|---|---|---|---|
| 3. அல்லியம் | } | ... | திருமால் |
| 4. மல்லாடல் | | | |
| 5. குடம் | | | |
| 6. துடி | } | ... | முருகன் |
| 7. குடை | | | |
| 8. பேடி | ... | ... | காமன் |
| 9. மரக்கால் | ... | ... | துர்க்கை |
| 10. பாவை | ... | ... | திருமகள் |
| 11. கடையம் | ... | ... | அயிராணி |

இவற்றுள் சிவபிரான் ஆடிய **கொடுகொட்டி** என்பது, திரிபுரம் தீப் பிடித்து எரியும் போது. இறைவன் இறைவி காணும்படி ஆடியது. **பாண்டரங்கம்** என்பது திரிபுரம் எரிந்து சாம்பரான பின்னர், இறைவன் நான் முகன் காண ஆடியது, இவ்வுண்மை.

> திரிபுரம் எரியத் தேவர் வேண்ட
> எரிமுகப் பேரம்பு ஏவல் கேட்ப
> **உமையவள் ஒருதிறன் ஆக ஓங்கிய**
> **இமையவன் ஆடிய கொடுகொட்டி ஆடல்**

எனவும்,

> தேர்முகன் நின்ற திசைமுகன் காணப்
> பாரதி ஆடிய வியன் பாண் டரங்கம்

எனவும் வரும் சிலப்பதிகாரப் பகுதியால் உணரலாம்.

மேலும், வடநாடு சென்று கண்ணகிக் குக் கோயில் எடுக்க இமயமலையினின்று கற்கொணர்ந்த சேரன் **செங்குட்டுவன்,** தனது தலைநகர் ஆகிய வஞ்சிமாநகரில் **இலவந்திமாடம்** என்னும் அரண்மனையின் நிலாமுற்றத்தில், மாலை நேரத்தில் தன் தேவி **வேண்மாள்** என்பாளுடன் வீற்றிருந்த பொழுது. ஆண்டுத் தன் மனைவியுடன் போந்து அரசனை வணங்கிய பறையூர்க் **கூத்தச் சாக்கையன்** என்னும் சிறந்த நாடகக் கலைஞன், சிவபெருமானுக்குரிய "கொடு கொட்டி" என்னும் கூத்தினை ஆடிக்காட்டினன் என்றும் இளங்கோவடிகள் இயம்புகின்றார்.

> திருநிலைச் சேவடிச் சிலம்புவாய் புலம்பவும்
> பரிதரு செங்கையிற் படுபறை ஆர்ப்பவும்
> செங்கண் ஆயிரம் திருக்குறிப்பு அருளவும்
> செஞ்சடை சென்று திசைமுகம் அலம்பவும்
> பாடகம் பதையாது சூடகம் துளங்காது
> மேகலை ஒலியாது மென்முலை அசையாது
> வார்குழை ஆடாது மணிக்குழல் அவிழாது,
> உமையவள் ஒருதிறன் ஆக ஓங்கிய
> இமையவன் ஆடிய கொட்டிச் சேதம்,
> பறைதரு நால்வகை மறையோர் பறையூர்க்
> கூத்தச் சாக்கையன் ஆடலின் மகிழ்ந்தான்.

**அறிஞர்களின் வியப்புரை :**

இங்ஙனம் பண்டைப் பெருநூல்களும் பெரியோர்களும் மட்டுமே யன்றி, இன்றைய உலகிற் புகழோங்கிய கலைஞர் களும் அறிஞர்களும் கூடக் கண்டு வியந்து மகிழ்ந்து போற்றிப் புகழும் வண்ணம், நடராஜ வடிவம் சிறந்துயர்ந்து திகழு கின்றது. **"என் அத்தன் ஆடல்கண்டு இன்புற்றதால் இவ் இருநிலமே"** எனத் திருநாவுக்கரசர் பாடுதற்கு ஏற்ப, இன்றைய உலகம் முழுவதுமே நடராஜ வடிவின் நலத்தினை நயந்தினிது பாராட்டி வியந்து இன்புற்று நிற்கின்றது எனலாம்!

1 உலகப் புகழ் பெற்ற கலையியற் பேரறிஞர் ஆகிய திரு. **ஆனந்த குமார சுவாமி** அவர்கள், "நடராஜ வடிவின் நலங்கள் அளப்பரியன. இத்தகைய தொரு சிறந்த வடிவத்தினை, இந்நாளில் எத்தகைய பெருங் கலைஞனும் கூடக் கருதி யுணர்ந்து படைத்தல் இயலாது. இது வெறும் கவிதை யன்று; அறிவியல் நலம் அமைந்தது. இத் திருவுருவம் பக்தர் களுக்கும், பாமரர்களுக்கும், விஞ்ஞானி களுக்கும், மெய்ஞ்ஞானிகளுக்கும் எல் லாம், பெருவியப்பையும் பேரீடுபாட்டை யும் விளைத்து மகிழ்வித்து வருகின்றது. காலமும் இடமும் கடந்து, எல்லா நாடு மொழி சமயம் சார்ந்த மக்களாலும் போற்றப்படத் தகுந்ததாய்த் திகழ் கின்றது. இத்தகைய அரும்பெருஞ் சிறப்புக்கள் மிக்க இத் திருவுருவத்தினை முதன் முதற் கருதிப் படைத்துதவிய அருட் பெருஞ் சான்றோர்கள் ஆகிய கலைஞர்களின், நுண்மாண் நுழைபுலம் சாலவும் வியந்து போற்றுதற்குரியது.

எனவே எத்துணையோ பல தலைமுறைகளாக நடராஜ வடிவம் மக்களின் உள்ளங்களை யெல்லாம் கவர்ந்து நின்று, வழிபடப்பெற்று வருதலில் வியப்பொன்றுமில்லை. எவ்வளவோ ஐயப்பாடுகள் கொள்ளுவதிலும், எத்துணையோ பல குறைபாடுகளைக் காண்பதிலுமே பழகிப் பயின்றுள்ள நாமும் கூட நடராஜரை வழிபட்டுத்தான் வருகின்றோம்!".

2. "உலக முதல்வனின் உருவ வெளிப்பாடே நடராஜ வடிவம். அருவநிலையில் உள்ள பரம்பொருள், உருவ நிலையிற் கட்புலனாகும் வண்ணம் குறைவிலா நிறைவாக அமைந்த திருவுருவமே, நடராஜர் ஆவர். இலயம், தொழில், இயக்கம் என்பனவற்றை அவர் குறிக்கின்றார். கடவுள் ஒரு படைப்பியற் கலைஞர்!" எனப் பேரறிஞர் **திரு. எஸ். இராதாகிருஷ்ணன்** அவர்கள் குறிப்பிடுகின்றார்.

3. "நடராஜ வடிவம் பற்றிய கருத்துருவாக்கம், இந்திய மக்களின் பேரறிவின் பெருவிளைவாய்ப் பல நலங்கள் பொதிந்து ஒளிர்வதாகும். கலையியலும் அறிவியலும், தத்துவமும் சமயமும் ஒருங்கே கலந்து இயைந்ததன் பயன்தான், அத் திருவுருவம்! உண்மை என்பது வேற்றுமையில் ஒற்றுமை காண்பதேயாகுமாயின், நடராஜ வடிவத்தைக் காட்டிலும், ஒற்றுமையும் வேற்றுமையும் ஒருங்கே கலந்த சிறந்த நல்ல இணைப்பு, வேறு எதுவுமே இல்லை. எல்லாக் காலமும் இடமும், எல்லா இயக்கமும் முடக்கமும், அவனிடத்திலேயே அடங்கிக் கிடக்கின்றன!" என்று, திரு. எஸ். வி. இராமமூர்த்தி என்னும் சீரிய அறிஞர் கூறுகின்றார்.

4. சுவாமி விவேகாநந்தர் அவர்களின் மாணவர்கள் பலருள் தலைசிறந்த ஒருவரும், 'பிரபுத்த பாரதம்' என்னும் ஆங்கில இதழின் ஆசிரியருமாக விளங்கியிருந்த திரு. **பி. ஆர். இராஜம் ஐயர்** என்னும் பெருந்தகையார், "மனித வடிவில் அமைந்த கடவுளின் திருவடிவங்கள் அனைத்தினிலும், இதுகாறும் மனிதன் அறிந்தனவற்றுள், நடராஜ வடிவம் மிகவும் சிறந்த தொன்றாகும். ஏனைப் பிற தலங்களில் எல்லாம் எழுந்தருளச் செய்யப் பெற்றுள்ள நடராஜர் திரு

---

1. It *may not* be out of place to call attention to the grandeur of this conception itself as a synthesis of **Science, religion, and art.**

How amazing the range of thought and sympathy of those rishi-artists who first conceived such a type as this, affording an image of reality, a key to the complex tissue of life, a theory of nature, not merely satisfactory *to a single* clique or race, nor acceptable to the thinkers of one century only, but **Universal in its appeal** to the philosopher, the lover and the artist of all ages and all Countries.

No artist of today, however great, could more exactly or more wisely create an image of that Energy *which* science must postulate behind all phenomena This is poetry; but none the less, the truest science.

It is not strange that the figure of Nataraja has Commanded the adoration of so many generations past: familiar with all scepticisms,, expert in tracing all beliefs to primitive superstitions,...we are worshippers of Nataraja still.

— **Dr. Ananda Coomaraswamy,**
Siddhanta Dipika, Vol. XIII.

2. "Nataraja *is the* manifestation of the Lord of the Cosmos. He is the **perfect image** of **becoming** as distinct from **being.** He symbolizes rhythm, action, movement. God is a **creator-artist".**

— **Dr. S. Radhakrishnan,**
Occasional Speeches and Writings, P-130.

3. "The Conception of Nataraja is the **most Comprehensive** Conception of Indian intellect. It is a synthesis of art and Science, philosophy and religion. If reality is unity in diversity, there is no finer and richer synthesis of unity and diversity than Nataraja. In Him are Compressed all spaces, all times, all the flow *of life* and all *the immobility of existence*"

— **Sri. S. V. Ramamurthy,**
Science and Spirit, p. 106

வுருவப் படிமைகள் எல்லாவற்றிற்கும், மூல முதற் படிமையாகத் திகழ்வதாய்ச் சிதம்பரத்தில் விளங்கும் நடராஜர் திருவுருவப் படிவமே, நாம் அறிந்தன வற்றுள் மிகவும் தலைசிறந்ததாய்ப் பெரிதும் உள்ளெழுச்சி யின்பவுணர்வினை ஊட்டுந் தகையதாகும். வெறும் கலைநோக்கு ஒன்று மட்டுமே கொண்டு ஆராய்ந்தாலும் கூட, மிகவும் திருத்தமான - உயிர்த் தன்மை யுடைய - கவர்ச்சி நிறைந்த இத் திருவுருவினைப்போன்று, வேறொரு படிமத்தினைக் காண்டல் அரிது" எனக் கட்டுரைத்துப் போற்றுகின்றார்.

**தத்துவ நுட்பங்கள்:**

நடராஜ வடிவம் கலைநலம் சிறந்து கவர்ச்சி மிக்குத் திகழ்வது! அதன் ஒவ்வொரு பகுதியும் கவின் மிக்குப் பலதத்துவ நுட்பங்களை உள்ளடக்கிக் கொண்டு விளங்குகின்றது. (5)

அத்திருவுருவம் பரந்த திருமுக மண்டலம், பனித்த சடை, தரித்த கங்கையும் பிறையும்; குனித்த புருவம், நெற்றிக் கண், கொவ்வைச் செவ்வாய், குமிண் சிரிப்பு, நீலகண்டம், பால் வெண் நீறு, ஒரு கையில் உடுக்கை, ஒரு கையில் நெருப்பு, ஒன்று அமைத்த கரம், மற்றொன்று வீசிய கரம், புலித்தோல் ஆடை, பாம்பு அணிகள், எடுத்த திருவடி, ஊன்றிய திருவடி ஆகிய பலவற்றைக் கொண்டு அழகுற மிளிர்கின்றது.

**1. பரந்த திருமுகமண்டலம்:**

இறைவனின் தலைமை நிலையும், எல்லையில்லா அழகும், இனிய தண்ணளித்திறனும் உணர்த்துகின்றது.

**2. பனித்த சடை:**

'நுண்சிகை ஞானமாம்,' எனத் திருமூலர், திருமந்திரம் கூறுமாறு ஞானச் சிறப்பையும். 'சைவம் விட்டிட்ட சடைகளும்' எனத் திருவிசைப்பாடல் கூறு தற்கேற்பச் சிவநெறிக்குரிய தவவொழுக்கச் சிறப்பையும் குறிக்கின்றது.

**3. கங்கையைத் தரித்தல்:**

'நில்லாத நீர் சடைமேல் நிற்பித்தான்' என அப்பர் பாடுதல்போல, இறைவனது பேராற்றலையும், வேகங் கெடுத்தாளும் வித்தகத்தையும் விளக்குகின்றது.

**4. பிறையணிதல்:**

தன்னைச் சரண் அடைந்தவர்களைத் தாங்கித் தாழ்வு நீக்கிப் பாதுகாக்கும் வள்ளல் என்று அறிவிக்கின்றது.

**5. குனித்த புருவம்:**

புருவத்தை வளைத்தல் நெறித்தல் முதலியன, பரதக்கலை வல்லவர்கள் தம் குறிப்புக்களை யுணர்த்தும் மெய்ப்பாட்டு வகைகள் ஆகும். தன்பாற் போந்து குறையிரந்து முறையிடும் அடியார்களின் விண்ணப்பங்களைக் கூர்ந்து நோக்கி ஊன்றிக் கேட்டருளும் கருணைத் திறம் காட்டும்.

**6. கொவ்வைசுச் செவ்வாயிற் குமிண் சிரிப்பு:**

தன்பக்கல் போந்து அடைக்கலம் புகுபவர்களை அருளுடன் வரவேற்று, அவர்கள் செய்த பிழைகளை மன்னித்து, அவர்களுக்கு வாழ்வளித்து மகிழ்ச்சி விளைவிக்கும் மாட்சிமை யுணர்த்தும்.

சென்று தொழுமின்கள் தில்லையுள்
சிற்றம்பலத்து நட்டம்,
**என்று வந்தாய்?** என்னும்
எம்பெருமான்றன் திருக்குறிப்பே

4. "Of all the anthropomorphic representations of the deity, yet known to man, that **of Nataraja** is one of the **very best** and the image at **Chidambaram**, which is the prototype of all similar images elsewhere, is certainly one of the **most inspiring** figures that we have known. Even considered as purely a work of art, there are a few images more **faultless**, more **life-like** and more **charming**."

— **B. R. Rajam Iyer,**
Rambles in Vedanta, p. 511.

5. "Every part of such an image as this is directly expressive, not of any mere superstition or dogma, but of **evident facts**... A great motif in religion or art, any great symbol, becomes all things to all men: age after age it yields to men such treasure as they find in their own hearts..."

—Dr. Ananda coomaraswamy.

**7. பவளமேனி :**

பவளம்போற் சிவந்த மேனி, தீவண்ணன் ஆகிய இறைவன் நெருப்புப் போல் பவன் என்று நினைப்பிக்கும். நெருப்பானது தன்பால் எய்தும் பொருள்களை எல்லாம் தூய்மைப் படுத்திப் புனிதம் உறுவிக்கும். அதுபோல இறைவனும் தன்பால் அன்பு செய்வார் மாசுகளை யெல்லாம் போக்கித் தூய்மையாக்கி அருள் புரிதலைப் புலப்படுத்தும்.

**8. பால் வெண் நீறு :**

எல்லாப் பொருள்களும் அழிந்து, இறுதியில் நீறு ஆகும். நீறு மற்றொன்றாக மாறி அழியாது. ஆதலின் திருநீறு அழிவிலாத் தன்மையையும், தூய இயல்பினையும் காட்டும். இறைவன் "தொழுதெழுவார் வினைவளம் நீறெழ நீறு அணிகின்றான்." அவன் செந்நிற மேனியில் வெண்ணீறு" அணியும் கோலம், எவர் நெஞ்சையும் கவர்ந்து பிணிக்கவல்ல பெற்றிமையினைத் தெற்றெனத் தெருட்டும்.

**9. நெற்றிக் கண் :**

"நுதல்விழி நாட்டத்து இறையோன்," "நெற்றித் தனிக்கண் ஒருத்தன்" மத்தகஞ்சேர் தனி நோக்கினன்" "கண்ணுதலான்" என்று சான்றோர்கள் போற்றும் நிலையிற் சிவபிரானுக்குரிய சிறப்பு அடையாளம்.

**10. நீலகண்டம் :**

'விண்ணோர் அமுது உண்டும் சாவ, ஒருவரும் உண்ணாத நஞ்சு உண்டும், இருந்து அருள் செய்யும் பெருந்தகை ஆகிய இறைவனின் நயத்தக்க நனி நாகரிக நலனைப் புலப்படுத்தும்.

**11. உடுக்கை :**

'எண்டோள் வீசி நின்றாடும் பிரான்' என்றவாறு நடராஜ வடிவத்திற்கு எட்டும், அதற்கும் மேற்பட்டும் கைகள் அமைக்கப்படுதல் உண்டு. எனினும், பொதுவாக நான்கு கைகள் எங்கும் காணப்படும். அவற்றில் வலக்கை ஒன்றில் உடுக்கை (டமருகம்) ஏந்தி யிருப்பது, ஒலியை எழுப்பி அணுத்துகள்களைத் திரட்டி உலகப் பொருள்களைப் படைக்கும் நோக்குடன் இறைவன் பரநாதத்தைத் தோற்றுவிக்கும் பான்மையினைத் தெளிவிப்பது.

**12. நெருப்பு :**

உலகுயிர்களை படைத்த இறைவன், அவைகள் பிறந்தும் இறந்தும் துயருற்று வருந்தும் இளைப்பினை நீக்கும் பொருட்டுச் செய்யும் அழித்தற்றொழிலுக்கு அடையாளம். "அழிப்பு இளைப்பு ஆற்றல்" என்பது சித்தியார். இடக்கை ஒன்றில் நெருப்பு இருக்கும்.

**13. அமைத்த கை:**

இதனை 'அபயகரம்' எனவும் வழங்குவர். 'நீவிர் அஞ்சற்க! யாம் நும்மைக் காக்கின்றோம்' எனத் தன் அடியவர்களுக்கு ஆறுதல் கூறித் தேற்றும் நிலை. ஆதலின் இவ் வலக்கை காத்தற்றொழிலைக் காட்டும்.

**14. வீசிய கரம் :**

இவ் இடக்கை யானையின் துதிக்கையினைப் போன்று நீண்டு வளைந்து திகழ்தலின் 'கஜஹஸ்தம்' எனவும் வழங்கும். இக் கையின் ஒருவிரல் தூக்கிய திருவடியைக் காட்டிக் கொண்டிருக்கும். 'இந்தத் திருவடியை நம்பித் தொழுக! இஃது உம்மை ஈடேற்றும்' என்பது கருத்து. இக் கருத்தினைக் குமரகுருபரர் பின்வரும் பாடலிற் குறிப்பிட்டிருத்தல் காணலாம்.

'கூடும் கதி; ஒருகாற் கும்பிட்டாற் போது'மென
நாடும் அபிநயத்தை நண்ணிற்றால்!
— ஓடியகட்

காதனர் காண ஒரு கால்காட்டிக் கையமைத்து
காதனர் ஆடும் நடம்.

**15. எடுத்த திருவடி :**

இஃது இறைவனின் இடது திருவடியாகும். எனவே, அஃது அம்மையின் பகுதிக்கு உரியது. அம்மை அருளே உருவமாகத் திகழ்பவள். "அருளது சத்தியாகும் அரன்தனக்கு" என்பது சாத்திரம். "துன்பக் கடலிடைத் தோணித் தொழில் பூண்டு தொண்டர் தம்மை இன்பக்கரை முகந்து ஏற்றும் திறத்தன" என அப்பர் தேவாரம் அறிவிக்குமாறு

போல, பிறவிக் கடலில் விழுந்து தத்தளிக்கும் உயிர்களை அக்கடலினின்று எடுத்து மீட்டுக் காப்பாற்றும் அருளற்றொழிலுக்கு உரியது.

தில்லையுட் சிற்றம்பலத்து நட்டம்
ஆட எடுத்திட்ட பாதம் அன்றோ,
நம்மை ஆட்கொண்டதே !

— திருநாவுக்கரசர்.

## 16. ஊன்றிய திருவடி :

இஃது இறைவனின் வலக்கால், ஆண் பகுதிக்கு உரியது. இது முயலகன் என்பவனை மிதித்து அடக்கும் வகையில், அவன் மீது ஊன்றிய நிலையில் அமைந்திருக்கும். நன்கு மிதித்து நசுக்கி விடாமலும், மிதியாமலே விட்டு விடாமலும், இடைப்பட இறைவன் முயலகன் மீது நிற்கின்றான். இந்நிலைமை, மலத்தை முழுதாக அழித்து விடாமலும், மலத்தால் உயிர்கள் பெரிதும் வருந்தாமலும், வினைப்பயன்களை உயிர்கள் நுகரச் செய்ய இறைவன் இயற்றும் மறைத்தற்றொழிலைக் குறிக்கும்.

தோற்றம் துடியதனில் ; தோயும் திதி அமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் ;

— ஊற்றமாய்.

ஊன்றும் மலர்ப்பதத்தில் உற்றதிரோ தம்;முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு.

## 17. முயலகன் :

இவனைப் பூதம் குறள் அசுரன் அபஸ்மாரன் முதலிய பெயர்களால் நூல்கள் வழங்கும். முயலகன் ஆணவ மலத்திற்கு அறிகுறி. ஆணவமலம் என்றும் அழிவதில்லை. அதுபோலவே முயலகனும் இறைவன் திருவடிக்கீழ் என்றும் விளங்குகின்றான். இறைவனுக்குப் படிநிலையாய் அமைந்து உதவுதல் போல, முயலகன் காணப்படுகின்றான். அதுபோல ஆணவமலமும் உயிர்களின் இறையின்ப நுகர்ச்சிக்கு ஓராற்றாற் காரணமாகின்றது. "இத்தை விளைவித்தல் மலம்" என்பது காண்க. "மாயாதே தன்சத்தி மாய்ந்து" முத்திநிலையில் உயிர்களின்பால் ஆணவ மலம் அடங்கிக் கிடப்பதுபோல, முயலகனும் இறைவனின் திருவடிக்கீழ் "மாயாதே தன் சத்தி மாய்ந்து" கிடக்கின்றான் என்க.

## 18. தெற்கு நோக்குதல் :

எல்லாத் திருக்கோயில்களிலும் நடராஜப் பெருமான் திருவுருவம் தெற்கு நோக்கியே அமைக்கப்பட்டிருத்தல் காணலாம். 'நம்பினவர்க்கு நடராஜன் நம்பாதவர்க்கு எமராஜன்' என வழங்கும் பழமொழிக்கு ஏற்ப, இறைவன் தன்னை வழிபடும் அடியவர்கட்குத் தெற்கேயிருந்து வரும் எமராஜனால் யாதொரு துன்பமும் நேராமற் காத்தற் பொருட்டே, தெற்கு நோக்கி ஆடுகின்றான் என்பர் பெரியோர். திருவிளையாடற் புராணம் இயற்றியருளிய **பரஞ்சோதி முனிவர்**, செந்தமிழ் மொழியின் மீதும், தென்றற் காற்றின் மீதும் உள்ள விருப்பம் காரணமாகத் தெற்கு நோக்கி இறைவன் நடனம் புரிகின்றான் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

கடுக் கவின்பெறு கண்டனும்
தென்றிசை நோக்கி
அடுக்க வந்து உவந்து ஆடுவான்
ஆடலின் இளைப்பு
விடுக்க, ஆரமென் கால் திரு
முகத்திடை வீசி
மடுக்க வும், தமிழ் திருச்செவி
மாந்தவும் அன்றோ ?

## 19. மாதொரு பாகம் நோக்குதல் :

நடராஜ வடிவம் அமைக்கும் சிற்பக் கலைஞர்கள், அதன் முகமானது சற்றுச் சாய்ந்து அருகே நிற்கும் சிவகாமி அம்மையை நோக்கி ஆடுவது போலத் திருவுருவம் அமைப்பார்கள். இறைவன் அங்ஙனம் அம்பிகையை நோக்கி ஆடுதலைச் சேக்கிழார் சுவாமிகளும்,

"மாதொரு பாகம் நோக்கி
மன்னுசிற் றம்ப லத்தே
ஆதியும் முடிவும் இல்லா
அற்புதத் தனிக்கூத் தாடும்
நாதனார் கழல்கள் ....... "

— பெரியபுராணம்

CONNEMARA PUBLIC LIBRARY
7 - AUG 1965



அன்பளிப்பு: திருவாவடுதுறை ஆதீனம்

என அருளிச் செய்திருக்கக் காண்கின்றோம். இங்ஙனம் அம்பிகையை நோக்கிய இறைவன் திருநடம் புரியும் இயல்பு குறித்துக் **குமர குருபரர்** அழகுற விளக்கியருள்கின்றார். குழந்தையின் குடர் மருந்தைச் செறுக்கும் ஆற்றல் உடையதன்று என உணர்ந்து, ஒரு தாயானவள் அம் மருந்தினைத் தான் உண்டு, அம் மருந்தின் பயனைத் தன் பாலின் வழியாக அக் குழந்தை பெறும்படி செய்து, அதன் நோய் நீங்குமாறு செய்வித்தல் போல, அம்பிகை நடராசப் பெருமானின் திருநடனத்தைத் தான் தரிசித்து, அதன் பயனை உயிர்கள் அடையும்படி செய்விக்கின்றாள்.

"பாலுண் குழவி பசுங்குடர் பொறாதென
நோயுண் மருந்து தாய் உண் டாங்கு,
மன்னுயிர்த் தொகுதிக்கு இன்னருள் கிடைப்ப
வையம் ஈன் றளித்த தெய்வக் கற்பின்
அருள்சூற் கொண்ட ஐயரித் தடங்கண்
திருமாண் சாயல் திருந்திழை காணச்
சிற்சபை பொலியத் திருநடம் புரியும்
அற்புதக் கூத்தன் ......"

— குமர குருபரர்

### திருநடனச் சிறப்பு :

இறைவன் கலைகளின் முதல்வன் ; கலையுருவினன் ; கலைகள் அவனிடமிருந்தே தோன்றுகின்றன. இறைவன் ஒரு சிறந்த **பெருங் கலைஞன்** என்பதையே நடராஜ வடிவம் நலமுற உணர்த்துகின்றது. 'மனிதன் பேசத் தொடங்கும் முன்னரே பாடத் தலைப்பட்டான் ; பாடுவதற்கும் முன்னரே ஆடக் கற்றுக் கொண்டு விட்டான்' என ஆராய்ச்சியாளர்கள் கூறுவர். அம்முறையில் நோக்கினால், எல்லாக் கலைகளுக்கும் முற்பட்டுப் பழமையும் பெருமையும் முதன்மையும் மிக்கதாக விளங்கும் கலை, நடனக்கலையே என்பது தெளிவாம்.

இத்தகைய நடனக் கலையின் தெய்வமாக அமைந்து, அண்ட வெளியினையே நடன மேடையாகக் கொண்டு, தானே காண்பவனும் நடிப்பவனுமாக நின்று, பலவேறு வகையான நடனத் திறங்களை இறைவன் செய்தருளுகின்றான். "ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே" என்றபடி வான் வெளியில் கோள்களும் (Planets) மீன்களும் (stars) முதலிய அண்ட கோடிகள் யாவும் அசைவுற்று இயங்கும் பொருட்டு, இறைவன் தான் அசைந்து யாவற்றையும் இயக்குவிக்கின்றான்.

மேலும் தில்லைச் சிதம்பரத்தில் இறைவன் இத்திரு நடனம் இயற்றுதற்குக் காரணம், அஃது இவ்வுலகின் நடுவிடமாக இருத்தலேயாம்.

"விண்ணுக்கும் மேல்வியன் பாதலக்கீழ்
விரிநீர் உடுத்த
மண்ணுக்கு நாப்பண் நயந்து
தென்தில்லை நின்றோன்"

— திருக்கோவையார்

என மணிவாசகர் கூறுகின்றார். இவ்வாறே திருமந்திரம், கோயிற் புராணம், திருவாதவூரடிகள் புராணம் முதலியனவும் கூறுதல் காணலாம்.

இங்ஙனம் இறைவன் நடனம் புரிவது, உயிர்களின் நலங் கருதிப் படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் என்னும் ஐந்தொழில்களையும் இயற்றுதற் பொருட்டேயாகும். இறைவன் ஐந்தொழில் இயற்றும் திறனை நடராஜ வடிவம் உணர்த்துதலைக் குமரகுருபர சுவாமிகள் அழகுறக் குறிப்பிடுகின்றார்.

பூமலி கற்பகப் புத்தேள் வைப்பும்
நாமநீர் வரைப்பின் நானில வளாகமும்
ஏனைப் புவனமும் எண்ணீங்கு உயிரும்
தானே வகுத்ததுன் தமருகக் கரமே ;
தனித்தனி வகுத்த சராசரப் பகுதி
அனைத்தையும் காப்பதுன்
அமைத்தபொற் கரமே;
தோற்றுபு நின்றஅத் தொல்லுலகு
அடங்கலும்
ஆற்றுவது ஆரழல் வைத்ததோர் கரமே;

ஈட்டிய வினைப்பயன் எவற்றையும் மறைத்து நின்று
ஊட்டுவது ஆகும் நின் ஊன்றிய பதமே;
அடுத்தஇன் னுயிர்கட்கு அளவில்பே ரின்பம்
கொடுப்பது முதல்வ! நின் குஞ்சித பதமே!
இத்தொழில் ஐந்தும்நின் மெய்த்தொழில்...

—சிதம்பர மும்மணிக் கோவை.

## தாண்டவங்கள்

இறைவன் பரதக்கலைநூலை அருளி, அதன் விளக்கமாகச் செய்தருளிய 108 வகை நடனங்கள், சிதம்பரம் கோயிற் கோபுரத்தின்கண் சிறந்த சிற்பங்களாக வடிக்கப் பெற்றுள்ளன. அவற்றுள் பின் வருபவை ஐந்தொழில் நிகழ்த்துதற்குரிய தாண்டவங்கள் ஆகும்.

1. முனிதாண்டவம்—படைத்தல்
2. கௌரி தாண்டவம்—காத்தல்

   சந்தியா தாண்டவம்
   பிரதோஷ நடனம்...

3. உருத்திர தாண்டவம்—அழித்தல்
4. திரிபுர தாண்டவம்—மறைத்தல்
5. ஊர்த்துவ தாண்டவம்—அருளல்.

இவ்வாறு இறைவன் இயற்றும் திரு நடனங்களுக்காக மிகவும் சிறப்பும் புகழும் பெற்றுத் திகழும் தலங்கள் பின் வருவன ஆகும்.

| | தலம் | அம்பலம் (சபை) | தாண்டவம் |
|---|---|---|---|
| 1. | தில்லை | பொன் னம்பலம் | ஆனந்த தாண்டவம் |
| 2. | மதுரை | வெள்ளி யம்பலம் | கௌரி தாண்டவம் |
| 3. | திருக்குற்றாலம் | சித்திர சபை | திரிபுர தாண்டவம் |
| 4. | திருவாலங்காடு | இரத்தின சபை | காளி தாண்டவம் |
| 5. | திருநெல்வேலி | தாமிர சபை | முனிதாண் டவம். |

## சைவ சித்தாந்தம்;

நடராஜ வடிவம் பற்றிய பல தத்துவ நுட்பங்களைக் குறித்துச் சைவ சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கனுள் ஒன்றும் திருவதிகை **மனவாசகங் கடந்தார்** என்பார் இயற்றியதும் ஆகிய ''உண்மை விளக்கம்'' என்னும் உயரிய நூல், பின் வருமாறு அழகுற உணர்த்துகின்றது.

1. இறைவனின் உடுக்கையால் **ஆக்கல்;** அமைத்த கையாற் **காத்தல்;** ஏந்திய நெருப்பினால் **அழித்தல்;** ஊன்றிய திருவடியால் **மறைத்தல்** (திரோதம்;) எடுத்த திருவடியால் **அருளால்** (முத்தி, அனுக்கிரகம்) ஆகிய ஐந்து தொழில்கள் நடைபெறுகின்றன.

2. இறைவன் தனது துடியைக் கொட்டுவதால் ஆன்மாக்களின் மாயையினை உதறுகின்றான்; ஏந்திய நெருப்பினால் கன்மமலத்தினைச் சுடுகின்றான்; ஊன்றிய திருவடியால் ஆணவ மலத்தினை அழுத்தித் தேய்விக்கின்றான்; தூக்கிய திருவடியால் உயிர்களைப் பிறவிக் கடலினின்று எடுத்து இன்பக் கடலில் திளைக்கச் செய்கின்றான்; இத்தகைய திரு நடனத்தைக் கண்டு விரும்பித் தொழுபவர்களுக்குப் பிறவித் துயர் நீங்கும்.

மாயை தனை உதறி, வல்வினையைச் சுட்டு, மலம்
சாய அமுக்கி, அருள் தான்எடுத்து,—நேயத்தால்
ஆனந்த வாரிதியில் ஆன்மாவைத் தான் அழுத்தல்
தான் எந்தை யார்பரதம் தான்

3. இறைவன் ஐந்தொழிற்றிருக்கூத்து இயற்றுங்கால், அவனது திருமேனி ஐந்தெழுத்தினாலேயே அமைகின்றது. இறைவன் ''மந்திர சொரூபி'' யாதலின், அவன்றன் திருவுருவம் திருவைந்தெழுத்து மந்திரத்தினாலேயே அமைவதாகின்றது. திருவடியில் **ந;** வயிற்றில் **ம;** தோளில் **சி;** முகத்தில் **வ;** திருமுடியில் **ய.** இவ்வமைப்பு ''தூல பஞ்சாக்கரம்'' எனவும், ''இலயாங்கம்'' எனவும் கூறப்படும்.

4. இனி 'சிவயநம' என்பது சூக்குமப் பஞ்சாக்கரம் என வழங்கும். அது நடராஜ வடிவத்தில் பின் வருமாறு அமைந்த

விளங்குகின்றது! துடியில் சி; வீசும் கரத்தில் வ; அபயகரத்தில் ய; ஏந்துகின்ற நெருப்பில் ந; அடிக்கீழ் முயலகனில் ம. இவ்வமைப்பு 'போகாங்கம்' எனப்படும். பிற திருவுருவங்களிற் போலத் தனியே பிரித்தெடுக்கக் கூடிய நிலையில் இல்லாமல், நடராஜ வடிவத்திற் பிரிவற இயைந்து கூடியே இருக்கும் **திருவாசி**யானது **பிரணவம்** ஆகிய ஓங்காரத்தையும். அத்திருவாசியின் சுடர்கள் 51 எழுத்துக்களையும் சுட்டுகின்றன.

### அண்டமும் பிண்டமும் :

இனி வேறு பலவும் ஈண்டு எண்ணியுணர்தற்கு உரியனவாக உள்ளன. உலகம் ஆகிய அண்டம் (Macrocosm) அமைந்திருக்குமாறு போலவே, நம் உடம்பு ஆகிய பிண்டம் (Microcosm) அமைந்துள்ளது. இறைவன் அண்ட வெளியில் திருநடனம் புரிதல் போலவே, நம் உடம்பினுள்ளே பிண்டத்தின் கண்ணும் நடனம் புரிந்தருள்கின்றான். அண்டவெளி நடனம் தில்லைச் சிதம்பரத்தில் நிகழ்கின்றது. பிண்டத்தினுள் உடம்பின் கண்ணே நிகழும் நடனம் நம்முடைய இருதயத்தில் நடைபெறுகின்றது. அண்டத்துக்குச் சிதம்பரம் போலப் பிண்டத்துக்கு இருதயம் ஆகிய நெஞ்சப்பை (Heart) இலங்குகின்றது. இருதயத்தின் அசைவும் இயக்கமும் நின்று விட்டால், உடல் செயலற்றுப் பிணம் ஆகும். அவ்வாறே தில்லைச் சிதம்பரத்தில் இறைவனின் திருநடனம் நிகழாதொழியின், அண்டங்கள் அசைவற்று இயங்காமல் நின்று அழிந்தொழிந்து போகும்.

### சிதம்பரம் :

சிதம்பரம் கோயிலமைப்பானது பல தத்துவ நுட்பங்களை உட்கொண்டுள்ளது. நான்கு கோபுரங்கள், நான்கு வேதங்கள். ஆயிரக்கால் மண்டபம், சஹஸ்ரார கமலம் என யோகிகள் உணரும் ஆயிரம் இதழ்த் தாமரை மலர். அடுத்துள்ள சிவகங்கைத் தீர்த்தம், யோகிகளுக்குச் சஹஸ்ரார கமலத்தினின்று ஊற்றெடுத்துப் பெருகும் அமுத வாவி. சந்நிதியின் முன்புள்ள 5 படிகள், திருவைந்தெழுத்துக்கள். 96 பலகணிகள், 96 தத்துவங்கள். அங்குள்ள 4 தம்பங்கள், நான்மறைத் தெய்வங்கள். 28, கம்பங்கள், 28 ஆகமங்கள். சிதம்பர ரகசியம் அருவுருவம். பிரணவ பீடம். விமானத்தின் மேலுள்ள 9 கலசங்கள், நவ சத்திகள். 64 கழிகள், 64 கலைகள். அங்கு வேயப் பெற்றிருக்கும் 21600 பொன் ஓடுகள், நாம் நாள்தோறும் சுவாசிக்கும் 21600 மூச்சுகள். அப்பொன்னோடுகளை இணைத்துள்ள 72000 ஆணிகள் நம் உடலில் இருக்கும் 72000 நாடி நரம்புகள். கனகசபை முன்பு அமைந்துள்ள 18 கம்பங்கள், பதினெண் புராணங்கள். நமக்கு ஐந்து வகையான உடல்கள் உண்டு. அதனைக் குறிக்கும் முறையிற் சிதம்பரத்தில் ஐந்து சபைகள் அமைந்திருக்கின்றன.

1. இராஜ சபை (ஆயிரக்கால் மண்டபம்) — தூலவுடல்,
2. தேவசபை (பேரம்பலம்) — சூக்குமவுடல்.
3. நிருத்த சபை — குணவுடல்.
4. கனகசபை — கஞ்சுக வுடல்.
5. சிற்சபை — காரணவுடல்.

### மலர்மிசை ஏகினான் :

சிதம்பரம் கோயில் இங்ஙனம் வியக்கத்தக்க முறையில் அமைந்திருப்பது போலவே, நம் இருதயத்தின் இயக்கமும் அமைப்பும் கூட மிகவும் வியக்கத்தக்க நிலையினதாக விளங்குகின்றது. இருதயம் ஓய்வு ஒழிவு இன்றி இடைவிடாது இயங்கித் துடித்துக் கொண்டே இருக்கின்றது. இருதயத்தின் துடிப்பினால்தான் இரத்தமானது உடம்பு முழுவதும் சென்று பரவிக் கொண்டும், உடனுக்குடன் மாசு நீங்கித் தூய்மையுற்றுக் கொண்டும் வருகின்றது. ஒவ்வொரு நிமிடமும், 12000 மைல் நீளமுடைய நாளங்களின் வழியாக உடலில் இரத்தம் பரவவும், மீண்டும் தன்பால் திரும்பி வந்து சேரவும் ஏற்றபடி, இருதயம் சிறிதும் அயராமல் இயங்கிக் கொண்டே இருக்கின்றது. 24 மணி நேரத்தில் 10000 லிட்டர் அளவு இரத்தத்தைத் தன்னிடமிருந்து வெளியேற்றியும்,

உள்ளிழுத்தும் ஒருபெரும் இயக்க நிலையம் (Pumping station) போலப் பணிபுரிந்து வருகின்றது.

வியப்பை விளைவிக்கும் இத்தகைய இருதயத்தையே சிதம்பரம் எனவும், அங்குள்ள ஒருபெருந் தெய்வ ஆற்றலையே கூத்தப்பிரான் எனவும்; அதன் இடைவிடாத் துடிப்பையே நடனம் எனவும் கருதியுணர்ந்து பெரியோர்கள் போற்றியுள்ளனர். ஆசிரியர் **திருவள்ளுவர்**,

*" மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்*
*நிலமிசை நீடுவாழ் வார் "*

என்னும் திருக்குறளில் **" மலர்மிசை ஏகினான் "** என்றது, அன்பர்களின் உள்ளம் (நெஞ்சப்பை) ஆகிய தாமரை மலரின்கண் எழுந்தருளி இங்ஙனம் திருக்கூத்து இயற்றும் திறம் குறித்தே யாகும் என்று கொள்ளுதல், இழுக்காகாது.

1. தாமரை முகிழ் போன்ற
   நெஞ்சப்பை (இருதயம்) — ஓங்காரம்
2. நெஞ்சப்பையில்
   விளங்கும் மின்னொளி — இறைவன்
3. மின்னொளியின் அசைவு — திருநடனம்
4. நெஞ்சப்பையில் விளங்கும்
   மூல முதல் ஒலி — திருவடிச் சிலம்பொலி
5. நெஞ்சப்பையின்
   சுற்றுவடிவு — திருவாசியும், அதன்
   சுடரொளியும்

**முடிவுரை :**

இங்ஙன மெல்லாம் 'சிந்திப்பரியன, சிந்திப்பவர்க்குச் சிறந்து செந்தேன் முந்திப் பொழிவன ' என்னும் நிலையில், பற்பல உயர்ந்த தத்துவ நுட்பங்களை யுணர்த்தி நிற்கும் நடராஜ வடிவத்தின் மாட்சிமை, அளவிட்டு உரைப்பரிது !

உலகமே உருவம் ஆக,
யோனிகள் உறுப்ப தாக,
இலகுபேர் இச்சா ஞானக்
கிரியையுட் கரணம் ஆக,
அலகிலா உயிர்ப்பு லன்கட்கு
அறிவினை ஆக்கி, ஐந்து
கலமிகு தொழில்க ளோடும்
நாடகம் நடிப்பன் நாதன் !

— சிவஞான சித்தியார்

என அருள் நந்தி சிவாசாரியார் கூறுமாறுபோல, உலகமே உருவமாகவும், பலவகைப் பிறப்பு வகைகளே உறுப்பாகவும், இச்சை ஞானம் கிரியை என்பனவே உட்கருவிகள் ஆகவும் கொண்டு, ஆருயிர்களுக் கெல்லாம் அறிவினை நெறி முறையே வளருமாறு செய்து, ஐந்தொழில்களை இயற்றி வரும் அருட்பெருந் தெய்வம் ஆகிய நடராஜப் பெருமானின் திருவடிகளை இடைவிடாது அன்புடன் வழிபட்டு, நாம் அனைவரும் நலம்பலவும் பெற்றுய்வோமாக !

— ஆசிரியர்.

---

## கோயில் நிகழ்ச்சிகள்.

| | | |
|---|---|---|
| திருமயிலை | : | கபாலீஸ்வரர் கோயில்: தேவார பாடசாலைக் கட்டிடத் திறப்பு விழா தேவார ஓதுவார் பயிற்சிப் பள்ளித் தொடக்க விழா. (9-7-65) |
| பழநி | : | தண்டாயுதபாணி சுவாமி கோயில், கலைக்கல்லூரிக் கட்டிடத் திறப்பு விழா; (17-7-65) |
| திருத்தணிகை | : | தேவஸ்தான யாத்திரிகர் விடுதித் திறப்பு விழா (20-7-65); ஆடிக் கிருத்திகை விழா (18-25-7-65) |
| புரசைவாக்கம் | : | கங்காதரேசுவரர் கோயில் திருக்குளத் திருப்பணி விழா (14-7-65). |
| திருப்போரூர் | : | ஆடிக் கிருத்திகை விழா. |

# 'தெய்வம் என்பதோர் சித்தம்'

மக்களாகப் பிறந்தோர் அடைதற்குரிய பேறுகள் பல. அவைகளுள் 'தெய்வம் ஒன்று உண்டு' என்னும் நம்பிக்கையை யுடைய மனத்தைப் பெறுதலும் ஒன்றாகும். குருடனுக்குக் கண்கள் உள்ளன, ஆயினும் பார்வையில்லை. செவிடனுக்குக் காதுகள் இருக்கின்றன, ஆயினும் கேட்குந் திறன் இல்லை. ஊமைக்கு வாய் உள்ளது, எனினும் பேசும் ஆற்றலைப் பெறவில்லை. இவ்வாற்றால், குருடும் செவிடும் ஊமையும் எங்ஙனம் குறைபாடு உடையனவாகக் கருதப்படுமோ, அங்ஙனமே கடவுள் நம்பிக்கை வாய்க்கப் பெறாத மனமும் குறைபாடு உடையதாகக் கொள்ளப் படுதல் பொருந்தும்.

இக் கருத்தினையே ஆசிரியர் திருவள்ளுவர் பெருமான், தமது ஒப்புயர் வற்ற திருக்குறள் நூலில்,

"கோளில் பொறியிற் குணமிலவே ;
எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை"

எனச் சிறப்பாகத் தலையின்மீது வைத்துக் கூறி வற்புறுத்தினர். இறைவனை வணங்காத தலைகள் பயனில எனவே, இனம் பற்றி வாழ்த்தாத நாவும், தொழாத கைகளும், நம்பாத மனமும் பிறவுமெல்லாங் கூட , ஒரு சிறிதும் பயனில்லாதனவாகும் என்பது சொல்லாமலே, உபலக்கண முறையாற் பெறப்படும். கடவுள் உணர்ச்சி கலக்கப் பெறாத வாழ்க்கையினை அஃது எத்தணைச் சிறப்புக்கள் அமைந்து விளங்குமாயினும், "**நிரம்பா வாழ்க்கை**" என்று **பரணர்** என்னும் சங்ககாலப் புலவர் குறிப்பிடுகின்றார் (அகநானூறு, 125).

'சிறப்பில் சிதடும் உறுப்பில் பிண்டமும், கூனும் குறளும் ஊமும் செவிடும்' ஆகிய குறைபாடுகள் நீங்கி, 'உருவின் மிக்கதோர் உடம்பது பெறுதல்' எங்ஙனம் அரிதோ, அங்ஙனமே 'தெய்வம் ஒன்று உண்டு' என்னும் நம்பிக்கை இயல்பாகவே அமையப் பெற்ற **மனம்** உடையவர்களாகப் பிறத்தலும், புண்ணியத்தின் பாலது ஆகும். அதுபற்றியே **மாணிக்க வாசகப்** பெருமான், மனிதன் ஓர் உயர் நிலை எய்தி உய்தி பெறுவதற்கு முன்னர் இவ்வுலகியல் வாழ்வில் தப்பிக் கடந்து செல்ல வேண்டியிருக்கின்ற பலவேறு தடைகளையும் படி நிலைகளையும் பற்றிக் குறிப்பிடும் பொழுது,

"ஆண்டுகள் தோறும் அடைந்த அக் காலை
ஈண்டியும் இருத்தியும் எனைப்பல
பிழைத்தும் ;

காலை மலமொடு கடும்பகற் பசிநிசி
வேலை நித்திரை யாத்திரை பிழைத்தும் ;

கருங்குழற் செவ்வாய் வெண்நகைக் கார்மயில்
ஒருங்கிய சாயல் நெருங்கியுண் மதர்த்துக்

கச்சற நிமிர்ந்து கதிர்த்துமுன் பணைத்து
எய்த்திடை வருந்த எழுந்து புடைபரந்து

ஈர்க்கிடை போகா இளமுலை மாதர்தம்
கூர்த்த நயனக் கொள்ளையிற் பிழைத்தும் ;

பித்த உலகர் பெருந்துறைப் பரப்பினுள்
மத்தக் களிறெனும் அவாவிடைப்
பிழைத்தும் ;

கல்வி என்னும் பல்கடற் பிழைத்தும் ;
செல்வம் என்னும் அல்லலிற் பிழைத்தும் ;

நல்குரவு என்னும் தொல்விடம் பிழைத்தும் ;
புல்வரம்பு ஆய பலதுறை பிழைத்தும் ;

தெய்வம் என்பதோர் சித்தம் உண்டாகி..."

எனப் "போற்றித் திருவகவல்" என்னும் பகுதியில், திருவாசகத்திற் பாடியருளி யிருக்கின்றார்கள். இவ்வாற்றால் 'தெய்வம் என்பதோர் சித்தம்' உண்டாதலின் அருமைப்பாடும், இவ்வுலகியல் வாழ்வின்

நேரும் பலவகை இடர்ப்பாடுகள் ஆகிய படி நிலைகளைக் கடந்து சென்ற வழியே, அத்தகையதோர் அனுபவ வுணர்வின் மனநிலை வந்து வாய்க்கும் என்பதும் தெளிவாம்!

ஒவ்வொரு தனிமனிதனின் வாழ்க்கையிலும், சிலபல நிகழ்ச்சிகளோ அனுபவங்களோ இடர்ப்பாடுகளோ ஏற்பட்டு, எங்ஙனமேனும் சமய உணர்வையும், கடவுள் நம்பிக்கையையும் எழுப்பியே விடுகின்றன. நிலைபேறுடையன போலத் தோன்றும் பொருள்களெல்லாம் முடிவில் நிலைபேறின்றி அழிந்து மறைந்து போதலை நாம் நாடோறும் கண்டு வருகின்றோம். மனிதனின் செருக்கும் பெருமிதமும் முனைப்பும் நாளடைவில் தேய்ந்து மாய்ந்து போகின்றன. எதிர்பாரா நிலையிற் பெருத்த துன்பங்களும் நோய்களும் தொல்லைகளும் நேருங்கால் எல்லாம், மனிதன் தன்னுடைய சிறுமையினை உணரவேண்டியவன் ஆகின்றான். எல்லோரையும் அடக்கி அச்சுறுத்திக் கொடுமைப் படுத்தி, யாவும் தம் மாலேயே நடப்பனவாகக் கருதித் தருக்கிக் களித்து நிற்போரும், பின்னொரு ஞான்று 'அந்தோ வினையே' என்று அழுங்கி வருந்தித் துன்பம் உழக்கக் காண்கின்றோம். 'முடிசார்ந்த மன்னரும் மற்றும் உள்ளோரும் முடிவில் ஒருபிடி சாம்பர்' ஆகியே ஒழிகின்றனர். தன்னுடைய அறிவும் முயற்சியும் ஆற்றலும் பிறவும் ஒரு வரையறைக்கு உட்பட்டனவே என்று உணர்கின்றபோது, வரையறைக்கு உட்படாத பேரறிவும் பேராற்றலும் பேரின்பமும் உடைய முழுமுதற் பெரும் பொருளின் துணையைத் தேடி அடைய, மனிதன் பெரிதும் ஆவலுற்று அலைய வேண்டியவனாகின்றான்.

பரந்துபட்ட இவ்வுலகியல் நிகழ்ச்சிகள் அனைத்தையும் கூர்ந்து நோக்கி ஆராய்ந்து காணுந்தோறும், அவற்றிற்கெல்லாம் மூல முதற் காரணமாக இருந்து இலங்கி வரும் ஒப்புயர்வற்ற முழுமுதற் பெரும் பொருளின் உண்மையினை, யாவரும் இனிது உடன்படவே வேண்டியுள்ளது. இன்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் உரோம நாட்டில் உயிர் வாழ்ந்திருந்த **சிசரோ** என்னும் பெரு நாவலர், "இயற்கைப் பொருள்களின் இடத்தே எல்லாம் மனிதன் தன் அறிவு—ஆராய்ச்சி—ஆற்றல் என்பவற்றாற் செய்து நிறைவேற்ற இயலாத ஏதோ ஓர் அற்புதம் அமைந்து கிடக்கின்றது. அது மனிதனை விடச் சிறந்ததாகவே இருத்தல் வேண்டும். அது கடவுளைத் தவிர வேறு யாதாக இருத்தல் கூடும்?'' என அறைகூவி அறிவுறுத்தியிருப்பது, ஈண்டு நாம் உணர்தற்கு உரியது (*1*).

மேலும் நாம் நினைப்பது ஒன்றாக இருப்ப, நிகழ்வதோ பிறிதொன்றாக முடிகின்றது.

> ஒன்றை நினைப்பின் அதுஒழிந்திட்
> டொன்றாகும்;
> அன்றி அதுவரினும் வந்தெய்தும்;—
> ஒன்றை
> நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்
> எனையாளும் ஈசன் செயல்

என்ற அவ்வைப் பிராட்டியின் அனுபவம் நம்மனோர் அனைவரின் வாழ்க்கையிலும் கூட அவ்வப்போது நேர்கின்றது! எத்தனை உயர்ந்த இன்பங்களை நுகர்வோரும், எவ்வளவு செல்வச் செழிப்பில் திளைப்போரும் கூட, ஒரு காலத்தே அவற்றினை வெறுத்தொதுக்கி இனையதென்று கூற இயலாத வேறேதோ ஒரு பேரானந்தத்தை விழைந்து நின்று, உள்ளம் அமைதி இழப்ப ஏக்கற்று அலமந்து உழலுகின்றனர்! நமக்குத் துணையும் பற்றுக்கோடுமாக நம்மால் நம்பப் பெறுபவர்கள் பலரும் நம்மைக் கைவிட நேரும் நிலையில் "நான் இந்த எட்டாம் **ஹென்றிக்கு** ஊழியம் செய்ததை விட இறைவனுக்கு ஊழியஞ் செய்திருப்பின், அப்பெருமான் என்னை இத் தள்ளாத வயதில் இங்ஙனம்

---

(1) "There is something in the nature of things, which the mind of man, which reason, which human power cannot effect, and certainly that which produces this must be better than man. What this can be but God?"

—**Cicero.**

கை விட்டிருக்க மாட்டான்'' (2) எனக் **கார்டினல் உல்ஸி** என்பார் கதறிப் புலம்பியது போலவே, நாமும் இறைவனின் துணையை எதிர் நோக்கி வருந்திக் கதறி அலறும் நிலையை அடைகின்றோம். இனைய செய்திகள் பலவும் கருதுபவர்களுக்குத் 'தெய்வம் என்பதோர் சித்தம்' உண்டாதல் திண்ணம்.

**சர் சார்லஸ் எலியட்**

என்னும் பேரறிஞர், "யாராவது ஒருவர் கடவுள் இல்லை என்று என்பாற் கூறினால், இறந்தொழியக் கூடிய- பரமாணுவினும் மிகச் சிறிய- ஓர் அற்ப மனிதன், இவ்வுலகின் ஓர் அணுத்துணைப் பரப்பில், ஒரு நொடி நேர அளவு மட்டுமே வாழ்ந்து கொண்டு, அழகும் வியப்பும் ஒழுங்கமைப்பும் நிலைறந்து எல்லையின்றி விரிந்து விளங்கும் பேரண்டத் தொகுதிகளையெல்லாம் கண்டுணர்ந்து வைத்துங் கூட, எவ்வாற்றானும் மெய்ப்பிக்க முடியாத இக் கருத்தை இத்துணை உறுதியுறக் கொள்ளுதல் எவ்வாறு இயலும்? என்றுதான் நான் வினவுகிற்பேன்'' (3) என்று விளம்புகின்றார்.

**கௌண்ட் லியோ டால்ஸ்டாய்**

என்னும் ரஷ்ய நாட்டுப் பெருஞானியானவர், "சமயம் அல்லது கடவுளுணர்ச்சி இன்றி, உள்ளபடியே உண்மையான **ஒழுக்கம்** நிலை பெறாது; எதுபோல எனில், அடியில் வேர் இல்லாமல் மேலே பூக்கள் மலர்தல் இயலாமை போல'' என்றும், "சமயம் இல்லாமல் அறிவுடைய மனிதன் வாழ்தல் முடியாது; அவனுடைய தனிச் சிறப்பான இயற்கைப் பண்பு, காரண காரியத் தன்மைகளை ஆராய்ந்தறியும் திறம்வாய்ந்ததாக அமைந்திருத்தலே அதற்குச் சரியான காரணமாகும்'' (4) என்றும் வலியுறுத்தி மொழிகின்றார்.

பிரஞ்சுப் புரட்சி தோன்றுதற்கு வித்திட்டு வைத்த பேரறிஞர் ஆகிய **வால்டேர்**, தொடக்கத்திற் சமய எதிர்ப்பாளராக இருந்து வந்தாராயினும், நாளடைவில் 'தெய்வம் என்பதோர் சித்தம்' உடையவராக மாறி நின்றார். "கடவுள் என்பவர் இல்லா விட்டாலும் கூட, அவரை உண்டாக்குவது இன்றியமையாததாகும்'' (5) எனத் தம் நூல் ஒன்றில் அவர் எழுதுகின்றார். "கடவுளைத் தொழுது கொண்டும், நண்பர்களை நேசித்துக் கொண்டும், என் பகைவர்களை வெறுக்காமலும், குருட்டு நம்பிக்கைகளை அருவருத்துக் கொண்டும், நான் இறக்கின்றேன். (ஒப்பம்) வால்டேர். பிப்ரவரி 28, 1778'' என்னும் அறிக்கை ஒன்றனைத் தம் செயலரிடம் எழுதியளித்து விட்டு, அவர் உயிர் நீத்தார்.

இன்னோரன்ன சுவைமிகு செய்திகள் பலவும், "தெய்வம் என்பதோர் சித்தம்'' நம்மனோர்க்கு எத்துணை இன்றியமையாதது என்பதனை விளக்க வல்லனவாகும். நாம் அனைவரும் தெய்வம் என்பதோர் சித்தம் உடையவர்களாக விளங்கி, வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து நலம் பெற, இறைவன் திருவருள் துணை புரிவதாக! —ஆசிரியர்

---

(2) "Had I but served God instead of **Henry,** the Eighth, He would not have deserted me like this in my old age".

**—Cardinal Wolsey.**

(3) "If anyone says 'There is no God' I can only ask how a **speck** of a **mortal,** living for a **moment** on an **atom** of an earth, in plain sight of an **infinite universe,** full of beauty, wonder and design, can confidently hold so **improbable** a view.",

**—Sir Charles Eliot.**

(4) "Without religious roots there can be no real sincere **morality,** just as without roots there can be no real flower"

**—Count Leo Tolstoy,**
Essays and Letters, p. 154.

"A rational man cannot live without a religion, precisely because reason is characterstic of his nature."

—Ibid, p. 291

(5) "Even if God did not exist, it would be necessary to invent him."

(6) "I die adoring God, loving my friends, not hating my enemies, and detesting superstition. (signed) voltaire. February, 28,1778."

**—Prof. Will Durant,**
The Story of Philosophy, p.250.

# திருவாய் மொழி

(முன் இதழ்த் தொடர்ச்சி : பக்கம் 429)

**முன்னுரை :**

நம்மாழ்வார் தம்முடைய முதல் திருவாய்மொழியில், இறைவனை எல்லாரினும் உயர்வற **உயர்ந்தவன்** என்றார் ; இரண்டாம் திருவாய்மொழியில், யாவரினும் உயர்ந்தவன் ஆதலால், இறைவன் யாவரானும் **வழிபடத் தக்கவன்** என்றார். இனி இம்மூன்றாம் திருவாய்மொழியில், இறைவன் மிகவும் **எளியவன்** என்கின்றார்.

இறைவன் அறப் பெரியவன் ஆயினும் தன்னைக் காணவேண்டும் ஆசை சிறிதுடையவர்களுக்கும், மிகப் பெரிய அரிய **யானை**யானது இருகை முடவனும் தன் முதுகின் மேல் ஏறிக் கொள்ளலாம் படி பணிந்து படிந்து கொடுத்து உதவுவது போல, தன்னைத் தானே தாழவிட்டுக் கொண்டு அன்பிற்கு எளியவனாகப் போந்து இன்னருள் புரிகிற்பான் என்பது கருத்து.

ஆழ்வார் இறைவனின் பரத்துவத்தை நினைந்தார், ஞான முதிர்ச்சியில் தெளிந்திருந்து பிறர்க்கு உபதேசம் செய்தார் ; பிறகு இறைவனின் **எளிமை**யாகிய சௌலப்பியத்தினை நினைந்தார், அன்பின் முதிர்ச்சியினால் **'எத்திறம்?'** என்று வியந்து, நெஞ்சு இளமனற் பாய்ந்து காதலுற்று மயங்கிக் கிடந்தருள் கின்றார்.

பத்துடை அடியவர்க்கு எளியவன் ;
பிறர்களுக்கு அரிய
வித்தகன் ; மலர்மகள் விரும்புமநம்
அரும்பெறல் அடிகள் ;
மத்துறு கடைவெண்ணெய்க் களவினில்
உரவிடை யாப்புண்டு
எத்திறம் உரலினோடு இணைந்திருந்து
ஏங்கிய எளிவே!

**(பொழிப்புரை)** பக்தியையுடைய அடியார்களுக்கு எளியவனாகவும், அஃது இல்லாத மற்றவர்களுக்கு அரியவனாகவும் விளங்கி, வியக்கத்தக்க குணங்களை யுடையவன் ; தாமரை மலரில் வீற்றிருக்கும் பெரிய பிராட்டியார் விரும்புகின்ற பெறுதற்கரிய நம்முடைய இறைவன் ; மத்தினை உறவித்துக் கடையப்படுகின்ற வெண்ணெயினைக் களவு செய்யுங் காலத்தில், யசோதைப் பிராட்டியால் மார்பிலே கட்டப்பெற்று உரலோடு ஒத்திருந்து ஏங்கிநின்ற எளிமைத் தன்மை எத்தகையது !

**(குறிப்புரை)** எம்பெருமானின் எளிமைத் தன்மை பொதுவாக அவதாரங்களிலும் நன்கினிது விளங்கிப் புலனாகும். ஆதலின் ஈண்டுக் கிருஷ்ணாவதாரத்தில் வெளிப்பட்ட, எம்பெருமானின் எளிமைத் தன்மையை நினைந்து வியந்து உருகுகின்றார்.

**பத்து** - பக்தி. "எட்டினோடு இரண்டு எனும் கயிற்றினால் மனந்தனைக் கட்டி" என வரும் திருச்சந்த விருத்தம் காண்க. 'பத்துடையீர் ஈசன் பழஅடியீர்' எனவும், 'எட்டினோடிரண்டும் அறியேனையே' எனவும் மாணிக்கவாசகர் அருளிச் செய்திருத்தலும் காணலாம். இனி **பற்று'** என்பது 'பத்து' என வந்தது எனவும் சிலர் கொள்வர்.

இறைவனைச் சேரும்போது இன்பமும், பிரியும்போது துன்பமும் அடைதற்குக் காரணமான அன்பு ஆகிய பரபக்தியை யன்றி, இறைவனை விலக்காமையும் பகையாமையுமாகிய அன்பின் தொடக்க நிலையினையே ஈண்டுப் **பக்தி** என்றும், அதுதானே ஒரு பெரும் **உடைமை (செல்வம்)** என்றும் ஆழ்வார் குறிப்பிடுகின்றார்.

**'அடியவர்'** என்று ஆழ்வார் தம் கூற்றுற் கூறினுரல்லர்; ''விண்ணுளாரிலும் சீரியர்'' எனத் திருவிருத்தம் (79) கூறுமாறு போல, தன்பாற் பக்தி செலுத்துகின்றவர்களை நித்திய சூரிகளைக் காட்டிலும் மேலாக நினைத்திருக்கும் இறைவனின் கருத்தை ஓட்டிக் கூறினுர் ஆழ்வார்! நித்திய சூரிகள் முதலினுேர் உள்ள குணத்தை அநுபவித்திருப்பவர்கள், பகவானின் குணம் நிறம் பெறுவது இவர்களின் பக்கலிலேயேயாகும்.

இறைவன் பக்தர்களுக்குத் தன்னையொழிந்த தொன்றைக் கொடுத்து அமையான்; தன்னையே அவர்களுக்குத் தத்தமாகக் கொடுப்பான். பக்தர்களின் பாவத்தைப் போக்குதல், அவர்களுக்குப் புண்ணியத்தைக் கொடுத்தல், அவர்களைத் தன் அருகே அழைத்து இருத்திக் கொள்ளுதல் என்பன மட்டுமேயன்றி, அவர்கள் விரும்பியபடியெல்லாம் செய்து கொள்ளும்படி தான் அவர்களின் வயப்பட்டு அடங்கி ஒழுகுவான். பக்தி செய்பவர்களுக்குத் தன்னை அறிவிலியாக்கிக் கொடுத்து, மேன்மை காட்டி அகலாமல், கழுத்திலே ஓலை கட்டித் ''தூதுபோ'' என்று ஏவல் கொள்ளும் வண்ணம் தன்னைக் கையாளாக்கிக் கொண்டு நிற்பான். இஃது இறைவனின் இயல்பாதலின், **''எளியவன்''** என்றுர்.

இறைவன்பாற் பக்தி செய்யாமல், தாம் செய்யும் கருமங்களை பயன் கொடுப்பனவாக நினைந்து, அவற்றையே மேற்கொண்டு, இறைவனை மறந்து புறக்கணிப்பவர்களைப் **''பிறர்கள்''** என்கின்றுர். இத்தகையவர்களுக்கு எட்டாதவனுய் அப்பாற் பட்டு நிற்பவன் இறைவன் ஆதலின், **''அரியவன்''** என்றுர். யசோதைக்கும் ஆயர்களுக்கும் எளியனுகை இருந்தே, பூதனை சகடாசுரன் முதலியோர்களுக்கு அரியனுக விளங்கினுன். துவாரகையிற் பள்ளி கொண்டிருந்த பொழுது அருச்சுனனும் துரியோதனனும் ஒரு தன்மையே வரினும். அருச்சுனனுக்குத் தன்னைக் கொடுத்துத் துரியோதனனுக்குப் பதரைக் கொடுத்தான். ஆதலின் இங்ஙனம் வியத்தகு பண்பு நலங்களுடைமை கருதி, இறைவனை **''வித்தகன்''** என்றுர்.

பெரிய பிராட்டியார் விரும்பும்படி இருத்தலே அறப்பெரிய இறைவனுக்கு இலக்கணமாதலின், **'மலர்மகள் விரும்பும்** நம் அரும்பெறல் அடிகள்' என்றுர். தான் பிறந்து வளர்ந்து தங்கியிருந்த தாமரையும் அடிக்கொதிப்ப, அதனை விட்டு ''அகலகில்லேன் இறையும்'' என்று வந்து உறையும் மார்பினன் ஆதலின், மலர்மகள் விரும்பும் மாண்பு புலனுகும். நமக்குத் தன் அருளால் எளியனும் அல்லது, இயல்பினுல் அருமையும் பெருமையுமே உடையவன் என்றற்கு **'நம் அரும்பெறல் அடிகள்'** என்றுர்.

வெண்ணெய் கடைந்து கொண்டிருக்கும் போதே பசியராய் இருக்குமவர்கள் சோறு சமையப் பொறுமல் வெந்ததும் வேகாததுமாக வாயில் இடுமாறு போன்று, கடைந்து முடிவதற்குட் பொறுக்காமல் நடுவே களவினுல் அள்ளி அமுது செய்தலின், 'மத்துறு **கடை வெண்ணெய்க்** களவினில்' என்றுர்.

பெரிய பிராட்டியார் தழுவி அணைக்கும் மார்பையன்றே கயிற்றுலே நெருக்கிக் கட்டக் கட்டுண்டான் என்பார் **'உரவிடை யாப்புண்டு'** என்றுர். உரம்—மார்பு. உரம் + இடை; உரவிடை. மிடுக்கையுடைய காளை போன்றவன் கட்டுண்டான் எனினுமாம். உரம்—மிடுக்கு. விடை—காளை. இனி 'உரம்' என்பதனை **உதரம்** என்று சொல்லின் சிதைவாகக் கொண்டு, வயிற்றினிடத்தில் கட்டுண்டு என்று பொருள் கூறலுமாம்.

முன்னம் ஒரு கால் மந்தரமலையைக் கொண்டு கடலிலே நட்டு நெருக்கிக் கடைந்து தேவர்களுக்கு அமுதத்தை எடுத்துக் கொடுத்த பெருந்தோள்களையுடைய வள்ளலேயன்றே. இப்போது ஆயர் சேரியிலே வந்து பிறந்து, வெண்ணெய் களவு காணப் புக்குக் கட்டுண்டும் அடியுண்டும் நிற்கின்றுன் என்று, பெரியவன் தாழ்ச்சி ஆகையாலே ஆழ்வார் பொறுக்க மாட்டாமல் வியந்து உருகுகின்றுர்.

(தொடரும்)

# விடை தெரியுமா?

[அன்பியற் பெருந்தகை ஆகிய நமது அறநிலைய ஆணையர் அவர்கள் விரும்பித் தெரிவித்தபடி, இப்புதிய பகுதி இவ்விதழில் இருந்து தொடங்கப் பெறுகின்றது. இப் பகுதியில் வரும் வினாக்கள், கற்றுணர்ந்து வல்ல அறிஞர்களுக்கு மிகவும் எளியனவும், முன்பே நன்கினிது தெரிந்தனவுமேயாகப் பெரும்பாலும் அமைந்திருத்தல் இயல்பேயாகும். எனினும் சாதாரணப் பொதுமக்கள் பலரும் தெரிந்து கொண்டு மகிழ்தலும் பயன் பெறுதலும் ஆகிய நோக்கம் கொண்டே, இவைகள் இங்குத் தரப் பெறுகின்றன. இவற்றைத் தொடர்ந்து படித்து வருவதனால் "சிறு துளி பெரு வெள்ளம்" என்னும் நிலையில், சமயத்துறையிற் பொதுவாகப் பல துறைச் செய்திகளைப் பற்றிப் படிமுறையே தெரிந்துகொண்டு, மக்கள் அனைவரும் பயன் பெற்று மகிழ்தல் திண்ணம்! வாசகர்கள் பலருக்கும் இப்பகுதி நன்கினிது பயன் படுமாறு அமைவதற்கு இறையருள் துணை புரிவாதாக!

—ஆசிரியர்.]

1. மாமல்லபுரம் கடற்கரைக் கோயிலைக் கட்டிய அரசன் யார்? அவன் கட்டிய வேறு பிற கோயில்கள் யாவை?
2. மூன்றாம் குலோத்துங்கன் என்னும் சோழப் பேரரசன் கட்டிய கோயில் எது? அங்குள்ள சிறப்பு என்ன?
3. சீர்காழிக்குரிய பெயர்கள் எத்தனை? அவைகள் யாவை?
4. "தண்டமிழின் மேலாந் தரம்" எனப் புகழப் பெற்ற சிறந்த தமிழ் நூல்கள் எவை எவை?
5. முயலகன் இல்லாத நடராஜர் உள்ள தலம் யாது? காரணம் என்ன?
6. 'கழறிற் றறிவார்' என்று யாருக்குப் பெயர்? அவருக்கு ஏன் அப்பெயர் வந்தது?
7. பாடியவர் யார்?

   (1) "நன்றியால் வாழ்வது உள்ளம்..."

   திருவள்ளுவர்
   கம்பர்
   சம்பந்தர்
   கபிலர்

   (2) "சொன்னால் விரதமிது ஆகிலும்
   சொல்லுவன் கேண்மினோ"

   கம்பர்
   வில்லிபுத்தூரார்
   நம்மாழ்வார்
   அப்பர்

8. "நான்மறை ஆறங்கங்கள்" எவையெவை?
9. "பெரியாழ்வார்" என்று பெயர் விளங்கக் காரணம் என்ன? அவர்தம் இயற் பெயர் யாது?
10. "பொல்லாப் பிள்ளையார்" என்பதன் பொருள் யாது? அவர் எழுந்தருளியுள்ள இரண்டு தலங்கள் யாவை?

(விடை: — 527ஆம் பக்கம் காண்க)

# 'எடுத்துச் சுமப்பான்'

கடவுள் தனக்கென ஒரு பெயரும் இல்லாதவர், ஆயினும் அன்பர்கள் அவருக்குப் பல பெயர்களை வைத்து வழங்குகின்றார்கள். 'பேராயிரம் உடைய பெருமான்' என்று பெரியோர்கள் இறைவனைப் புகழுகின்றார்கள். இறைவனுக்குப் பல பெயர்கள் தொன்று தொட்டே நூல்களில் வழங்கப்பட்டுள்ளன. எனினும் சில சமயங்களில் அடியார்களும் பக்தர்களும், தாங்களாகவே பல பெயர்களை இறைவனுக்குப் பல வகைகளில் புதியனவாக உண்டாக்கி வழங்குவது உண்டு. சுந்தரமூர்த்தி சுவாமிகள் 'பித்தன்' என்று வைது, சிவ பெருமானுக்கு ஒரு புதிய பெயரை, வசவேயாயினும் அவரே விரும்பி மகிழும்படி வழங்கி விட்டிருத்தலை, நாம் நன்கறிவோம்!

இவ்வாறே பல புலவர்களும் அடியார்களும் தாமாகவே கடவுளுக்குப் பல பெயர்களை 'ஆக்கப் பெயர்'களாகப் படைத்து வழங்கியிருத்தலைக் காண்கின்றோம். அத்தகைய ஆக்கப் பெயர்களுள் **'எடுத்துச் சுமப்பான்'** என்பது ஒன்று. இப் பெயர் இந்நாளில் நாம் Porter என வழங்கும் சுமைதூக்கிகளைக் குறிப்பிடுவதற்கு ஏற்ற ஒன்றாகும். ஏனெனில், அவர்கள் தாம் நமது மூட்டை முடிச்சுகளை எடுத்துச் சுமந்து கொண்டு வர இசைந்து, அதற்காகவே இருக்கின்றார்கள். இத்தகைய கூலியாட்களையே குறிக்கத்தக்க "எடுத்துச் சுமப்பான்" என்னும் சொற்றொடரினை, இறைவனுக்கே உரியதாக வழங்கியிருக்கின்றார், ஒரு பெருஞ் சான்றோர்.

சைவ சமய சந்தான குரவர்களுள் ஒருவரும், சைவ சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கில் எட்டு நூல்களை இயற்றியிருப்பவரும் ஆகிய **உமாபதி சிவாசாரியார்**, தாம் இயற்றிய **திருவருட் பயன்** என்னும் நூலின்கண்தான், இப் பெயரை இறைவனுக்கே யுரிய பெயராகப் படைத்து வழங்கியிருக்கின்றார்.

"கிடைக்கத் தகுமேநற் கேண்மையாக் கல்லால்,
எடுத்துச் சுமப்பானை இன்று"

யார் இறைவனை அடைக்கலம் புகுந்து, தம்மை இறைவன்பால் ஒப்படைத்து விட்டு, "நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே" எனப் பற்றற்று அவனையே பற்றுக்கோடாகப் பற்றி நிற்கின்றார்களோ, அவர்களுடைய துன்பச்சுமை வினைச்சுமைகளை யெல்லாம் இறைவன் தான் ஏற்றுக் கொண்டு, அவர்களைக் காத்தருள்கின்றான். கூலியின் பொருட்டு நம் சுமைகளை யெல்லாம் தாம் எடுத்துக் கொள்ள இசைந்து, போட்டியிட்டுக் கொண்டு ஓடிவரும் ஏவலாட்களைப் போல, அன்பின் பொருட்டு அடியார்களின் சுமைகளை யெல்லாம் தான் எடுத்துச் சுமந்து கொண்டு, அவர்களின் புறம் புறமே திரிந்து பின் வருவதற்கு விரும்பி, இறைவன் சித்தமாக இருக்கின்றானும்!

முன்பு ஒருகால் சிவபெருமான் மதுரையில், **திரு நீலகண்ட யாழ்ப்பாணர்** பொருட்டு விறகு சுமந்து கொண்டு, விறகு தலையனாக வந்தனன் அல்லனோ? திருநாவுக்கரசர் பொருட்டுக் கட்டுச் சோறு சுமந்து கொண்டு திருப்பைஞ்ஞீலியில் வந்து காத்திருந்தனன் அன்றோ? 'வந்தி' என்னும் செம்மனச் செல்வியின் பொருட்டு, வையையாற்றங் கரையினை அடைக்கக் கூலியாளாகப் போந்து மண்சுமந்து, பாண்டியனின் பிரம்பால் அடிபட்டுப் புண்ணும் சுமந்த பொன் மேனியன் அல்லனோ, நம் பெருமான்? எனவே, அவனுக்கு 'எடுத்துச் சுமப்பான்' என்று பெயர் கொடுப்பது எத்துணைப் பொருத்தம்!

# திருச்சந்த விருத்தம்

காய்த்த நீள் விளங்கனி உதிர்த்து
எதிர்ந்த பூங் குருந்தம்
சாய்த்து மா பிளந்த கைத்தலத்த
கண்ணன் என்பரால் ;
ஆய்ச்சி பாலை யுண்டு மண்ணை யுண்டு
வெண்ணெய் உண்டுபின்
பேய்ச்சி பாலை யுண்டு பண்டுஓர்
ஏனம் ஆய வாமனா !

**பொழிப்புரை:** காய்கள் நிறைந்த நீண்ட விளாமரத்தின் கனிகளை உதிரச் செய்து, எதிர்ப்பட்ட பூக்களை யுடைய குருந்த மரத்தினைக் கீழே தள்ளி, குதிரையினை இரு துண்டமாகப் பிளந்த திருக் கைகளையுடைய கண்ணன் என்று உன்னை அறிவுடையோர் சொல்வார்கள். யசோதைப் பிராட்டியினுடைய முலைப் பாலை அருந்தி, வெண்ணெயைக் களவு செய்து தின்று, பூதனை என்னும் பேய்ச்சியின் முலைப்பாலைக் குடித்து, பிறகு ஊழி முடிவில் உலகம் ஆகிய மண்ணை உண்டு திருவயிற்றிலேயே வைத்துக் காப்பாற்றி, முன்பு ஓர் ஊழிக்காலத்திலே ஒப்பற்ற வராக வடிவம் கொண்டு அவதரித்த வாமந மூர்த்தியே !

**குறிப்புரை:** 'வாமநமூர்த்தியே ! உன்னைக் கண்ணன் என்பர்' என்று பொருள் முடிபு கொள்க. விளாமரமாகவும் குருந்தமரமாகவும் வடிவுகொண்டு அசுரர்கள் இருவர் நின்றமையின், விளங்கனி உதிர்த்தும், குருந்தம் சாய்த்தும்

---

எடுத்துச் சுமப்பான் 523-ம் பக்கத்தொடர்ச்சி

இவ்வாறு இறைவன் 'எடுத்துச் சுமப்பான்' என இருக்கவும், நாம் நம் சுமைகளை அவன்பாற் கொடுத்து இறக்கி விட்டுச் சுகப்பட்டு உய்யும் உபாயம் தெரியாமல், தாங்க முடியாத வீண் சுமைகள் பலவற்றை நம் தலைமேல் வாரிப் போட்டுக் கொண்டு தத்தளித்துத் தடுமாறி வருந்துகின்றோமே என்று இரங்கி, நம் பொருட்டுப் பரிவு கொள்கின்றார் உமாபதி சிவாசாரியார் !

'கிடைக்கத் தகுமேநற் கேண்மையர்க்கு அல்லால் எடுத்துச் சுமப்பானை இன்று' என்னும் இத்திருவருட் பயன் செய்யுளை, ஆசிரியர் **சிவஞான சுவாமிகள்** அதன் அருமைப்பாடு அறிந்து வியந்து, தமது சிவஞான போதப் பேருரையில்,

"செம்மலர் நோன்றாள் சேரல் ஒட்டா
அம்மலங் கழீஇ அன்பரொடு மரீஇ
மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயம் தானும் அரன்எனத் தொழுமே"

என்னும் சிவஞான போதப் பன்னிரண்டாம் சூத்திரத்துள் வரும், **"நோன்றாள்"** என்னும் சொல்லுக்கு விளக்கவுரை எழுதும் இடத்தில்

"நோன்றாள்-வினைத் தொகை. நோன்றல்-பொறுத்தல் (சுமத்தல்). 'எடுத்துச் சுமப்பானை' என்றார் புடை நூலாசிரியரும்"

என எடுத்துக் காட்டி யிருத்தல், அறிந்து மகிழ்தற்கு உரியது !

(வெண்பா)

'எடுத்துச் சுமப்பான்' எனச்சிவன்தான் நின்றும்
தொடுத்துழல்நம் துன்பச் சுமைகள்-விடுத்தவன்தாள்
மேவிமிகப் பற்றி,அன்பின் உய்யாமல், வீணேநாம்
பாவிகளாய் வாழ்கோம் ! பரிந்து.

—ஆசிரியர்

அவ் இரண்டு அசுரர்களையும் கண்ணன் கொன்றருளினன். கேசி என்னும் அசுரன் குதிரை வடிவம் கொண்டு போந்தனனுதலின், அவனைக்கொன்ற செய்தியை 'மாபிளந்த' என்றார். மா-குதிரை, ஆய்ச்சி-யசோதை, பேய்ச்சி - பூதனை, ஏனம் - வராகம், வாமநன்-குள்ளன். (37)

கடம் கலந்த வன்கரி மருப்பு
ஒசித்து ஓர் பொய்கைவாய்
விடம் கலந்த பாம்பின்மேல்
நடம்பயின்ற நாதனே!
குடம் கலந்த கூத்தன் ஆய
கொண்டல் வண்ண! தண்டுழாய்
வடம் கலந்த மாலை மார்ப!
காலநேமி காலனே!

**பொழிப்புரை :** மதநீர் பெருகிய வலிமை வாய்ந்த யானையின் தந்தங்களை ஒடித்து, ஒரு மடுவின் துறையிலே விடம் நிறைந்த காளியன் என்னும் பாம்பின் தலைமீது நடனம் செய்தருளிய பெருமானே! 'குடம்' என்னும் திருக்கூத்தைச் செய்தருளிய, காளமேகம் போன்ற கரிய நிறத்தினை யுடையவனே! குளிர்ந்த திருத்துழாய் வடத்துடன் கூடிய மாலையை அணிந்த திருமார்பை யுடையவனே! காலநேமி என்னும் அசுரனுக்கும் காலனாக விளங்கியவனே!

**குறிப்புரை :** கடம் - மதநீர். வன்கரி-கொடிய குவலயா பீடம் என்னும் யானை. மருப்பு-தந்தம். ஒசித்தல்-எளிதாக முறித்தல். பாம்பு காளியன், கண்ணபிரான் காளியநர்த்தனம் செய்த சிறப்பினை 'விடம் கலந்த பாம்பின்மேல் நடம் பயின்ற நாதனே' என்று போற்றுகின்றார். திருமால் குடம் என்னும் ஒரு வகைக் கூத்தை ஆடினர் ஆதலின் 'குடம் கலந்த கூத்தன்' என்றார் ஆழ்வார். காலநேமி' என்ற அசுரனுக்குக் காலனாக விளங்கி அவனைக் கொன்றொழித்தமை பற்றிக் 'காலநேமி காலனே' என்று சிறப்பித்தார். காலன்-கூற்றுவன், இயமன். (38)

வெற்பு எடுத்து வேலைநீர்
கலக்கினாய்! அதன்றியும்
வெற்பு எடுத்து வேலைநீர்
வரம்புகட்டி, வேலைசூழ்
வெற்பு எடுத்த இஞ்சிசூழ்
இலங்கை கட்டு அழித்தநீ,
வெற்பு எடுத்து மாரிகாத்த
மேகவண்ணன் அல்லையே?

**பொழிப்புரை :** மந்தர மலையைக் கொண்டு கடல்நீரைக் கலங்கச் செய்தாய்! அதுவும் அல்லாமல்; மலைகளைக்கொண்டு கடலிலே அணையைக் கட்டும்படி செய்து, கடல் சூழ்ந்ததும் மலைபோன்ற மதில்களை யுடையதும் ஆகிய இலங்கையினுடைய அரணை அழியுமாறு செய்த பெருமானே! நீர்தாம் கோவர்த்தன மலையைக்குடையாக எடுத்து மழையைத் தடுத்து உயிர்களைக் காத்த, மேகத்தின் நிறம் உடையவர் அன்றோ?

**குறிப்புரை :** வெற்பு—மலை, முதலடியில் மந்தர மலையையும், மூன்றாம் அடியில் திரிகூடமலையையும், நான்காம் அடியில் கோவர்த்தன மலையையும் குறித்தது. இரண்டாம் அடியில் எல்லா மலைகளையும் பொதுவாகச் சுட்டியது. வேலை-கடல். வரம்பு-அணை, இஞ்சி-மதில், 'கட்டழித்தல்'—முற்றாக அழியச் செய்தல் எனினுமாம். கட்டு—அரண். கட்டு-களைபறித்து எனவுமாம். இராவணன் ஆகிய களையைப் பறித்து, விபீடணன் ஆகிய பயிரை வளரச் செய்தார் எனவும் கொள்ளலாம். மாரி-மழை. காத்தல்-இங்குத் தடுத்தல் என்னும் பொருளில் வந்தது. (39)

ஆனை காத்து ஓர் ஆனை கொன்று
அதன்றி ஆயர் பிள்ளையாய்
ஆனை மேய்த்தி ஆன்நெய் உண்டி;
அன்று குன்றம் ஒன்றினால்
ஆனை காத்து மையரிக்கண்
மாதரார் திறத்து முன்
ஆனை யன்று சென்றடர்த்த
மாயம் என்ன மாயமே!

**பொழிப்புரை:** கஜேந்திரன் ஆகிய யானையைக் காப்பாற்றி, அதுமட்டுமே யல்லாமல் இடையர்களின் வீட்டுப் பிள்ளையாகத் தோன்றி, குவலயா பீடம் என்னும் ஒரு யானையைக் கொலை செய்து, பசுக்களை மேய்த்தருளா நின்றாய்! பசுக்களின் நெய்யை உண்ணா நின்றாய்! இந்திரன் இடைவிடாமல் மழை பெய்யுமாறு செய்வித்த அந்தக் காலத்தில், கோவர்த்தனம் என்னும் மலை ஒன்றைக் கொண்டு, பசுக்களைக் காப்பாற்றி, மைதீட்டிச் செவ்வரிகள் படர்ந்த கண்ணையுடைய நப்பின்னைப் பிராட்டியின் பொருட்டு, அக்காலத்திலே அவளுடைய எதிரிற் சென்று எருதுகள் ஏழையும் அடக்கி வென்ற நின் வீரச்செயல், எத்தகைய வியப்பான செயல்!

**குறிப்புரை:** 'ஆனை' யானை எனவும் 'பசுக்களை' எனவும் ஏற்ற பெற்றியிற் பொருள் படுமாறு இச்செய்யுளிற் பயின்று வந்துள்ளது. யானையைக் குறிக்குங்கால் 'ஆனை' என்பது போலி. பசுக்களைக் குறிக்கும் பொழுது 'ஆன் + ஐ' என இரண்டாம் வேற்றுமையுருபு ஏற்று வந்த சொல். ஆனை மேய்த்தி—பசுக்களை மேய்த்தருளா நின்றாய். ஆநெய் உண்டி—பசுவின் நெய்யை உண்டருளினாய். 'உண்டி' என்னும் சொல் உணவு என்னும் பொருளைக் குறியாமல், உண் + ட் + இ என இறந்த கால முன்னிலை ஒருமை வினைமுற்றுப் பொருளில் வந்தது. 'உண்டருளினாய்' என்பது பொருள். 'மையரிக்கண் மாதரார்' என்றது நப்பின்னைப் பிராட்டியை. ஏழுகாளைகளை அடக்கி வென்று வீரச் செயல் நிகழ்த்தியே நப்பின்னையை மணந்தமையினால், அவ்வீரச்செயலை "ஆனை அன்று சென்று அடர்த்த மாயம்" என்று புகழ்ந்தார். 'ஆன்' என்றது ஈண்டுக் காளைகளை யுணர்த்திற்று.

—(40)

—தொடரும்.

---

## ஆடிப்பூர விழாக்கள்.

| | | |
|---|---|---|
| **ஸ்ரீ வில்லிபுத்தூர்** | : | ஸ்ரீ நாச்சியார் தேவஸ்தானம், ஸ்ரீ ஆண்டாள் ஆடிப் பூரவிழா. |
| **நாகப்பட்டினம்** | : | சௌந்தரராஜப் பெருமாள் கோயில்; காயாரோகண சுவாமி கோயில் |
| **விருத்தாசலம்** | : | விருத்தாசலேசுவரர் கோயில். |
| **திருக்கடவூர்** | : | அமிர்தகடேசுவர சுவாமி கோயில். |
| **போளூர்ப் படவேடு** | : | ஸ்ரீ ரேணுகாம்பாள் தேவஸ்தானம், ஆடி சுக்கிரவாரப் பெருவிழா. |
| **திருக்கழுக்குன்றம்** | : | திரிபுரசுந்தரியம்மை. |
| **சங்கர நயினார் கோயில்** | : | கோமதி அம்மை ஆடித் தவசுத் திருவிழா. |
| **திருவாரூர்** | : | கமலாம்பிகை ஆடிப்பூரவிழா; நம்பி ஆரூரர் திருவிழா. |
| **குறிஞ்சிப்பாடி குப்பம்** | : | புத்து மாரியம்மன் செடல் பெருவிழா. |
| **தாடிக்கொம்பு** | : | சௌந்தரராஜப்பெருமாள் ஆடி ரதவிழா. |
| **திருமாலிருஞ்சோலைமலை** | : | கள்ளழகர் ஆடிப்பெருவிழா. |
| **கடம்பர் கோவில்** | : | ஆடிப்பூர ரதோற்சவம். (31—7—65). |

---

[குறிப்பு: இதழில் இடம் இல்லாமற் போயினமை காரணமாக, மகா வித்துவான் ஸ்ரீமத் **P. B. அண்ணங்கராசார்ய சுவாமிகள்** அவர்களின் **"ஸ்ரீ விசிஷ்டாத்வைத தரிசன ஸாரம்"** என்னும் விரிவான அரிய கட்டுரை, இம்மாதம் வெளிவர இயலவில்லை. அடுத்த இதழில் அக் கட்டுரை முழுவதும் ஒருங்கே வெளியிடப்பெறும்.

— ஆசிரியர்.]

# விடை விளக்கம்

1 இராஜசிம்மன் என்னும் இரண்டாம் நந்திவர்மன் (கி. பி. 680—700). காஞ்சிபுரம் கயிலாச நாதர் கோயில், ஐராவதேசுவரர் கோயில், பனைமலைத் தாலபுரீசுவரர் கோயில் முதலியன, அவ்வரசன் கட்டிய பிற கோயில்கள் ஆகும்.

2. மூன்றும் குலோத்துங்க சோழன் (கி. பி. 1178—1216), கும்பகோணத்திற்கு அருகேயுள்ள திருபுவனம் கம்பஹரேசுவரசுவாமி (நடுக்கம் தீர்த்தநாதர்) கோயிலைக் கட்டினான். சரபமூர்த்தியின் திருவுருவம் இங்கு மிகவும் சிறப்பு வாய்ந்தது.

3. சீர்காழிக்கு உரிய பெயர்கள் 12. அவை முறையே பிரமபுரம், வேணுபுரம், புகலி, வெங்குரு, தோணிபுரம், பூந்தராய், சிரபுரம், புறவம், சண்பை, காழி, கொச்சைவயம், கழுமலம், என்பனவாகும்.

பிரமபுரம் வேணுபுரம் புகலிவெரு வெங்குரு சீர்ப்
பொருவில்திருத் தோணிபுரம் பூந்தராய் சிரபுரம் முன்
வருபுறவம் சண்பைநகர் வளர் காழி கொச்சைவயம்
பரவுதிருக் கழுமலமாம் பன்னிரண்டு திருப்பெயர்த்தால்

—சேக்கிழார்

4. திருக்குறள், திருவாசகம், தொல்காப்பியம், திருக்குறட் பரிமேலழகருரை, பெரிய புராணம், சிவஞானசித்தியார் என்னும் ஆறும் தண்டமிழின் மேலோங் தரமான சிறந்த தமிழ் நூல்கள் எனப் போற்றப் பெற்றுள்ளன.

வள்ளுவர் நூல் அன்பர் திரு வாசகம்தொல் காப்பியமே
தெள்ளுபரி மேலழகன் செய்தவுரை — ஒள்ளிய சீர்த்
தொண்டர் புராணம் தொகுசித்தி ஓராறும்
தண்டமிழின் மேலாந் தரம்

—உமாபதிசிவம்.

5. திருப்பாச்சில் ஆச்சிரமம் என்னும் தலத்தில் உள்ளது. கொல்லி மழவன் என்னும் மன்னனின் மகளைப்பற்றியிருந்த முயலகன் என்னும் நோயைத் திருஞானசம்பந்தர் "துணிவளர் திங்கள் துளங்கி விளங்க" எனத் தொடங்கும் திருப்பதிகம் பாடிப் போக்கியருளினார். அதன் அடையாளமாகவே இங்குள்ள நடராஜர் திருவுருவிலும் கூட, முயலகன் இல்லை.

6. சேரமான் பெருமாள் நாயனாருக்குப் பெயர். எல்லா உயிர்களும் எல்லா மக்களும் பேசிக் கொள்ளுவனவற்றையும் அறிந்து, அவற்றின் துன்பங்களைப் போக்கி நன்மை செய்தற் பொருட்டு, இவர் விரும்பியபடி இறைவன் "யாவும் யாரும் கழறினவும் அறியும் உணர்வு" நல்கியதனால், இவருக்கு இப்பெயர் ஏற்பட்டது. (கழறுதல்-பேசுதல்)

7. (1) சம்பந்தர் ; "நன்றியால் வாழ்வது உள்ளம் உலகுக்கொரு நன்மையாலே..." எனத் தொடங்கும் தேவாரம் காண்க.

(2) நம்மாழ்வார் ; மனிதர்களைப் பாடித் திரியும் புலவர்களை நோக்கி அறிவுறுத்திப் பாடியது.

8. இருக்கு எசுர் சாமம் அதர்வணம் என்பன நான்கு மறைகள். (தொல்காப்பியப் பாயிர உரையில் ஆசிரியர் நச்சினர்க்கினியர், தைத்திரியம் பௌடியம் தலவகாரம் சாமவேதம் என்பனவற்றை, நான்மறைகள் என்று குறிப்பிட்டுள்ளார்) சிட்சை கற்பம் வியாகரணம் நிருக்தம் சந்தோவிசிதி சோதிடம் என்னும் ஆறும், நான்மறைக்கு உரிய ஆறங்கங்கள் ஆகும்.

(1) வேதங்களை எடுத்தல் (உதாத்தம்) படுத்தல் (அனுதாத்தம்) முதலிய இசை வேறுபாடுகளுடன் உச்சரிக்கும் முறையினை உணர்த்துவது சிட்சை.

(2) வேதங்களிற் கூறும் கருமங்களை அநுட்டிக்கும் முறைமையை உணர்த்தும் ஆசுவலாயநீயம் போதாயநீயம் முதலிய சூத்திரங்கள் கற்பம்.

(3) வேதங்களின் எழுத்துச் சொற்பொருளியல்பு உணர்த்துவது வியாகரணம்.

(4) வேதங்களின் சொற்பொருள் உணர்விப்பது நிருக்தம்

(5) வேத மந்திரங்களிற் காயத்திரி முதலிய சந்தங்களின் பெயரும், அவற்றிற்கு எழுத்து இனைத்தென்றலும் உணர்த்துவது சந்தோவிசிதி

(6) வேதத்திற் சொல்லப்படும் கருமங்கள் செய்தற்குரிய காலச் சிறப்புக்களை உணர்த்துவது சோதிடம்.

9. 'உன்செவ்வடி செவ்வி திருக்காப்பு' என்று பகவத் விஷயத்துக்கும், 'மங்கையும் பல்லாண்டு' 'சுடராழியும் பல்லாண்டு' 'பாஞ்ச சன்னியமும் பல்லாண்டு' என்று பாகவத விஷயத்துக்கும், மங்களாசாசனம் பண்ணுதலில் மற்ற ஆழ்வார்களைக் காட்டிலும் ஆர்வம் மிக்குப் பெருகி விளங்கியவராக இருந்ததனல், பெரியாழ்வார் என்னும் பெயர் ஏற்பட்டது. இவர்தம் இயற் பெயர் விஷ்ணு சித்தர் என்பது.

மங்களா சாசனத்தில் மற்றுள்ள ஆழ்வார்கள்
தங்கள்ஆர் வத்தளவு தான் அன்றிப் — பொங்கும்
பரிவாலே வில்லிபுத்தூர்ப் பட்டர்பிரான் பெற்றுன்
பெரியாழ்வார் என்னும் பெயர்.

—மணவாளமாமுனிகள்.

10. 'பொல்லா' என்றுற் பொதுவாகக் 'கெட்ட' 'கொடிய' எனப்பொருள் கொள்வது வழக்கம் இங்கு அப்பொருளில் இல்லை. 'பொள்ளா' என்னும் சொல் 'பொல்லா' என மருவியது பொள்ளுதல்—உளியாற் செதுக்குதல். சிற்பிகளாற் செதுக்கப்படாமற் சுயம்புமூர்த்தியாகத் தானே தோன்றியவர் ஆதலின் இப் பெயர் அமைந்தது.


"கல்லால் நிழல்மலை
வில்லார் அருளிய
பொல்லார் இணைமலர்
நல்லார் புனைவரே"

என்பது சிவஞானபோதம், விநாயகர் துதி. திருநாரையூரிலும், திருவெண்ணெய் நல்லூர் அருட்டுறை என்னும் கோயிலிலும், பொல்லாப் பிள்ளையார் எழுந்தருளியிருக்கின்றுர். திருநாரையூரில் நம்பியாண்டார் நம்பிகளும், திருவெண்ணைநல்லூரில் ஆசிரியர் மெய்கண்டாரும் இவரை வழிபட்டுப் பேறு பெற்றனர்.


—ஆசிரியர்



வைகுண்டநாதர்
இராமசாமிகோயில், கும்பகோணம்



அப்பர் சுவாமிகள்
வசிஷ்டேசுவரர் கோயில், கரந்தை; தஞ்சாவூர்



திருவிக்கிரம அவதாரம்
இராமசாமி கோயில், கும்பகோணம்

CONNEMARA PUBLIC LIBRARY
10 JAN 1966

# விசயமங்கலம்

ஜீவபந்து திரு. டி. எஸ். ஸ்ரீ பால்

[சிறந்த ஜைனசமய அறிஞர் ஆகிய ஜீவபந்து திரு. T. S. ஸ்ரீபால் அவர்கள், ஜைன சமயப் பேரரசரும் 'பெருங்கதை' என்னும் அரும்பெறல் நூலினை இயற்றியவரும் ஆகிய 'கொங்குவேளிர்' என்பவர் தம் தலைநகராகக் கொண்டு அரசு செலுத்திய விசயமங்கலம் பற்றியும், நன்னூல் என்னும் தமிழிலக்கண நூலை அளித்த பவணந்தி முனிவர் வாழ்ந்த ஜினபுரம் (சனகாபுரம்) பற்றியும், சிலப்பதிகார உரையாசிரியர் ஆகிய அடியார்க்குநல்லார் வதிந்த நிரம்பை நகர் பற்றியும் நேரிற் சென்று கண்டு விவரித்துள்ள இக்கட்டுரை, 'அருங்கலை ஆர்வலர்' ஆகிய நமது அறநிலைய ஆணையர் அவர்களின் இசைவு பெற்று, இங்கு வெளியிடப் பெறுகின்றது.

——ஆசிரியர்]

விசயமங்கலம் ஈரோட்டிற்கும் கோயமுத்தூருக்கும் இடையில் ஒரு ரயில் நிலையமாக விளங்குகிறது. ஈரோட்டிலிருந்து சுமார் 15 கல் தொலைவில் உள்ளது. இவ்வூர் பண்டைக் காலத்தில் வரலாற்றுச் சிறப்பமைந்த தலைநகரமாக விளங்கிற்று. கி.பி. ஆறாம் நூற்றாண்டில், கொங்கு இருபத்து நான்கு நாட்டினுள், குறும்பு நாட்டைச் சார்ந்திருந்தது. கொங்கு நாட்டின் நடுவண் உள்ளது.

## கொங்கு வேளிர்.

விசய மங்கலத்தைத் தலை நகராகக் கொண்டு **கொங்கு வேளிர்** என்ற சைனப் பேரரசர் ஆட்சி புரிந்து வந்தார். இவ் வரலாற்றைப் பெருங்கதைப் பாயிரத்தில்

" ...................... செழுந்தமிழ்ப்
பொங்கு மண்டலத்துட் கொங்கு
மண்டலத்தில்
உறும்பு வளமார் குறும்பு நன்னாட்டில்
எப்பனு வலையும் தப்புத லின்றி
அங்கையா மலகமா அறிபெரி யோர்செறி
மங்கைமா நகரின் மஞ்சையம் பரிமீத்
தங்குவேள் என வாழ் கொங்கு வேளிர் "

என்று கூறுவதால் அறிகின்றோம். இம் மன்னர் பெருந்தகை வடமொழியிலும் தமிழ் மொழியிலும் பெரும் புலவராகத் திகழ்ந்தார். இப்புலவரேறு **உதயணன்** வரலாற்றைப் **பெருங் கதை** என்னும் பெயரால் தலைசிறந்த தமிழ்க் காப்பியம் ஒன்றை இயற்றினார்.

## தமிழ்ச் சங்கம்.

இம் மன்னர் பெருமான் தமிழ்மொழியில் பற்றும் பரிவும் உடையவராகையால் தமிழ் மொழியின் ஆக்கத்திற்கும், வளர்ச்சிக்கும் பணிபுரியத் தமிழ்ச் சங்கம் ஒன்றை விசயமங்கலத்தில் தோற்றுவித்தார். இச் சங்கத்தில் இணையற்ற தமிழ்ப் புலவர்களைக்கொண்டு தமிழ் மொழியை வளர்த்து வந்தார். பெருங் கதைப் பாயிரத்தில்,

" புலவர் கூட்டுண்ணும் புத்தமு தாக
உதயணன் சரிதை ஓதினர் "

எனக் கூறுவதால், புலவர் கூடித் தமிழ் வளர்த்த செய்தியும், உதயணன் சரிதை இயற்றிய செய்தியும், தெளிவாகத் தெரிகிறது. இவ்வூரின் ஒரு பகுதியைச் **சங்கு வடம்** என அழைக்கின்றனர். இப் பகுதியே தமிழ்ச் சங்கம் அமைந்த இடமாக இருக்கலாம். **'சங்க இடம்'** என்பதே சங்குவடம் என மருவி அழைக்கப்படுகிறது.

## இத் தமிழ்ச் சங்கத்தின் மாண்பு.

கொங்கு நாட்டில் தோன்றிய தமிழ்ச் சங்கத்தின் பால், மற்றொரு தமிழ்ச் சங்கத்தார் பொறாமைகொண்டு, அச் சங்கத்தாரின் திறனையறியவேண்டி ஒரு கவியின் வாயிலாக வினா ஒன்றை எழுப்பி,

அக்கவியின் பொருளையும் வினாவிற்குரிய விடையையும் அளிக்குமாறு கேட்டனர். அக் கவியைக் கண்ணுற்ற **கொங்கு வேளிர்** தனது அரண்மனைப் பணிப் பெண் ஒருத்தியை அழைத்து, அக் கவியின் பொருளையும் அதற்குரிய விடையையும் கூறுமாறு பணித்தார். அப் பணிப் பெண் அக் கவியை ஆழ்ந்து உணர்ந்து அருமையான விளக்கம் தந்தாள். அவ்விளக்கத்தைக் கேட்டு மகிழ்ந்த மன்னர் பெருமான் அப் பெண்ணையே வினாவிடுத்த அச் சங்கத்திற்கு அனுப்ப முடிவு செய்து புலவர்களுக்குரிய பல்லக்கு முதலிய விருதுகளுடன் அனுப்பி விடையளித்து வருமாறு வாழ்த்திப் பணித்தார். அப் பெண்ணருங்கலமாம் பணிப் பெண், அங்குச்சென்று அச் சங்கப் புலவர்கள் வியப்புறும் வகையில் பொருத்தமான விடை பகர்ந்தாள். புலவர் பலரும் மேதையாம் அம்மாதைப் போற்றிப் புகழ்ந்தனர். இவ் வரலாற்றைக் கொங்கு மண்டல சதகம்,

“நீதப்புகழ் உதயேந்திரன் காதை
நிகழ்த்துதற்குக்
கோதற்ற மங்கையில் மூன்று பிறப்
புற்ற கொள்கையன்றி
மேதக்க சொற் சங்கத்தார் வெல்புகழ்க்
கொங்குவேள், அடிமை
மாதைக் கொண்டுத்தரம் சொன்
னதுவுங் கொங்கு மண்டலமே”

என வரும் கவியில், ‘‘அருந்தமிழ் மாதைக் கொண்டு உத்தரம் சொன்னதுவுங் கொங்கு மண்டலமே’’ எனப் புகழ் பெற்றுள்ளது. இத்தகு கல்வி நலம் பெற்றுயர்ந்த காரணத்தால் விசயமங்கலப் பெரும் பகுதியைத் ‘**தமிழ் மங்கை**’ என்றும் ‘**மங்கை மாநகரம்**’ என்றும் அக்காலப் புலவர் பெருமக்கள் பலர் போற்றியுள்ளனர்.

## ஐம்பெரும் புலவர்களின் உருவச்சிலைகள்

கொங்குவேளிர் தமிழ்ச் சங்கத்தில் வீற்றிருந்து தமிழ் வளர்த்த புலவர்களில் ஐம்பெரும் புலவர்களின் உருவச்சிலைகள் கையில் ஓலைச் சுவடிகளுடன் காட்சியளிக்கின்றன. இவ்வாறு தமிழ்ப் புலவர்களை உலகுக்கு அறிமுகம் செய்யும் வகையில் தமிழகத்தில் வேறெங்கணும் காணப்படவில்லை. இந்நினைவுச் சின்னங்களால், கொங்குவேளிர் புலவர்கள்பால் கொண்டிருந்த பெருமதிப்பும் பேரன்பும் புலனாகின்றன.



புலவர் பெருமக்களின் சிலைகள்



ஆதிநாதர் (விருஷப தேவர்)

**ஜினாலயம்.**

விசய மங்கலத்தில் கொங்குவேளிர் அமைத்த ஜினாலயம் இன்றும் நின்று நிலவுகிறது. இக்கோயில் உட்புறத்தில் 'எண்ணோடே எழுத்திரண்டும் இயம்பிய ஆதிமூர்த்தி'யாகிய பகவான் விருஷப தேவருக்கும், எட்டாம் தீர்த்தங்கரராகிய சந்திரப் பிரப தீர்த்தங்கரருக்கும் இரு ஆலயங்கள் இருந்தன. இப்பொழுது ஆதி தீர்த்தங்கரராகிய பகவான் **விருஷப தேவர்** ஆலயம் சிதறுண்டு காணப்படுகின்றது. **சந்திரப்பிரப தீர்த்தங்கரர்** ஆலயமும் மதிற் சுவர்களுமே இருக்கின்றன, இக்கோயிலை "வீர சங்காதப் பெரும் பள்ளி" எனச் சாசனம் கூறுகிறது. மன்னர் கொங்குவேளிர் வழிபாடியற்றிய இக்கோயிலின் முன்மண்டபத்தில்தான், நாம் முன்னர்க் கூறிய ஐம்பெரும் புலவர்களின் சிலைகள் அமைக்கப்பட்டுள்ளன. வரலாற்றுச் சிறப்பும் இலக்கியப் பெருமையும் கொண்ட இக் கோயில், பாதுகாப்பின்றியும் போதுமான வருவாயின்றியும் சீர்குலைந்து வருகிறது.

**யாத்திரைப்பகுதி.**

விசயமங்கலம் கொங்குவேளிர் ஆட்சிச் சிறப்பும், பெருங்கதை என்னும் பெருங்காப்பியப் பிறப்பும், தமிழ்ச் சங்கப் பெருமையும், ஐம்பெரும் புலவர்களின் உருவச்சிலைகளின் காட்சியும், ஆதிபகவன் கோயிற் சிறப்பும் கொண்டு விளங்குவதால், இப்பெரும் பகுதி புலவர் பெருமக்களுக்கும் கவிஞர்களுக்கும் தமிழார்வம் படைத்த அறிஞர்களுக்கும் மாணவ மாணவிகளுக்கும் கலைமலிந்த யாத்திரைப் பகுதியாகும். இவ்வாறு விசயமங்கலத்தை யாத்திரைப் பகுதியாக விளங்கச் செய்தால் தமிழ் நாட்டிற்கும் தமிழ் மொழிக்கும் புலவர் பரம்பரைக்கும் பெருமையும் அழியாப் புகழையும் உண்டாக்கும்.

தமிழ் மங்கையாம் விசய மங்கலக் கலைப்பதியைக் கண்டு களிப்பதோடு நமது புனித யாத்திரை நின்றுவிடவில்லை. ஜைன அறவோர்கள் தமிழ் மொழி சிறப்புற அரும் பெரும் இலக்கியங்கள் இலக்கணங்கள் இசை நாடகம் நீதி நூல் ஆகியவற்றை வழங்கிய அரிய காட்சிகளையும், விசய மங்கலத்தைச் சுற்றிப் பத்து மைல்களுக்குள்ளாக விளங்கும் பல்வேறு திருப்பதிகளையும் காணலாம்.



சந்திரப்பிரப தீர்த்தங்கரர்

**நன்னூல் யாத்த திருப்பதி**

புலவர் பெருமக்கள் பலராலும் போற்றிப் புகழும் 'நன்னூல்' என்னும் தலை சிறந்த இலக்கண நூலை இயற்றியருளிய **பவணந்தி முனிவர்** பிறந்து வாழ்ந்த சனகாபுரத்தை அக்கால மக்கள் 'ஜினபுரம்' எனச் சிறப்புப் பெயரால் அழைத்துப் போற்றியது பிற்காலத்தில் **சீனுபுரம்** என மருவி வழங்கப்படுகிறது. அக் கிராமத்தில் பவணந்தி முனிவர் வழிபாடியற்றிய **ஆதிநாதர்** கோவில் இன்றும் நின்று நிலவுகிறது. இக்கோயில் பவணந்தி முனிவரின் நினைவுச் சின்னமாக அமைந்துள்ளது.

**அடியார்க்கு நல்லார் :**

நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரப் பெருங்காவியத்திற்கு உரை எழுதிய **"அடியார்க்கு நல்லார்"** வாழ்ந்த **நிரம்பை** என்ற பெயர் பெற்ற பெருந்தலமும் விசய மங்கலத்தின் அருகில் விளங்குகிறது. ஈழத்து நாட்டுச் சிங்கநல்லூர்ப் பேரரசன், அடியார்க்கு நல்லார் நினைவாக அவ்வூரில் அடியார்க்கு நல்லார் மண்டபம், அடியார்க்கு நல்லார் குளம் என நினைவுச் சின்னங்களை அமைத்துப் போற்றியதுபோன்று, நிரம்பைக் கிராமத்திலும் அடியார்க்கு நல்லார் நினைவுச் சின்னம் அமைக்க வேண்டாமா? அப் பெரும்பதியைக் கண்டு களிக்க வேண்டாமா? "வருவிசய மங்கையும் நிரம்பையும் கூடலூர், மருவறு சிறுக் கழிஞ்சி" எனக் குறும்பு நாட்டு ஊர்த் தொகைப் பாடலும் போற்றுகிறது.

**இசையும் நாடகமும் :**

இசையும் நாடகமும் பயிற்றுவித்த கலைக்குன்றம் விசய மங்கலத்திற்குச்சுமார் பத்துக் கல் தொலைவில் 'அறச்சலூர்' என வழங்கும் ஒரு சிற்றூர் இருக்கிறது. இதற்குப் பண்டைய காலத்தில் **அறச்சாலையூர்** என அழைக்கப்பட்டது. அவ்வூருக்கு அருகில் ஒரு கலைமலை காணப்படுகிறது. அம் மலையில் ஜைன அறவோர்கள் தவம் இயற்றிய சின்னங்களும் கற் படுக்கைகளும் பிராமி எழுத்தாலான கல்வெட்டுச் செய்திகளும் காட்சியளிக்கின்றன. மூன்று கல்வெட்டுகளில் ஒன்றில்,

> "எழுத்தும் புணர்த்தான் மணிய
> வண்ணக்கன் ஆதன் சாத்தன்"

என்றும், வேறு சிதறுண்டுள்ள கல்வெட்டுக்களில் நாட்டியக் குறிப்புக்கள் சிலவும் எழுதப்பட்டுள்ளன. இவைகளை ஆராய்ந்து வெளியிட்ட புதை பொருள் ஆராய்ச்சி நிபுணர்கள், இக்குகை 1800 ஆண்டுகட்கு முற்பட்டதென்றும், இங்கு ஜைன அறவோர்கள் இவ் வட்டாரத்தில் கல்வி, ஓவியக் கலை, நாட்டியக் கலை, இசைக்கலை ஆகியவைகளை வளர்த்தார்கள் என்றும் தெளிவாகிறது என 1962-ஆம் ஆண்டு மே மாதம் 20-ந் தேதி "இந்து" (Hindu) பத்திரிகையில் எழுதியுள்ளார்கள். கலைவல்லோரே ! இம் மலை யாத்திரைக்குரிய மாண்புடையதல்லவா ? அங்கும் செல்லுங்கள்.

மேலும்பல ஜைனத்திருப்பதிகள் விசய மங்கலத்தைச் சுற்றி விளங்குகின்றன. நன்னூல் ஆசிரியர் பவணந்தி முனிவர் வாழ்ந்த சீன புரத்தைக் காணச் செல்லும் வழிகளிலேயே திங்களூர் ஜினலயம், பூந்துறை ஜினலயம் வெள்ளோடு ஜினலயங்களையும், கண்டு களிக்கலாம். இவைகளும் நாளுக்கு நாள் சிதறுண்டு வருகின்றன.

நமது மதிப்பிற்குரிய தமிழக முதல் அமைச்சர் உயர்திரு. **எம். பக்தவத்சலம்** அவர்கள் விசய மங்கலத்துக் கோயிலைப் புதுப்பித்து, அக் கலைப்பதி மறுமலர்ச்சி பெற்று யாத்திரைப் பகுதியாகவும், சுற்றுலாக் காட்சி நகராகவும் விளங்க ஆவன செய்வதாக உறுதி கூறியுள்ளார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இப் பெரும் பணிக்குத் தமிழக மக்கள் பலரும் பெருந்துணை புரிந்து சிறப்பிக்கக் கோருகிறேன்.

*

# வடதிருச்சிற்றம்பலம் - கல்வெட்டுக்கள்

[டாக்டர் திரு. மா. இராசமாணிக்கனார்.]

(முன் இதழ்த் தொடர்ச்சி : பக்கம். 499)

**கோட்டங்கள்**

மண்டலம் என்பது பெருநிலப் பரப்பு. அது பல கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு கோட்டமும் பல நாடுகளாகப் பிரிக்கப்பட்டது. ஒரு நாடு பல சிற்றூர்களைக் கொண்டது. இக்கல்வெட்டுக்களில் இரண்டு கோட்டங்கள் இடம் பெற்றுள்ளன. அவற்றுள் ஒன்று **புத்தூர்க்கோட்டம் (28).** அஃது எது என்பது தெரியவில்லை. தொண்டைமண்டலம் 24 கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. மதுராந்தகம் கயத்தூர்க் கோட்டத்தைச் சேர்ந்திருந்த தனியூர். தனியூர் என்பது பெரிய நகரம். **ஊற்றுக்காட்டுக் கோட்டம் (35)** ஒரு கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளது. அது செங்கற்பட்டை அடுத்த ஆற்றூர், 'சீவரம்' வாலாஜாபாத், ஊற்றுக்காடு, பொன்னேரி முதலிய ஊர்களைக் கொண்ட பெருநிலப் பகுதியாகும். அக்கோட்டத்தார் (வடதிருச்சிற்றம்பலம்) கோவிலுக்கு நிலதானம் செய்தனர் என்பது அக்கல்வெட்டால் (35) ஊகிக்கப்படுகிறது.

**ஊர்கள்**

இக்கல்வெட்டுக்களில் வளர்பிறை (1), பெரமுபாக்கம் (5), குளத்தூர், பிடாகை நல்லூர் (31) என்பன இடம் பெற்றுள்ளன. இவற்றுள் வளர்பிறை என்பது மதுராந்தகத்துக்குக் கிழக்கில் இரண்டு கல் தொலைவில் உள்ள சிற்றூராகும். பெரமுபாக்கம் என்பது பெரும்பாக்கம் ஆகலாம், இது மதுராந்தகத்திற்கு மேற்கில் ஐந்து கல் தொலைவில் உள்ளது. பின்னவை இரண்டும் யாவை என்பது இப்பொழுது அறியக்கடவில்லை. பிடாகை என்பது ஒரு சிற்றூரை அல்லது பேரூரை அடுத்த குக்கிராமம் (hamlet) ஆகும்.

**மதுராந்தகத்துச் சேரிகள்**

சேரி-ஊரைச் சேர்ந்துள்ள புதிய தெரு, அல்லது புதிய பகுதி (வார்டு). மதுராந்தகச் சேரி, இருமடிச்சேரி, சிங்களாந்தகச் சேரி, கோதண்டராமச் சேரி, இராஜகேசரிச் சேரி, பரகேசரிச் சேரி, திருபுவனமாதேவிச் சேரி என்பன. மதுராந்தகம் என்னும் ஊரைச் சேர்ந்தவை என்பது திருவெண்காட்டீசர் கோவில் கல்வெட்டுக்களால் அறியப்படும்.

இதுகாறும் கூறப்பெற்ற சிதைந்த கல்வெட்டுக்களில் **மாயவச்சேரி, வாகீதரச்சேரி (7). கோதண்டராமச்சேரி, (திரிபுவனமா) தேவிச்சேரி (22.)** மகேசுவரச்சேரி (24), **சதுரத்துச்சேரி (31)** என்பன இடம் பெற்றுள்ளன. இவை அனைத்தும் பிராமணர் வாழ்ந்த பகுதிகள் ஆகும்.

**வடதிருச்சிற்றம்பலம்**

> "வடதிருச்சிற்றம்பல முடையார்" (3)
>
> "(மதுராந்தகச் சதுர்வேதி) மங்கலத்து உடையார் வடதிருச்சிற்(றம்பலம் உடையார்)" (6)
>
> "இவ்வூர் வடதிருச்சிற்றம்பல முடையார்க்கு)" (40)

என்னும் கல்வெட்டுத் தொடர்கள் - மதுராந்தகத்தில் வடதிருச்சிற்றம்பலம் என்னும் பெயர் கொண்ட கோவில் இருந்ததைத் தெளிவாகச் சுட்டுகின்றன; அத்துடன் அக்கோவில் கற்கள் இன்று படிக்கட்டுக் கற்களாகவும் மதகின் கற்களாகவும் பிள்ளையார் கோவில் கற்களாகவும் இடம் மாறியிருந்தலையும் ஐயமற வெளிப்படுத்துகின்றன.

இக்கோவிலில் **தேவர் பண்டாரம் இருந்தது, திருமடைப்பள்ளி இருந்தது (14).** சிவன் கோயில் அர்ச்சகர். சிவபிராமணர் எனப்பட்டனர். "கோயில் காணியுடைய சிவப்பிராமணரோம்" (?) "(கோயில்காணி) யுடைய சிவப்ராமணர்" (27). இச் சிவபிராமணர்க்குக் கோவில் நிலம் மானியமாக விடப்பட்டது என்பது, "காணி-

உடைய" என்னும் தொடரால் அறியப்படும். சிவபிராமணர் கோவிலுக்கு விளக்கறம் முதலியன செய்வதுண்டு. அம்முறைபற்றி இங்கும் செய்யப்பட்டது என்பது,

" ......கழஞ்சு பொன் விளக்குக்கு உடலாகச் செய்தோம்
காஸ்யபன் சங்கரநாலாயிர பட்டனும் ஆகத் திரையன் நூறு பேரும்
உள்ளிட்ட சிவப்ராம்மணரோம்"..... (37)

என்னும் கல்வெட்டுத் தொடரால் அறியப்படும்.

**அறங்கள்**

கோவிலுக்கு அரசன் முதல் ஆண்டி ஈருக அனைவரும் விளக்கு எரித்தல், நிலமளித்தல், காசு கொடுத்தல், நகைகள் தருதல் கட்டடங்கள் கட்டித் தருதல் முதலிய பல அறங்களைச் செய்வது வழக்கம். அம்முறையில் இக் கோவிலுக்கு விளக்கு அறம் செய்தமைக்கு மூன்று கல்வெட்டுக்கள் சான்று பகர்கின்றன.

1. (1) ஒரு விளக்கு எரிக்கக் கழஞ்சு பொன் தரப்பட்டது (37).

(2) பிராந்தகோன் நங்கை என்பவள் ஒரு திருவிளக்கு வைத்தாள் (38).

(3) முதல் இராசராசன் காலத்தில் நக்கன் என்பவன் திருநந்தா விளக்கு ஒன்று எரிக்க நிவந்தம் விட்டான் (39).

நந்தா விளக்கு என்பது எப்பொழுதும் கருவறையில் எரிந்துகொண்டிருக்கும் விளக்கு.

2. ஊற்றுக் காட்டுக் கோட்டத்தார் கோவிலுக்கு நிலம் விட்டனர் (35).

3. ஆட்கொண்டநாச்சி என்பவள் திருஞானசம்பந்தன் திருமடம் கட்டுவித்து அதன் நடைமுறைக்கு நிலத்தையோ பணத்தையோ உதவினாள் (17),

4. கேளப்பநாயகர் என்பவர் ஒரு மண்டபம் கட்டுவித்தார். இவர் சோழர்க்கு மிகப் பிற்பட்ட காலத்தவர் என்பது கல்லெழுத்துக்களால் தெரிகிறது (12).

கோவில் அறங்களை நடைபெறுமற் செய்தலோ மோசம் செய்தலோ இராஜத்துரோகமாகக் கருதப்பட்டது. "... ..பண்ணுவார்களாகில் ராஜத்ரோகத்துப்பட்டு" என்னும் விக்கிரம சோழன் கல்வெட்டுத் தொடரால் (20) அறியலாம்.

**மாகேசுவரர்**

சிவன் கோவில் அறங்களைப் பற்றிக் கூறும் கல்வெட்டுக்களின் இறுதியில் 'இவ்வறத்தைச் சிவனடியார் (மாஹேஸ்வரர்) தொடர்ந்து காப்பாராக" என்னும் பொருள்படும் 'ஸ்ரீமாஹேஸ்வரர் ரக்ஷை' அல்லது 'பன்மாஹேஸ்வரர் ரக்ஷை" என்னும் தொடர் பொறிக்கப்படல் வழக்கம். அவ்வழக்கப்படி இக்கல்வெட்டுக்களிலும், "இது மாஹேஸ்வர ரக்ஷை" (8), "பன்மாஹேஸ்வர ரக்ஷை" (16), "இவை மாஹேஸ்வரரே ரக்ஷித்தற்கு" (19) என்னும் தொடர்கள் இடம் பெற்றுள்ளன. மகேஸ்வரம் (மகா-ஈஸ்வரம்) என்பதற்குப் பெரிய சிவன் கோவில் (27) என்பது பொருள். சைவத் துறவிகள் மாகேச்வரர் எனப்பட்டனர். சிவபக்தர்களை உண்பித்தல் 'மாகேசுவர பூசை' என இன்றும் வழங்குதல் காண்க.

**மக்கட் பெயர்கள்**

இக்கல்வெட்டுக்களில் காணப்படும் பெயர்கள் பெரும்பாலும் சோழர் காலப் பிராமணர் பெயர்கள். அவற்றைக் கீழே காண்க.

நாராயணபட்டன் (1), நாலாயிரவன், குருகூரன் (குருகூர் நம்மாழ்வார் பிறந்த ஆழ்வார் திருநகரி) (4), சிர்ஷயராயன் (6), ஸ்ரீ கௌதமன் (7), ஸ்ரீ திருவருட்டுறையான், கூத்தன், பகவதி (9), சிராமபட்டன் (19), வில்லிபட்டன் சோமயாஜி (சோமரஸத்தைக் கொண்டு வேள்வி செய்த வேதியன் சோமயாஜி எனப்பட்டான்), ரிஷபவாகனன் (22), ஹஸ்யபட்டன் (23), சோமநாதன் (25), நக்கன், காசியபன் (28), சங்கரநாலாயிரபட்டன் (37), பிருந்த கோணங்கை (இது பராந்தகக் கோன் நங்கை என்பது). பராந்தகன் மதுராந்தக சோழன். அவன் பெயரைக் கொண்ட இடையன் பராந்தகக் கோன். அவன் மனைவி அல்லது மகள் பராந்தகக் கோன் நங்கை எனப்பட்டாள்).

# ஸ்ரீ வைஷ்ணவ குருபரம்பரை

திரு K. பட்சிராஜன், B.A., B.L., திருநெல்வேலி.

(முன் இதழ்த் தொடர்ச்சி)

ஸ்ரீகாகுளத்தில் நின்று புறப்பட்ட உடையவர் பிரஸித்தி பெற்ற சிங்கவேள் குன்றம் என்ற ஸ்தலத்தை சேவிக்க உன்னி, செல்லும் வழியின் சிரமத்தையும், ஆபத்துக்களையும் சிறிதும் லக்ஷ்யம் செய்யாதவராய் அஹோபிலம் என்றும் வழங்கப்பெறும் அத்தலம் சென்று சேர்ந்தார். அங்கே எழுந்தருளியிருக்கும் நரசிம்மமூர்த்தியைக் கிட்டி ஸேவித்து 'அங்கண் ஞாலம்' என்று துடங்கும் திருமங்கை மன்னன் பாசுரம் பத்தையும் ஸேவித்து அப்பெருமானை மங்களாசாஸனம் பண்ணி அப்பெருமானிடம் விடைகொண்டு வேங்கடமலை நோக்கிப் புறப்பட்டார்.

வேங்கடம் சேர்ந்தவர் முதலிலே பெரிய திருமலை நம்பியை ஸேவித்து நிற்க, நம்பியும் உள்ளம் பூரித்தவராய் அவரை நலம் வினவி அவர் திக்விஜய விவரமனைத்தும் கேட்டு மனம் மகிழ்ந்தார். பின்னர் உடையவர் நம்பி புருஷகாரமாகச் சென்று 'திகழ்கின்ற திருமார்வில் திருமங்கை தன்னோடும் திகழ்கின்ற திருமாலாரான' ஸ்ரீ வேங்கடேசனைத் தொழுது, பஞ்சாயுத பல்வித ஆபரணசோபையுடன் சேவை சாதிக்கும் அப்பெருமான் வடிவழகிலே ஈடுபட்டு லயித்து நின்றார். அப்பெருமான் 'அகலகில்லேன் இறையும் என்று' அவனை நீங்காது அவன் திருமார்பிலே கோயில் கொண்ட பெரிய பிராட்டியோடும் சேர்த்தியாக ஸேவை சாதிக்கும் அழகை யனுபவித்து அச்சேர்த்தி 'திருப்பல்லாண்டினால் காப்பிட்டு, ஆவித்துணையாய் அனைத்துயிர்க்கும் புருஷகாரியாய் 'சார்வு நமக்கென்றும் .....தேனமரும் பூமேல் திரு'' என்று ஆழ்வார் சாதித்த பாசுரத்தை அநுஸந்தித்து அப்பிராட்டியின் எல்லையற்ற தாயன்பைப் போற்றித் துதித்து நின்றார். அப்போது பெரிய திருமலை நம்பியும் உடையவர் திருவுள்ள ஓட்டம் உணர்ந்தவர் போன்று "வாரிமாருத" என்ற மாறன் பாசுரத்தைத் துடங்கி சேவித்து "வேரிமாருத பூமேலிருப்பாள் வினை தீர்க்குமே" என்று முடித்துப் பிராட்டியிடம் உடையவரைக் காட்டி அவருக்குக் காப்பிட்டு, தீர்த்தப்ரஸாதமும் ஸ்ரீ சடகோபனும் அளித்து அருள, உடையவரும் பரம சந்துஷ்டியடைந்தார்.

ஒருகால் திருவேங்கடமுடையான் தனது வடிவத்தே சிவச்சின்னங்களும் தரித்து அம்மூர்த்தியும் தன் வடிவுதானென்று தோற்றும்படி காட்டியதை "தாழ்சடையும் நீண்முடியும் ஒண்மழுவும் சக்கரமும்" என்ற பாசுரத்திலே முதலாழ்வார் ஸேவித்து அநுபவித்திருப்பதைக் கொண்டு சில சைவ விஷமிகள் இது எங்கள் சிவனது மூர்த்தமே என்று பிணங்கி துர்க்கக்ஷிகள் செய்துவந்தமை தெரிந்தார் உடையவர். உடையவரும் அவர்களை அழைத்து "எவன் பரமனோ அவன் தனக்குத் தாழ்ந்தவர் சின்னங்களையும் தரித்துக் காட்டித் தன் பரத்வத்தை பகிரங்கப் படுத்தியுள்ளான் அவ்வளவே" என்று கூறலும், பிணக்குச்சைவர்கள் ஆமாம். அதுவேதான் நாமும் சொல்கிறோம். எங்கள் சிவனே உங்கள் திருமாலின் சின்னங்களையும் தம்மிடம் காட்டித் தானே பரன் என்பதைக் காட்டியருளினார் என்பதுதான் எங்கள் கக்ஷி என்று உடையவரோடு ஒட்டியே வாதிட, உடையவரும் நிஸ்ஸந்தேகமாக வேதங்கள் கோஷித்த பரமன் ஸ்ரீமந் நாராயணனாயிருக்க இவர்கள் கூச்சலுக்கு நாம் அஞ்சுவானேன். இவர்கள் தாமும் தம் துர்க்கட்சியின் அப்ரமாணத்தைத் தெரிந்துகொள்ளட்டுமே என்று எண்ணியவராய் அவர்களை நோக்கி சரி! நம்மிருவர் கோட்பாடுகளையும் எவன் பரமனோ அவனிடமே விட்டு விடுவோம். உங்கள் பரமனது பிரத்யேக சின்னம் மழு. எங்கள் பரமனது தனிப்படை திருவாழி. இவ்விரண்டு சின்னங்களையும் இன்றிரவு இம்மூர்த்தியின் திருவடியின் கீழே ஸமர்ப்பிப்போம். திருக்காப்புச்

சேர்த்து வெளியே இருதிறத்தாரும் இருப்போம். காலையில் திருக்காப்பு நீக்கி ஸேவிப்போம். எவன் பரமனோ அதற்குரிய தனிச்சின்னத்தை அவன் கைக்கொண்டு நமக்கு ஸேவை ஸாதிக்கட்டும் என்று கூறலும், சைவர்கள் உடையவரின் நியாய புத்தியை வியந்து மெச்சி அவ்விதமே செய்து தெளிவடைவோம் என்று ஒப்பினர். அதன்படி திருவாழியும் மழுவும் திருவேங்கடமூர்த்தி திருவடிகளிலே ஸமர்ப்பிக்கப் பெற்றன. திருக் காப்பு சேர்க்கப் பெற்றது. இருதிறத்தாரும் இரவெல்லாம் வெளியே இருந்தனர். விடிந்ததும் திருக்காப்பு நீக்கப்பெற்றது. இருதரப்பினரும் தத்தம் உள்ளங்கள் துடிப்ப உள்ளே நோக்கினர். ஸ்ரீவேங்கடமூர்த்தியின் பாதங்களிலே ஸமர்ப்பிக் கப்பெற்ற திருவாழி எம்பெருமான் வலக்கரத் தேறி நின்று காட்சியளித்தது. மழுவோ வைத்த விடத்தே கிடந்தது. உடையவர் இக்காட்சியைக் கண்டு வியப்பேதும் அடையவில்லை. அவர் உள்ளத்தே இவ்விஷயத்தில் ஐயம் ஏதுமே எப் போதுமே எழுந்ததில்லை. உண்மை தன்னை வெளிக்காட்டிக் கொண்டதில் வியப்புக்கு இட முண்டா. இச்சோதனையில் ஈடுபட்ட சைவர் களோ மனமிடிந்து போயினர். உடையவர் அவர்களை நோக்கி மறைகளின் உண்மையை மாயத்தால் மறைத்து மக்களை மயக்கலாம். ஆனால் 'சத்யமேவ ஜயதே' என்ற வேதவசனம் பொய்க் குமா. வேதமுடிவான பொருளைக் கற்பிதமான ஆகமங்களால் மறைக்க முடியாதென்பதை இனி யேனும் உலகம் உணரட்டும் என்று சாந்தமாகக் கூறி ஸ்ரீவேங்கடேசனை நோக்கி ஸ்வாமீ! தேவரீர் திருவிளையாடலை உள்ளபடி உலகம் அறியும்படி செய்ய அடியேன் தேவரீரையே சோதனைக்குள் ளாக்கத் துணிந்துவிட்ட அபராதத்தை க்ஷமித் தருள வேண்டும்.

"மெய்யைத்தான் சிறிதுணர்ந்து நீவிதித்த மன்னுயிர்கள் உய்யத்தான் ஆகாதோ உனக் கென்ன குறைவுண்டோ".

நின்மூர்த்தி பரப்பிவைத்து, வணங்கும் துறை கள் பல பல வாக்கி மக்கள் தம் மதிவிகற்பால் பல பல சமயங்களைத் தோற்றுவித்துக்கொண்டு பிணங்கும்படி செய்வதுதான் உமது திருவுள்ளத் துகந்த விளையாட்டுப் போலும்!" என மனங் கனிந்து விண்ணப்பித்து அப்பெருமானை உள்ளம் நிறையக் கண்கள் நிறைய ஸேவித்து வணங்கி விடைபெற்றுக் கொண்டார்.

அங்கு நின்றும் போந்து எம்பெருமான் பத்தர்க் கெளியனாய் பார்த்தன் தேரூரும் சாரதியாய் அருளிய நிலையில் சேவை சாதிக்கும் திருவல்லிக் கேணிப் பார்த்தஸாரதியைத் தொழுது அவனது சௌலப்பியத்திலே ஈடுபட்டு, இருவரேற்றிய ஆச்சர்ய விளக்கொளியில் திருநாரணனைக் கண்டு களித்த பேயாழ்வார் அவதரித்த திருமயிலை (மயிலாப்பூர்) சென்று அவ்வாழ்வாரை ஸேவித்து மகிழ்ந்தார். அந்தப் புண்ய பூமியில் தான் தம் முடைய அவதாரத்துக்காகத் தம் தந்தையார் புத்ரகாமேஷ்டி யக்ஞம் செய்தார் என்ற நினைவும் அவர் உள்ளத்தே ஓடியது. மயிலையினின்றும் திருநீர்மலை சென்று அங்கு எழுந்தருளியுள்ள எம்பெருமானைச் சேவித்துப் பின் திருநின்றவூர் எழுந்தருளி 'நித்திலத்தொத்து' என்று மங்கை மன்னன் வாய்மணக்கக் கூறிய எம்பெருமானை வணங்கினார். பின்னர் திருவெவ்வுள் சேர்ந்து அங்கு பள்ளிகொண்ட கோலமாய்த் திகழும் எவ் வுட் கிடந்தானை ஸேவித்துக் கச்சிப்பதி நோக்கிப் பயணமானார்.

பின்னர் உடையவர் தன்னைச் செல்வப் பிள்ளையாகக் கருதி வந்து பெரிய பெருமாள் வேண்டத் தன்னை வெதும்பும் உளத்தோடு திருவரங்கப் பெருமாளரையிடம் அளித்தவரும், தன்னுடைய நித்திய திருவாராதனத்திலே ஸேவை ஸாதித்துக் கொண்டிருப்பவருமான ஸ்ரீ பேரருளாளர் உறையும் திருப்பதியான கச்சியம்பதி புக்கார். புக்கவர் திருக்கச்சி நம்பி புருஷகாரமாக ஸன்னதிக் கெழுந்தருளி, திருவத்தி யூரானை, "பேரணிந்துலகத்தவர் தொழுதேத்தும் பேரருளான னெம்பிரானை, வாரணிமுலையாள் மலர்மகளோடு மண்மகளும் உடன்நிற்பச் சீரணி மாட நாங்கை நன்னடுவுள் செம் பொன் செய் கோயிலினுள்ளே காரணி மேகம் நிறைதொப் பானைக் கண்டு கொண்டொடுய்ந்தொழிந்தோனே" என்று மங்கை மன்னன் பரவிப்பணிந்த படியே வணங்கித் தொழுதார். தம்முடை வாழ்நாளிலே வரதன் தமக்கருளிய படிகள் எல்லாம் அவர்

மனத்திரையிலே தோன்ற அவனது திருவருளிலே மூழ்கித் திளைத்தார். அங்குச் சில பகல் தங்கிப் புற மத வாதியயோடு வாதிட்டுத் தேவாதி தேவனை வரதராஜனே பரன் என்ற உண்மையை நிலை நாட்டினர்.

பின்னர் திருவெஃகாவில் சயனத் திருக்கோலத் தோடு ஸேவை சாதிப்பவனும், பத்தர்க்கெளிய னாய் அவர் சொல்வரைத் தங்கும் அளவுக்குத் தன் னைத் தாழ விட்டுக் கொள்ளும் ஸௌலப்யத்தை உடையனாய் சொன்ன வண்ணம் செய்த பெரு மானாய் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானை ஸேவித்து, பின்னர் அருகுள்ள பாடகம் முதலிய பல்வகை க்ஷேத்திரங்களையும் கிட்டி ஸேவித்தார்.

அங்கு நின்றும் திருக்கடன் மல்லை எழுந்தருளிப் புண்டரீகர் பூமாலைக்காகப் பாற்கடற் பாம்பணை யையும் உதறி வந்து தரைக் கிடையாகக் கிடந்த வனைத் தரிசித்தார். பின்னர் அங்கே அவதரித்து பூதத்தார் என்னும் திருநாமத்தோடு எம்பெரு மானைக் காண "அன்பே தகளியா, ஆர்வமே நெய் யாக, இன்புருகு சிந்தை இடுதிரியா"க் கொண்டு ஞானச்சுடர் விளக்கேற்றிய நற்றவமுடைய பூதத் தாழ்வாரை அடிவணங்கி அங்கு நின்றும் இட வெந்தை போய்ச் சேர்ந்தார்.

இடவெந்தையில் ஏரார் பொழில் சூழ்ந்த திருக் கோயில் புக்கு வளைமருப்பார் பன்றியாம் தேசுடைய தேவரான ஸ்ரீவராக நயினாரை வலங் கொண்டு வணங்கி அங்கு நின்றும் புறப்பட்டு மதுராந்தகம் சென்றார். அங்கு சென்றதுமே உடையவருக்கு முன்னைய நிகழ்ச்சிகள்யாவும் உளக் கண்முன் பளிச்சிட்டன. பேரருளாளன் பணியால் தாம் ஆசார்யனைத் தேடிப் புறப்பட்டுவரத் தம் மைத் தேடி வந்த ஆசார்யனைக் கிடைக்கப் பெற்ற தலமல்லவா அது!

தமது ஸ்வரூபம் அனைத்துக்கும் கால் கோள் கொண்ட தலமல்லவா மதுராந்தகம். அப்பழைய இன்ப நினைவுகளை எண்ணி மகிழ்ந்தார் எம்பெரு மானார். பின்னர் ஏரிகாத்த பெருமானை ஸேவித்து தாம் மந்திரோபதேசம் பெற்ற திருமகிழடியையும் வணங்கினர்.

அங்கு நின்றும் நல்ல நீர்வளமுடையதும் கண் கவர் கவினார் சோலைகளையுடையதும் இயற்கை கொழிப்பதுமான திருவயிந்திரபுரம் சென்றார். அத்தல வழகை யநுபவித்து, கருட நதியிலே நீராடிப் பின்னர் மூவராகிய ஒருவனாய், மூவுலகு முண்டுமிழ்ந்தளந்தானாய், தேவர் தானவர் சென்று சென்றிறைஞ்சுமவனாகிய சோதியைப் பிராட்டி, திருவடி திருவனந்தாழ்வான் இவர்கள் தவப்பல னாய் அடியர்க்கு மெய்யனாய் எழுந்தருளியுள்ள தெய்வ நாயகனைக்கிட்டி ஸேவித்து உள்ளம் நெகிழ்ந்தார். அங்கு நின்றும் புறப்பட்டுச் சித்திர கூடம் சென்று சேர்ந்தார். ஆங்கே "காருடை மஞ் ஞைக் கணமாட மாடே கயலாடு கானீர்ப் பழனம் புடைபோய்த் தேனுடை மாடக் கொடியாட" அவற் றோடு திருமால் திருமங்கையோடு ஆடக் கண்டு களித்த எம்பெருமானை மூவாயிர நான் மறையாளர் நாளும் முறையால் வணங்கச் சுடர்ச் சோதியாய் தேவாதிதேவன் திகழ்ந்து ஸேவை ஸாதிக்கின்ற சிறப்பை உன்னி மகிழ்ந்து அப்பரமனைப் போற் றிப் பரவினர். சித்திர கூடத்தினின்றும் புறப் பட்ட உடையவர் 'ஒரு குறளாய் இருநிலம் மூவடி மண்வேண்டி உலகனைத்தும் ஈரடியால் ஒடுக்கி ஒன்றும் தருக என மாவலியைச் சிறையில் வைத்த தாடாளன் எழுந்தருளியுள்ள காழிச் சீராம விண் ணகராகிய சீர்காழிப்பதி சேர்ந்து நின்மலனை விண்ணவர் கோனை வணங்கி மகிழ்ந்தார். பின்னர் வயலாலி மணவாளனையும் அவனைத்தனியே வழி பறிக்கக் கோலிப்பதிவிருந்த கொற்றவனை திரு மங்கை மன்னனையும் கிட்டி ஸேவித்தார். பின்னர் அங்கு அடுத்தடுத்துப் பதினொரு திருமுற்றத் தெம்பிரான்களையும் அவ்வவ்விடத்தே சென்று ஸேவித்து நன்னீர்த் தலைச் சங்க நாண்மதியைக் கண்டுள்ளம் பூரித்துச் சிறு புலியூர் சேர்ந்தார். மனம் கள்ளம் விள்ளும் வகை கருதிக்கழல் தொழும் அத்தலத்தே சல சயனத்துறையும் அருமாகடலமுதின் அந்தாமரையடிகளை வணங்கி மகிழ்ந்த உடையவர் அங்கு நின்றும் திருக்கண்ண புரம் போய்ச் சேர்ந்தார்.

'அஷ்டாக்ஷர ஸித்திக்ஷேத்ரம்' என்று பேர் படைத்த அப்பதிபரகால நாயகிக்குப் பரமன் மங் கல்ய சூத்திரம் அணிவித்த புகழ்படைத்ததன்றோ. பத்துப் பதிகங்களாலே பரகாலர் பரவிப் பணிந்த அத்திருப்பதியின் ஏற்றமனைத்தும் எம்பெருமானார் உள்ளத்தே தேக்கிட்டது. கண்டவரைச் சிலை யிலங்கு பொன்னாழி! திண்படை! தண்டொண் சங்கம்! என்று வாய் புலர்த்தவைக்கும் அத் தலந்தே தன தாளடைந்தார்க் கெல்லாம் சரண மாய் விளங்கும் ஆலின் மேலால் அமர்ந்தான் அடி யிணைகளில் கள்ளவிழும் மலரிட்டு இறைஞ்சிய உடையவர் அவன் தண்ணளியை அநுஸந்தித்து மன நிறைவு பெற்றார். அந்நிறைவே அவரை மங்கை மன்னவா மடலெடுத்தமையில் மண்டச் செய்தது. அதன் காரணமாக அவர் உள்ளம் மங்கை மன்னன் மடலெடுத்த திருப்பதியான திரு நறையூரை நாடியது, அங்கே விரைந்தார். விரைந் தவர் எம்பெருமான் திருக்கோயிலின் பொன்னிய லும் மாடக் கவாடம் கடந்துபுக்கு உள்ளே ஓர் இன்னிளவஞ்சிக் கொடியுடனே மன்னிய மரகதக் குன்று போலவே ஸேவைஸாதிக்கும் நம்பியையும் நாச்சியாரையும் சேர்த்தியழகிலே ஸேவித்து அவ் வழகுக்குப் "போற்றி" என்றே கைகளாரத் தொழுது காப்பிட்டார். நாச்சியார் ப்ராதான்ய மான திருப்பதியாகையாலே உடையவர் பெருத்த ஆர்வமுடன் ஸேவித்து உசிதமான உபசாரங்கள் அனைத்தும் செய்து உவந்தார்.

—தொடரும்

# சமயப் பொருட் குறிப்புக்கள்

திரு. என். எஸ். தாத்தாச்சாரியார், தஞ்சை.

### 1. பெருமான் என்ற சொல் வழக்கின் சிறப்பு.

'பெருமான்' என்பது எல்லாம் வல்லவனாய், அருள்கொண்டு அனைத்துலகையும் காத்தவரும் இறைவனுக்கு இட்ட தூய தமிழ்ப் பெயராகும். இச்சொல்லை எல்லாச் சமயத்தினரும் கையாள்வார்கள். "பெருமான்", "பெம்மான்" என்று இச்சொல்லின் பொருளாகும். வைணவத்தில் மனிதர்களை மனிசர், மாமனிசர் சிறு மாமனிசர் என்று பிரித்துப்பேசுவதும் உண்டு. உண்டியே, உடையே, உறைவிடமே பெரும்பொருள் என்று பாரித்து நிற்பவர்களே மனிசராவர். மனிதர்களைப் போல் தோற்றத்தில் தென்பட்டு, ஆனால் உள்ளத்தாலும் உயர்வாலும் மனிதர்களை விட மேம்பட்டவர்களான ஆழ்வார்களைச் சிறு மாமனிசர் என்பர். இவர்களிலும் மிகவும் உத்தமனாய் உலகம் போற்ற நின்றவனைப் பெருமான் என அழைப்பார்கள். "புருஷோத்தமன்" என்ற சொற்பாங்கு இச்சொல்லிலும் ஒட்டி நிற்கிறது. பெருமை பெற்ற ஆட்சியை உடையவன் என்றும் பொருள் கூறலாம்.

### 2. ஆழ்வார்கள் யார்? ஆசாரியர்கள் யார்?

பகவானுடைய கல்யாண குணங்களிலும் அவனுடைய ஏராரந்த வடிவங்களிலும், "காலாழும் நெஞ்சழியும் கண் சுழலும்" என்ற வகையில் உள்ளத்தைப் பறிகொடுத்து ஆழ்ந்து நிற்பவர்கள் ஆழ்வார்கள் இவர்கள் சைவர்கள் கூறும் சமய குரவர்கள் வகையைச் சேர்ந்தவர்கள். இறைவனது அனுபவத்தைத் தம்முள்ளே அடைத்து வைக்க முடியாமல், பெருக்காறு கிண்ணகம் எடுத்தாற் போல வெளியே தமிழ்ப் பாசுரங்களில் வாய்விட்டு அலற்றியவர்களே இவர்கள். ஆசாரியர்கள் என்பவர்கள், அரும்பெரும் மெய்ந்நூல்களில் கூறப்பட்ட, மனிதர் உய்யும் வகையில் வகுக்கப்பட்ட, அருங்கருத்துக்களைக் குழந்தை வாயிற்குத் தக்க குளிகைபோல் உருட்டித் திரட்டி, தாமும் நடத்திக்காட்டி, உபதேசம் செய்தவர்கள் ஆவர். இவர்கள் சைவ சமயத்தில் கூறப்பட்டுள்ள சந்தான குரவர் வகையைச் சார்ந்தவர்கள். ஆழ்வார்கள் கிளிகளை ஒப்பர்; ஆசாரியர்கள் அன்னப் பறவைகளை ஒப்பர்.

### 3. வைணவர்களின் பெயருக்கு முன்பு உ. வே. என்ற இரு எழுத்துக்களைச் சேர்த்துக் கூறுவதின் உண்மை.

'உபய வேதாந்தம்' என்பதன் சுருக்கமே உ. வே: என்பது.

உ - உபயம்; அதாவது இரட்டை, வே — வேதாந்தம்; சமய விழுப் பொருள். தமிழ் மொழியிலும் வடமொழியிலும் உள்ள வைணவ சமய நூல்கள் ஆகிய இரு பகுதிகளிலும் தேர்ச்சி பெற்றவர்கள் என்று பொருளாகும்.

### 4. "தத்துவம்" என்ற சொல்லின் கருத்து.

இச் சொல்லிற்குக் கூறப்படும் கருத்துக்களில் ஒருவகையை இங்குக் குறிக்கலாம். 'தத்வமஸி' என்பது வேதங்களில் கூறப்பட்ட சொல்லாகும். அதை 'மகா வாக்யம்' என்றும் அழைப்பதுண்டு. இச் சொல்லிற்குப் பொருள் கூறும் வகையில் வைதிக மதங்கள் பலவாயின. தத் - அது, த்வம் - நீ, அஸி - இருக்கிறாய், என்ற பொருள் கொண்ட இச் சொல்லே உண்மை விளக்கத்திற்கு அடிப்படையாக அமைந்ததால், "உண்மைப் பொருள்" என்ற கருத்தில் "தத்துவம்" என்ற சொல்லைக் கையாளுகிறார்கள்.

### 5. வேதத்திற்குத் "த்ரயீ" என்றும் "ச்ருதி" என்றும் பெயர் வரக் காரணம்.

முதன் முதலில் வேதமானது கூறு கட்டாக் கனிபோல் கலந்திருந்தது. அதன் பின்பு இறைவனது அவதாரம் என்று கூறப்படும் "வியாசர்" என்பவர் இதை நான்கு பகுதிகளாகப் பிரித்தார். பிரிக்காமல் இருந்த வேதத்திற்கு மூலவேதம் என்று பெயராகும். அதை நான்காகப் பிரித்து இருக்கு எசுர், ஸாமம் அதர்வணம் என்று பெயரிட்டு வழங்கியதால் வியாசருக்கு "வேத வியாசர்" என்று பெயர் ஏற்பட்டது. இவைகளில் இருக்கு, எசுர் ஸாம வேதங்களில் காணப்படும் மந்திரங்கள், மனிதர்கள் வாழ்ந்து உய்யும் வகைகளுக்கே அமைந்தனவாகும் அதர்வண வேதமோ மனிதர்களைத் துன்புறுத்திக் கொடுமைப்படுத்தவும் ஏற்புடையதான தாமச வழியைக் காட்டும் விதத்தில் அமைந்துள்ளது. ஆகவே. ஸாத்விகமான தன்மையுடைய நம் முன்னோர்கள் அதர்வண வேதத்தை விலக்கி, மிகுதி மூன்று வேதங்களை மட்டும் ஒரு தொகையாகக் கூறி, அதை த்ரயீ' என்றழைத்தார்கள். வேதமானது குருமுகமாகக் கேட்டே ஓதவேண்டிய நூலாகும், புத்தகத்தைக்கொண்டு படித்து அறியக் கூடிய நூலாகாது. அதனாலேயே அதற்கு "எழுதாக் கிளவி" 'அநாலேக்யஸாஸ்வதி' எனவும் பெயர் ஏற்பட்டது. 'ச்ருதி' என்பது காதைக் குறிக்கும் வடமொழிச் சொல்லாகும். காதின் வழியாகக் கேட்டு ஓதி அறியக் கூடியதாதலால் வேதத்திற்கு 'ச்ருதி' என்ற பெயர் ஏற்பட்டது.

—தொடரும்

# பாரதப் பண்போவியங்கள்

முதுபெரும் புலவர் திரு. புரிசை சு. முருகேச முதலியார், திருவண்ணாமலை.

## வியாசர் (2)

### வியாசர் வெறும் புராணிகரா ?

கொள்ளை கொள்ளையாகக் கட்டுக்கதைகளை உண்டுபண்ணிவிட்டனர் வியாசர் என்கின்றனர். இக்குறை, இன்று பெரும்பாலும் தெய்வக்கொள்கையில் மாறுபட்டவர்களாலேயே பரப்பப்படுகிறது. ஆனால், இக்குறைபாடுகளைக் கூறத் தோற்றுவாய் செய்தவர்கள் அவர்களல்ல. இது, தெய்வநலம் பேணும் அன்பின் பெருக்கத்திலிருந்தே தோன்றுகிறது. அன்பர்கள் இதனை வேண்டுமென்று செய்யவில்லை. அவர்கள் ஒருபுறம் இல்லாத சிறப்பைப் பேச எண்ணமிடுகிறார்கள். அதன் பயனாக இருப்பிற்கும் ஒரு குறை வந்து சேருகிறது. அது, மாற்றார்கைவாளாகச்சென்று நம்மையே எதிர்க்க வருகிறது. கற்றவர்கள், வியாசர் செய்தளித்த புராணங்களையெல்லாம் அவர் பெயராலேயே பரப்பி வருகிறார்கள். ஆனால், அவர் அருளிய ஞான நூல்களை மட்டும் வேறுபெயர்களாலே விளம்புகிறார்கள். இதனால் உலகமக்கள் வியாசரை வெறும் புராணகதைக்காரரென மதித்துவிட ஏதுவாகிறது.

உலகம் அறிந்ததொரு ஞானநூல் பகவத்கீதை. இன்று அரசியல் பொருளியல் வாழ்வியல் ஆதிய நிலையற்ற பொருள்களைக் கடந்து, இவற்றிற்கெல்லாம் மேலான ஒரு பெருநிலை இப்பாரதநாட்டில் உண்டென்பதனை, உலகத்து அறிஞர் முன்வைக்கவேண்டுமானால், எதை வைப்பது? **பகவத்கீதை** ஒன்றைத்தான் காட்டமுடியும். அதைவிடச் சிறந்த சமய நுட்பங்கள் இருப்பினும், அவை பாரதநாடு முழுதும் அறியும் வகையில் பரவவில்லை. அன்றியும், தமிழகத்தில் தலைசிறந்து விளங்கும் வைணவமும் சைவமும் அடிப்படையாகக் கொள்ளும், முப்பொருளுண்மைக்கும் பகவத்கீதையில் இடமுண்டெனச், சமயப்பெரியோர்கள் இடங்கண்டு இசைத்துவருகின்றனர். இவ்வளவு பெரிய நூலை அருளிச்செய்த அண்ணல் யார்? வியாசரல்லவா? சிந்திக்கவேண்டும்.

பகவத்கீதையின் ஆசிரியர் கண்ணபிரான் என்பதுதானே, கற்றவரும் மற்றவரும் கழறுவது? கண்ணபிரான், பாரதப்போரில் ஒருநாளில் மிகச் சிறு நேரத்தில், அருச்சுனனுக்கு அருளிய கருத்துக்கள் சில. கண்ணன், அருச்சுனன் ஒருவனுக்கே, அந்த உயர்ந்த கருத்தை உதவினன். அவனுடன் பிறந்தவர்களும், தனது மலரடிகளைத் தவிர மாண்பொருளில்லையென மதித்திருந்தவர்களுமாகிய, நால்வரில் ஒருவருக்கும் அதனை உதவவில்லை. படைநடுவில் பார்த்தனுக்குப் பரமன் ஒரு நல்லுரை நவின்றானென்பதனையே பொருளாகக்கொண்டு, தமது உள்ளத்தில் ஊறிய வாலறிவின் வெண்ணத்தையெல்லாம், வாரி வழங்கினர் வேதவியாசர். அந்நூலுக்குப், பகவான் அருளியது—இதுபகவத்கீதை, யென்னும் உயர்ந்த திருப்பெயரை இட்டவர் யார்? பகவானே தமது நூலுக்குத் தாமே செய்துகொண்ட சிறப்பா அது? அகக்கண்ணைத் தனது கருத்தகத்தில் இருத்திக்கொண்டு, அவனது உளப்பாங்கை உலகறிய விரித்து விளங்கவைக்க வினாவிடையாக்கி, அருச்சுனனாக நின்று கேட்டு, அமலனாக நின்று விடையருளிய அண்ணல், வியாசர்தான் என்பதனை உலகம் உணரச்செய்தால், வியாசர் வெறுங்கதைக்காரரல்லர், பெருங் கருத்துக்காரர்தான், என்பது விளங்கும். வியாசர் இந்தப் பெருநூலில் அருளிய எழுநூற்றென்றாகிய சுலோகங்களும், மதிப்பிடவரிய மாணிக்கங்களெனச் சான்

றூர்கள் சாற்றுகிறுர்கள். இந்நூலின் கருத்தாழம் ஒருபக்கமிருக்க, வேதம் படிக்க உரிமை பெருதவர்களும், ஏதம் அகற்றும் இந்நூலைத் தடையின்றிப் படிக்கலாம். இது அக்காலத்திருந்த வேற்றுமையகற்றச், செல்லும்வாய் நோக்கிச்செய்த திருத்தம். இஃதன்றியும், வியாச சூத்திரமென்ற பெருநூலும், அதற்கு ஒவ்வொருதுறையிலுள்ள பெரியோர்களும் அருளிச்செய்துள்ள பேருரைகளும், வியாசமாமுனிவர் ஒரு அறிவுப் பெருங்கடல் என்பதனை நிலையிட நிற்பனவாகும்.

## வியாசர் அருளிய வேதம்

நான்கு வேதங்களையும் குறைவறக் கற்று நிறைவுற உளங்கொண்ட நீர்மையுள்ள அம்முனிவனுர், அதன் உள் பொருளனைத்தையும் கூட்டி ஐந்தாம் வேதமென ஒரு அரும்பெரு நூலை ஆக்கினுர். அதுவே மா பாரதம். பாரத நாட்டிலுள்ள எந்த நூலுக்கும் இல்லாத சிறப்பு இந்நூல் பெயருக்குத் தரப்பெறுகிறது. இராமாயணத்திற்கும் ஸ்ரீமத் வால்மீகி இராமாயணம் ஸ்ரீமத் கம்ப ராமாயணம் என்ற சிறப்பே தரப்பெறுகின்றது. இப்பாரதத்திற்கோ **மகா பாரதம்** என்ற மிகச்சிறந்த பெருமையைப் பெரியோர்கள் அளித்துவந்துளர்.

வேதம்படித்தவர்கள் இதனை வேத சாரம் என்பராம். உபநிடதம் கற்றவர் இது உபநிடத ஊற்று என்பராம். அற நூலறிஞர்கள் இதனை அறநூல் விளக்கம் என்பராம். இன்பநூல் கண்டவர் இது மதனவேள் வழிநூல் என்பராம். வேதாந்தங்கற்ற மேலவரோ இது வீட்டின்பம் நாட்டும் மேல்நூலென விளம்புவராம். பாரதத்திற்கு இப்படியொரு விளக்கந்தருகிறுர் தமிழ்க்கவிஞர்.

"மறையுணர்ந்தோர் மறையென்ன உபநிடத்
தோர் உபநிடத்தின் வருக்கம் என்ன
அறைதரும நூலாய்ந்தோர் தருமசாத்
திரமென்ன அவனிமீதில்
நிறைவுறு காமம் பயின்றோர் மதனசாத்
திரமென்ன நிலையான் மிக்கோர்
துறைபடுவே தாந்தமெனத் தொகுத்தெடுத்
தோர் இதிகாசம் சொற்ருன் தூயோன்"
—நல்லாப்பிள்ளை

## அழியா அடிப்படை

ஒரு பொருளைத் தேடுவது பெரிதல்ல, அதைச் சிதைவுருது காப்பதே பெரிதெனக் கழறுவர். தனது பெருநூல் நிலைபேறுள்ளதாக நிற்க, வியாசர் செய்த செயல் மிக உறுதியானதாகும். அவர், "முன்னவனே முன்னின்றால் முடியாத தொன்றுண்டோ" என்றபடி காப்புத்தெய்வமாகிய கணபதியையே முற்படச் செய்தனராம். "அடியார் முயற்சித்திறம் திருகாமல் விளைவிக்கும் மதயானை வதனச் செழுங்குன்றே" ஒரு பொற்குன்றில் தனது நூலைப்பொறிக்க வேண்டிக்கொண்டனராம் வியாசர். இந்த அடிப்படையில் இது நிலைநிற்கின்றதாம். எங்கே நிற்கின்றது? "நீடாழி உலகத்தில்" எப்படி நிற்கின்றது? "மறை நாலோடு ஐந்தென்று" நிற்கின்றது. வியாசர் உலகத்தின் இயலையெல்லாம் ஒருங்கு சேர்த்துப் பாரதமெனவொரு நூலைப் பண்ணினுர். பல்வேறு வகைப்பட்ட மக்களுளங்களையெல்லாம் ஒருங்கே கவரும் செயல்கள் பாரதநூலில் இடங்கொண்டிருக்கின்றன. மக்கள் மனநிலைக்கு எட்டாத செயல்கள் ஒன்றும் பாரதத்தில் இல்லை. மக்கள்பால் வளரும் நலந்தீங்குகளையும் அவற்றால் அவற்றினைத் தேடியமக்கள் அடைந்த இன்ப துன்பங்களையும் பாரதநூல் மக்களின் கண்முன் வைத்துக் காட்டுகிறது. பழமையில் பழமையான பாரதக்கதையை மக்கள் புதுமையில் புதுமையானதாகக் கொண்டு போற்றுகின்றுர்கள், எத்தனை முறையானுலும் கேட்கிறுர்கள். அது ஒரு தெவிட்டாத செவியமுதமாகத் திகழுகிறது. எவ்வளவு எளியவரானுலும் பாரதக்கதையை அறிந்திருக்கின்றுர்கள். பாரதத்தில் ஒரு எடுத்துக்காட்டு அவர்களுக்கு மிக எளிதாக வந்து விடுகிறது. கொடியவர்களைக் குறிக்க அவன்

ஒரு **துரியோதனன்** என்கிறார்கள். வஞ்சகர்களை அவனொரு **சகுனி** யென்கிறார்கள். நல்லவர்களை அவரொருதருமராச னென்கிறார்கள். கொடையாளிகளுக்குக் **கலியுகக் கன்னன்** என்றே பெயரிட்டுவிடுகிறார்கள். வயது முதிர்ந்தும் கெட்டகுணத்தை விடாத கொடியவர்களைக் கண்டால், **திருதராட்டிரன், காந்தாரி** யெனக் கழறுகிறார்கள்.

இப்படி யெளியவர்களைத்தான் பாரத நூல் இழுக்கின்றதென ஒரு படித்தாக எண்ணிவிடுவதற்கும் இல்லை. மிகப் பெரியோர்கள் பேச்சில்தான் பாரதம் பயிலுகிறது. "மிடுக்கிலாதானை வீமனேவிறல் விசயனே வில்லுக் கிவனென்றும்" என வீமன் மிடுக்கையும், விசயன் வில்லாற்றலையும், **நம்பியாரூரர்** நவில்கின்றார். "அடுத்தானை யுரித்தானை அர்ச்சுனர்க்குப் பாசுபதம் கொடுத்தானை" யெனச் சொற்குறுதிக் கொருவராகிய **அப்பர்** சொல்கிறார். பாரதக்கதை வடநாட்டவர்க்குரியது அது நமக்கேன்? என இன்று காணும் வேற்றுமை ஒன்றும் அன்றிருந்ததாகத் தெரியவில்லை. சோழனும் பாண்டியனும் பாண்டவருக்குத் துணையாகிப் பாரதப் போரில் உயிரையே உதவினார்கள். **பெருஞ்சோற்றுதியஞ் சேரலாதன்** பாண்டவா படைகளுக்குப் பதினெட்டு நாள்களும் பெருவிருந்திட்டுப் பேணினான். அவனை அக்காலத்துப் பெரும்புலவரான **முரஞ்சியூர் முடிநாகனார்** பாராட்டினார். அவருடைய "அலங்குளைப் புரவி ஐவரொடு சினைஇ நிலந்தலைக்கொண்ட பொலம்பூந் தும்பை ஈரைம்பதின்மரும் பொருதுகளத்தவியப் பெருஞ்சோற்றுமிகுபதம் வரையாது கொடுத்தோய்' என்ற பாடலைப் புறநானூறென்னுந் தமிழ்ப் பெருநூல் தாங்கி நிற்கிறது. ஐங்கரக் கடவுளால் அடிப்படைகொண்ட நூல் அழிவின்றி மறைவின்றி, நிலையுற்று ஒளிபெற்று மிகவும் இளநலந்திகழ ஒலியுருவமாக இப்படி மக்களுளந்தொறும் உலாவி வருகிறது. எத்தவஞ்செய்து இதனை இயற்றினரோ வியாசர் தெரியவில்லை.

### வியாசர் தோற்றம்

இவர் தந்தையார் **பராசரர் என்பார்.** அவர் உலகத்திற்கு அறிவுத்தொண்டியற்ற ஒரு மாமகனை அளிக்கவேண்டுமெனப் பல்லாண்டுகள் தவமிருந்து இவரைப்பெற்றார். வியாசர் மிக இளமையிலேயே தந்தையின் சிந்தனைக்குச் சிறப்பளித்த கலைச்செல்வராகக் காட்சியளித்தார்.

வியாசர் திருமேனி செம்பொன் போலச் சிவந்த நிறமுடையது. அவர் சடாமுடி பொன்கொழுந்து விட்டது போலப் பொலிவுடையது. திருவெண்ணீற்றால் நிறைந்த திருநுதலோடு திகழ்பவர் வியாசர். வியாசர் ஒருபோது அவரது அன்னையின் அடிகளில் வீழ்ந்து வணங்கினராம். இவர் நெற்றியிலிருந்த வெண்ணீறு அவளது அழகினுக்கோர் அழகளித்ததாம். இதனைச்சொல்லுகின்றவர், பன்னிருதிருநாமமிட்ட ஒரு சிறந்த வைணவ சீலர். "தொழுது நெற்றியின் விபூதியால் அன்னைதன் துணையடித் துகள்நீக்கி விழுதுடைத்தனி ஆல்என நின்றதொல் வியாதன்" என இவரது நெற்றியில் திகழ்ந்த நீற்றையும், நோன்பின் நோன்மையையும் வியந்தோதுகின்றார் வில்லிபுத்தூராழ்வார். மேற்சொன்ன சொற்றொடரில் "**விழுதுடைத் தனிஆல்**" எனவரும் சொற்றொடர் மிகுந்த பொருளாழம் உள்ளது. அது வியாசரின் விரதத்தின் திட்பத்தையும் வில்லிபுத்தூரர்கண்ட உலகியற் பொருள்களின் கூர்ந்த நோக்கத்தையும் வெளிப்படுத்தும் மேன்மை யுடையது.

ஆலமரங்கள் விழுதுக்களையுடையன. இருப்பை மரங்களுக்கு முடிச்சுக்கள் உண்டு. ஆலமரம் பழமைப்பட பழமைப்பட இந்தவிழுதுக்களின் எண்ணிக்கையும் மிகுதியாகும். விழுதுக்கள் தூண்களைப் போல நின்று மரத்தைத் தாங்கிக் கொள்ளுந் தகைமையுடையன. தாங்குவதோடன்றி நிலத்திலுள்ள மரஉணவுப் பொருள்களைத் தேடியெடுத்துத் தாய் மரத்தின் கிளைகளுக்கு ஊட்டவுஞ் செய்கின்றன விழுதுக்கள். ஆலம் விழுதுக்

கள் தொங்கிக்கொண்டு வளர்ந்துவந்து பூமியில் தோய்கின்றன. நிலத்தில் வேரூன்றும்வரையில் அவ்விழுதுக்கள் தமது தாய்மரத்தின் துணையால் வளரு கின்றன. வேரூன்றிவிட்ட பிறகு அவை தாய்மரத்தின் துணையை யெதிர் பார்ப்பதில்லை. விழுதுக்கள் தாமே தேடித் தாய்மரத்தைக் காப்பாற்று கின்றன. மற்றொரு மிகச்சிறந்த பண்பும் இந்த ஆலின் விழுதுக்களின்பா லுண்டு. அடிமரத்தில் இளங்கிளைகள் எந்நாளி லும் கிளைத்துக்கொண்டே இருப்பதுண்டு. ஆனல் ஆலின் விழுதில் எந்தக்காலத்தி லும் ஒரு சிறுதளிராவது தளிர்த்ததென் பது எவ்விடத்திலும் காணமுடியாது, அடிமரத்திற்குள்ள வேருண்டு புறண் உண்டு பாலுண்டு பசையுண்டு. விழுது களுக்கும் அடிமரங்களுக்கும் மற்றவகை யினுல் வேற்றுமையொன்றுங் கிடை யாது. ஆனல், மழமழத்து வானுற வளர்ந்து இளநலத்தோடு கவர்ச்சிக்கிட மாக இருக்கும் விழுதுக்களில் ஒருதளிர் ஒருகொழுகொம்புவிட்டதென்பது மாத் திரம் இல்லை.

தான் மணஞ்செய்துகொள்ள வேண் டும், தனித்து வாழவேண்டும் என்ற விருப்பமே, சிறிதும் இல்லாமல், தனது பெரிய குடும்பத்திற்காகத் தன்னையே உதவித்தாங்கும் ஒரு உத்தம இளைஞனை ஒத்தது ஆலின்விழுது.

இருப்பை மரத்தில் முடிச்சு கட்டுதல் அம்மரத்திற்கு வரும் ஒருநோய். அந் நோய்பட்ட மரங்கள் காய்ப்பு குறைந்து விடும். அந்நோய் வளர வளர அது ஒவ்வொரு கவடுகளுக்கும் பரவி மழைநீர் தங்குவதற்கு அம்முடிச்சுகளில் இடமுண் டாகிக் கிளைகளில் சாக்காடு விழுந்து முறிந்து விழுவதற்கு இடமாகும். ஒரு குடியில் பிறக்கும் கீழ்மையுள்ள மக்களுக்கு உவமைப்பொருளாக உதவு கின்றது இந்த இருப்பைக்குத் தோன்றும் முடிச்சுக்கள். இது போலன்றி விழுது போல் மிகுந்த நற்குணம் படைத்த வியாசரை மகனுகக்கொண்ட **பரிமள கந்தி** யென்னும் அவருடைய அன்னை யை, விழுதையுடைய ஆலமரம்! அதற் கென்னகுறை, எதையுந்தாங்கிக்குடிகாக்க வல்ல பண்புள்ள மகனைப்பெற்ற மகராசி யென்பாராய் "விழுதுடைத்தனி ஆலென" என்றருளிய வில்லிபுத்தூராரின் உலகியற் பொருள்களின் உணர்வு எவ் வளவு அறிவுயர்ந்தாக அமைகிறது! உளங்கொளற்பாலது.

## அற்றவருக் குற்றதுணை

அரக்கால் ஒருவீட்மைத்துப் பாண்ட வர் ஐவரையும் அதிற்குடிப்புகச் செய்து கொல்லவகை செய்தான துரியோதனன். அதன் உண்மையை முன்னதாகவுணர்ந்த னன் வீமன். அவன் அந்தத் தீங்குள்ள மனைக்குத் தானே தீவைத்து உறக்கத்தி லிருந்த உடன் பிறந்தாரையுந் தாயையும் தூக்கிக்கொண்டு ஒரு சுரங்கத்தின்வழி யாகப் பெரிய கானகமொன்றைக் கண்ட னன். அங்கு இடும்பியென்னும் அரக்கி வந்து வீமனை விரும்பி மணம் வேண்டு கின்ருள். அவளுடைய அண்ணனுன **இடும்பன்** என்பவன் வீமனைப்போருக் கழைத்துப் போரிட்டு மாண்டுபோகின் ருன. முன்பின் தெரியாத ஒரு பெருங் காட்டில் சண்டைக்குவந்தவன் உடன் பிறந்தாளின் மன்ருட்டத்தில், வருந்தி நிற்கின்றனர் பாண்டவர். பாண்டவர் களின் வயதோ மிக இளமை. பகைவர் கூட்டமோ மிகப்பெரியது. அரக்கு வீட்டில் பட்டுத் தேறிய பாண்டவர் களுக்கு இனியென்ன? செய்வது எங்கு செல்வது? என்று ஒன்றுமே தோன்ற வில்லை அந்தக்கடுமையான கானத்தில் வேதவியாசர் அங்குவந்து அவர்கள் முன்னர் தோன்றினுர். ஏன் வந்தார்? அந்த துன்பச் சூழலிலுள்ள இளைஞர் களின் துன்பத்தை நீக்குவதற்காகவே வந் தார். மெய்ம்மையான தவமுடையவராம் வியாசர். மறைமுதல்வராம் அவர். அச்சிறுவர்கள் ஐவரும் போற்றினராம். எப்படி போற்றினர்? பக்தியின் மிகுதி யோடும் பணிவோடும் போற்றினராம். இந்த அண்ணலைக்கண்ட அளவில் அவர் களுக்குண்டாகிய மகிழ்ச்சி, முத்தி யடைந்தவர்களுக்கும் உண்டாகாதாம், முத்திப்பேற்றைவிடப் பெரியவரின் காட்சிப்பேற்றைப் பெரிதாக எண்ணி

ஞர்களாம் அவர்கள். வில்லியின் இந்தக் கருத்துக்கள் நிறைந்ததொரு கவியைக் காணலாம்.

"அத்தினத்து அவர்வயின் அவலம் ஆற்றுவான்
மெய்த்தவப் பழமறை வியாதன் வந்தனன்
பக்தியில் சிறுவரும் பணிந்து போற்றினர்
முத்திபெற் றவரினும் முற்றும் சிந்தையார்."

அஞ்ஞான்று பாண்டவர்களுக்கு வியாசர் நீங்கள் இந்த இடும்பவனத்தில் சில காலம் தங்கிச் செல்லலாம். ஆனால் இங்கிருந்து நீங்கள் நாடத்தக்க இடம் வேத்திரகீயம். அங்கு நீங்கள் இந்த அரச உருவொடு செல்வது நன்றல்ல. பகை வலுத்தகாலத்தில் மறைந்துறைவது நலமாகும் நீங்கள் அந்தணர் வடிவொடு அங்குசென்றிருக்க வேண்டும் என்று இப்படி சட்டதிட்டமாகக் கட்டளையிட்டனராம் வியாசர். பிறகு நாங்கள் என்னசெய்ய வேண்டும் எங்கு செல்ல வேண்டும் என்று இளையவர்களும் கேட்கவில்லை. வியாசரும் சொல்லவில்லை. மறைந்துவிட்டார். "மூத்தோர்சொல் வார்த்தை அமிர்தம்" என்ற கருத்துடைய ஐவரும் அப்படியே நடந்தார்கள். பார்ப்பனச் சிறுவர்போல் பார்ப்பன மக்களிடையே பயின்றுவந்து பகனென்னும் அசுரனால் வேத்திரகீய வேதியருக்குற்றிருந்த இடுக்கண்களைக் களைந்து, பாஞ்சாலன்மகளின் திருமணச் செவ்வி தெரிந்து, பாஞ்சாலத்தை நோக்கிப் புறப்பட்டுக் காட்டுவழியடைந்து, பாஞ்சாலம் எங்கிருக்கிறது எப்படிச் செல்வது எவ்வளவு தூரத்தது என்று ஒன்றுந் தோன்றாது தியங்கும் பாண்டவர்களுக்குத் தோன்றாத் துணையாகவந்து தோன்றினர் வியாசர். அவர் அங்கு தோன்றிய தோற்றம் நீரற்ற கானகத்தில் நெடுவழிச்சென்று நீர்வேட்கையால் வருந்துவோருக்கு நீர் நிறைந்த குளம் ஒன்று நேர்பட்டால் எப்படியிருக்குமோ அப்படியிருந்ததாம் பெருமுனி வருகை.

"சார தந்திரத்தின்மிக்க
தபோதனன் சதுர்வேதங்கள்
பாரதந் தன்னோடு ஐந்தாம்
படியெனப்பகர்ந்த மூர்த்தி
நாரத முனியை யொப்பான்
நராதிபர் நடந்து செல்லும்
நீரத நெறியில் வாவி
நிறைந்தநீர் என்னநின்றான்"

என அழகுறப் பாடியிருக்கின்றார் வில்லிபுத்தூரர். வியாசர் எதிர்வந்தார் என்று இசைக்காமல், நின்றார் என்றிசைத்த நேர்மை உளங்கொளற்பாலது. வியாசர் தன்மைக்கும் நிறைவிற்கும் பெருமைக்கும் உவமையாகவந்த திருக்குளம் வரவும் போகவும் முடியாததானதால் வழிப்போக்கிற்கு எதிர்நிற்கும் குளத்தொடு ஒப்ப வியாசரையும் நின்றார் எனக்கூறி நேர்மைப் படுத்தினர், கவிமக்கவும் நுண்மையுடையவராதலால். முனிவர், இற்றைப் பகலும் இரவும் நிற்காமல் நடந்தால்தான் நீங்கள் பாஞ்சாலம் நகரத்தை அடையலாம் என வழியின் நெடுமையைக் கூறினர். மேலும் பாஞ்சாலியின் மணமாலையைப்பெற்ற பிறகே நீங்கள் இந்த வேடத்தில் நின்றும் வெளிப்படுவது ஆண்மைக்குரிய செயலாகும் என்றும்கூறி வியாசர் சென்றுவிட்டனராம்.

"இப்பகல் இரவும்வைகாது ஏகியாங்
கெய்தும் ஆங்கண்
அப்பகல் மன்றல் பெற்றால் தோற்றுதல்
ஆண்மை யென்றும்
செப்பியே முனிவன் போகச் சிறுவரும்
பெரிய கங்குல்
மைப்புறப் பார்த்தன் செங்கை மணிவிளக்
காரப் போனார்"


எனவரும் இப்பாடலில் ஒரு பெரியவர் இதனைச் செய்யுங்கள் இது உங்களுக்கு நன்மையாகும். அவ்வளவுதான் என்று கட்டளையிட்டுச் சொல்லுவதெப்படியோ, அந்தப் பெருமித ஓசையும் உட்பொருளும் நிறைந்துவருதலைக்காணலாம். கொஞ்சம் தங்கிச்சென்றால் என்ன? மாலைபெறுதமுன் வெளிப்பட்டால்தான் என்ன? என்ற வினாக்களுக்கெல்லாம் பெரியோர்கள் விடை சொல்லிக்கொண்டிருக்கமாட்டார்கள். அவர்களுடைய ஆணை அரசன் ஆணையைவிட முடுக்கானதாகும். வள்ளுவர் வாக்கும் இப்படித்

தானல்லவா, சில இடங்களில்? "கொக் கொக்க'' எப்போது? **கூம்பும் பருவத்தில்** 'மற்று அதன் குத்தொக்க' எப்போது? **"சீர்த்தவிடத்து"** ஏன்? "சொல்லமுடியாது. இதைச் செய்யுங்கள் என்றால் செய்யவேண்டும். இல்லையென்றால் தொல்லைதான் என்பதுதான் பொருள்.

வெட்டொன்றும் துண்டிரண்டுமாகப் பேசும் இப்பெரியவர்கள் பேச்சில் நுணுகிநோக்கினால் எதிர்கால வாழ்க்கை வளம் வெள்ளிடைமலையாக விளங்குகிறது. நீங்கள் விரைந்துசெல்லுங்கள் மறைந்து செல்லுங்கள் உங்கள் விரைவால் ஊரைக்காணலாம், மறைவால் வெற்றியைக் காணலாம். என்ற அருள் நீர்மை அமுதத்திற்கொப்பானதல்லவா? ஐயர்மொழியில் ஐபுருதொழுகும் ஐவரும் அவ்வண்ணமே சென்று நின்று வென்று மேன்மையுற்றார்கள். மணம் வேண்டி வந்த மன்னவரனைவரும் தலைவளைக்கத் தான் வளையாது நின்றதொரு பெரும் வில்லைவளைத்து மணமகளின் மணமாலையும் வெற்றிமாலையும் ஒருங்கே சூடிய வீரனுக்குப் பாஞ்சாலியை மணஞ்செய்தளிக்க முன்வந்தான் **பாஞ்சாலன்.** ஐவரில்முதல்வனே எங்கள் ஐவருக்கும் மணஞ்செய்தளித்தல் வேண்டுமென்றனன். அப்படிச் சொல்லுகின்ற தருமராசன் அறியாதவனல்ல. தீயவழிகளில் செல்கின்றவனுமல்ல, மனமயக்கத்தால் நிலைமாறுகின்றவனுமல்லவாம். அவன் "அசைவிலா அறத்தின் மைந்தனும். என்னசெய்வான் வேந்தன்? செயலறியாது திகைத்தான். அப்பாஞ்சாலன் திகைப்பை நீக்கவந்தேன் வந்தேனென வந்தனராம். யார்? வேதவியாசர்தான்.

"தருமன்மாமதலை சொல்லால்
தளர்வுறுங் காலை மாலை
நிருபநின்மனத்திலையம்
நீக்குக நீக்குகென்னத்
துருபதன்முன்னர்வந்து
தோன்றினன் சுருதி யாவும்
விரைதரு விதியின்மிஞ்ச
விதித்தருள் வியாதன் என்பான்"

(தொடரும்)



ஸ்ரீ ஆதிநாத சுவாமி கோயில் தோற்றம், ஆழ்வார் திருநகரி.



ஆழ்வார் திருநகரியில், நம்மாழ்வார் திருத்தேர் உலாக்காட்சி. (வைகாசி மாதப் பெருவிழா)

# தருமலிங்கேசர் மலை

கோவை திரு. C. M. இராமச்சந்திரன் செட்டியார், B.A., B.L.

**இடம் :**

இது கொங்கு நாட்டு மேற்கு எல்லையாகிய மேற்குத் தொடர்ச்சி மலையில் ஒரு பகுதி. போளுமாம்பட்டிப் பள்ளத்தாக்குக்கும் (நொய்யல் பள்ளத்தாக்கு), பாலைக் காட்டுக் கணவாய்க்கும் (வாளையாற்றுப் பள்ளத்தாக்கு) இடையில், மேற்கிலிருந்து கிழக்கே ஓடும் மலைத் தொடர்ச்சியின் கீழ்க் கோடியில் உள்ளது. தென் இரயில்வே பாதை மதுக்கரை நிலையத்தை விட்டு மேற்கே செல்லுகையில், அரைக் கல் தொலைவில் பாலைக் காட்டுப் பெரும் பாதையைக் கடக்கும் பாலத்திலிருந்து செல்லும் மலைப்பாதையில், சிறிது அண்மையில் இருக்கிறது. அது புகழ்பெற்ற மதுக்கரை சிமெண்ட் ஆலைக்குச் சமீபம். பெரும் பாறைகள் குவிந்து கிடக்கும் பகுதி. எங்கு பார்த்தாலும் பாறைகளைப் பிளந்து பொடியாக்கிச் சிமெண்ட் செய்கிறார்கள். கருங்கல்லும் வெண் கல்லும் பொன் பெருக்கும் அரிய இடம் இதுவாகும். ஐதிகப்படி இங்கே நெல் கல்லாயிற்று. இப்போது கல் பொன் ஆகிறது.

**வழி :**

கோவையிலிருந்து விசை வண்டியேறி மகல் சென்றால் மதுக்கரை பாலம் சேரலாம். அங்கிருந்து மலை ஏற வேண்டும். அல்லது போத்தனூர் இரயில் சந்தியில் ஏறி, இரயில் மார்க்கமாய், மதுக்கரை நிலையத்தில் இறங்கிப் பாலம் வரை நடந்து மலைப்பாதை ஏறலாம். மலைப்பாதை சிறிது கரடு முரடாக இருந்தாலும் நடப்பது சிரமமில்லை. சுமார் 100 அடி உயரம் ஏறினதும், அங்கே கோயிலின் தங்குமிடங்கள் உள்ளன. ஓரளவு பீட பூமியாக அது அமைந்திருக்கிறது. அதன் வாயிலில் ஒரு சிறிய முனியப்பன் கோயில் இருக்கிறது. பிறகு பிரயாணிகள் தங்குமிடம், சமையல் இடங்கள், உணவு உட்கொள்ளும் நீண்ட சாலை, அருகில் ஒரு அருமையான வாவி, நீர்ப்பாய்ச்சல், காய்கறித் தோட்டம் ஆகியவைகள் இங்கு முறையே இருக்கின்றன.

**உச்சிக் கோயில் :**

அங்கிருந்து நெட்டுக் குத்தலாக உச்சிக் கோயிலுக்குப் படி வழி செல்லுகிறது. படிகள் நன்றாகக் கட்டப்படவில்லை. சில இடங்களில் படிகள் இடிந்து கிடக்கின்றன. இளைஞர்கள் இங்கு சுலபமாகப் படியேறி உச்சி அடைந்துவிடுவார்கள். மலைமேல் உச்சியில் கோயில் சிறியது. ஏற்றம் சுமார் 500 அடி உயரம் இருக்கும். கோயிலை எப்படி கட்டினார்களோ அறியோம். மனிதனுடைய கடவுள் அன்பு மிகத் தூய்மையாகவும் உறுதியாகவும் இருந்தபடியால் தான், அந்த உயரத்தில் கருங்கற்களால் கோயில் எழுப்பி உள்ளார்கள். நாள்தோறும் பூசாரி இத்தனை தொலைவு ஏறிப்பூசை செய்து விட்டுத் திரும்புகிறான். அவன் உறுதியே உறுதி. பூசை முடிந்தவுடன் கீழே இறங்கித் தங்கள் இடத்திற்கு வர வேண்டும். உணவு வசதிகள் இந்த இடத்தில் செய்து கொள்ளலாம்.

**உச்சிக்கோயில் தோற்றம் :**

உச்சியிலிருந்து சுற்றிலும் நோக்கினால், இயற்கை அழகை நன்கு உணரலாம். மேற்கிலிருந்தும் தெற்கிலிருந்தும் காணும் காட்சி படிப்படியான மலை உச்சிகளும் பாறைகளும் தோற்றம் அளிக்கும். மேற்கே படிப்படியாக உயர்ந்து செல்லும் சிகரங்களும், வடக்கே செல்லும் சிகரங்களும் சிறுசிறு பாறைத் தொடர்களும் காணும். கிழக்கே நெல் இராசி குவிந்தாற்போல வழவழப்பான பாறை

கள் செல்லுகின்றன. இவைகள்தான் தருமலிங்கர் ஐதீகப்பாறைகள். இனி தென்புறத்தில் சிமெண்ட் தொழிற்சாலைகள் பாம்புபோல் வளைந்து வளைந்து செல்லும் இரயில் பாதையும், பின்னும் தெற்கில் புன்செய்க் காடுகளும் தோட்டங்களும் படர்ந்திருக்கின்றன. இவ் வழகிய காட்சிகள் கண்ணுக்கும் மனத்திற்கும் இனிமை தருகின்றன.

## இறைவன் திருப்பெயர் :

மலை உச்சியில் கோயில் கொண்டிருக்கும் இறைவன் திருப்பெயர் **தருமலிங்கேசுவரர்** என்பதாம். மூலத்தானத்தில் உள்ள இலிங்கம் தருமமே திருமேனியாக உள்ளதாம். அங்கே வழிபாடு செய்யும் அன்பர்கள் இதயங்களில் தரும சிந்தனை ஊட்டி வைத்துத் தரும மயம் ஆக ஆக்கி விடுமாம். வழிபாடு செய்யச் செய்யத் தரும சிந்தனை மேன் மேலும் பெருகுமாம். அதனால் இக்கோயில் இறைவன் இவ்வரிய திருப்பெயர் கொண்டிருக்கிறான். ஒரு தடவை இத்திருக்கோயிலுக்குச் செல்லுகிறவர்கள் பன்முறையும் செல்லுவார்களாகிப் புனிதவான்கள் ஆவார்கள். சுற்றிலும் உள்ள குடிகள் தங்கள் குழந்தைகளுக்கு முடி வாங்கவும், இறைவன் பெயரை இடவும் விரும்புவார்கள். அதற்காகவே அடிவாரப் பீட பூமியில் கட்டிடங்களும், தங்குமிடங்களும், உணவு சாலைகளும் கட்டியுள்ளார்கள்.

## கர்ணபரம்பரை ஐதீகம் :

பண்டைக்காலம் முதற்கொண்டே கொங்கு நாட்டிற்கும், சேர அல்லது சோழ நாட்டிற்கும் நடந்து வந்த வியாபாரம், இந்த மலையடிவாரத்து நெடும் வழியாகத்தான் சென்று வந்தது. அந்த வாணிப வழக்கு, இந்தக் கோயில் ஒரு காவல் தெய்வ ஆலயமாக இருந்தது. இந்தக் கோயிலை வழிபட்டு விட்டுத்தான் வியாபாரிகள் தங்கள் சரக்குகளைக் கொண்டு செல்வார்கள். யாதொரு அச்சமுமின்றி வியாபாரம் நடந்து வந்தது. ஒரு முறை அன்பு இல்லாத ஒரு வணிகன், தன் நெல் பொதிகளை ஏற்றிச் சென்றான். அவன் இறைவனை மதிக்கவில்லை. தொழவும் இல்லை. அவனைச் சோதிக்க வேண்டி இறைவன், ஒரு துறவி போல வந்து சிறிது நெல் கேட்டானும். வணிகர் அது நெல் மூட்டை அல்ல என்று மறுத்தானும். துறவி மறைந்து விட்டார். வாணிபன் வண்டிகளை ஓட்டிச் செல்லும் போது, இந்த இடத்தில் இருசு முறிந்து வீழ்ந்து விட்டது. நெல் முழுதும் கீழே சரிந்து விட்டன. வண்டிகளைப் பழுது பார்க்கும் வரையில் நெல்லை இராசியாகக் கொட்டி வைத்தான். வண்டிகளைப் பழுது பார்த்த பிறகு நெல்லை எடுக்கச் செல்ல, நெல் முழுதும் கற்பாறையாகி இருந்தனவாம். பிறகுதான அவன் ஏமாந்ததை அறிந்தானும். அந்த நெல்இராசி தான் இப்போது இராசிமலையாகக் காட்சி தருகிறது. வெண்பாறைகள் இராசியைப் போல அமைந்திருப்பது ஒரு அழகிய இயற்கைக் காட்சி ஆகும். இந்த இராசிப்பாறை வெகு தொலைவில் இருந்தும் தெரியும். தருமம் செய்யாதவனுக்கு மறக் கருணையும், செய்கிறவனுக்கு அறக் கருணையும் அளிப்பான் இறைவன் என்பது சித்தாந்தம்.

பக்தர்கள் தங்கவும், நைவேத்தியங்கள் செய்யவும், உணவு சமாராதனைகள் புரியவும், அவசியமான கட்டிடங்கள் அடிவாரத்தில் கட்டப்பட்டுள்ளன. பெரிய சமாராதனை செய்யவும் மேல் புறமாக நீளக் கொட்டகை இருக்கிறது. இதில் 300 பேர் உட்கார்ந்து சாப்பிட முடியும். மற்றக் காலங்களில் உபன்யாசங்கள் செய்யவும், திருவிழா நடத்தவும் பயன்படும். அடுத்த பள்ளத்தாக்கில் ஒரு வாவி கட்டப்பட்டுள்ளது. அதில் நல்ல குடி தண்ணீர் எப்போதும் கிடைக்கும். நீர் மட்டம் 10 அடி ஆழத்தில் உள்ளது. இதில் இருந்து நீர் ஏற்றி அடுத்த காய்கறித் தோட்டத்திற்கு இறைக்கிறார்கள். கத்தரிக்காய், வெண்டைக்காய், வாழை முதலியன, வெகு நன்றாக வளர்கின்றன. இத்தோட்டம் கோயிலுக்குப் பயன் படுகின்றது.

**பாலை :**

கொங்கு நாட்டிலிருந்து பாலைக்காட்டுக்குச் செல்லும் வழி என்று காட்டுவதற்கு, இந்தக்கோயில் அடிவாரத்தில் பாலை மரம் முளைத்திருக்கிறது. தமிழ் நாட்டுத் திணைகள் ஐந்தில் பாலை ஒன்று ஆகும். அது நிறைந்த காடு **பாலைக்காடு.** திணைகளின் பெயர்களை இலக்கிய இலக்கணங்களில் தான் பார்க்கிறோம். நேரில் மாணவர்கள் கண்டிருக்க மாட்டார்கள். நான் இக்கோயிலுக்கு மாணவர்களுடன் சென்றபோதுதான், இந்த மரத்தைக் கண்டேன். இலையோ அல்லது குச்சியோ உடைத்தால் பால் வடியும். அதுவே அடையாளம். பாலைகளில் பலவகைகள் உண்டு. கழிப்பாலை, வெட்பாலை, ஆடு தின்னுப்பாலை முதலியன உண்டு. இந்தக் கோயில் இலக்கணச் சுவை கற்பிப்பதற்குக் காட்சிச் சாலையாகவும் இருக்கிறது. மாணவர்கள் கண்டு மகிழ்ந்தார்கள்.

**உல்லாசப் பயணங்கள் :**

வழிபாட்டுப் பயணங்கள் மட்டும் அன்றி, மாணவ மாணவிகள் செல்லும் உல்லாசப் பயணங்களுக்கும் இந்த இடம் சௌகரியமாக இருக்கிறது. 100, 200 பேர்கள் அடங்கிய மாணவர் கூட்டங்கள் இங்கு சுலபமான செலவில், உல்லாசப் பயணம் செய்ய முடியும். தொலைவில் உள்ள இடங்களுக்குப் போவதற்கு வழி இல்லாதவர்கள், இந்த மலைக்குச் செல்லலாம் கட்டுச் சாதம் கட்டிக்கொண்டு, பள்ளி மாணவ மாணவிகள் இந்தக் கோயிலுக்குச் செல்வதுண்டு. இறை வணக்கத்திற்கு மட்டுமன்றிச் சொற்பொழிவுகள் நடத்தவும், தாவர இயல் அறியவும், புவி இயல் கற்கவும், இந்த இடம் மிகவும் பயன்படும். பெரிய நகரங்களுக்கு அருகில் இப்படிப்பட்ட வசதிகள் கொண்ட இயற்கைத்தலங்கள் காண்பதரிது.

**சாரணச் சங்கங்கள் :**

சேவா சங்கங்களான சாரணச் சங்கங்கள், இராஷ்டிரீய சங்கங்கள் முதலிய இளைஞர் சங்கங்கள், இந்த மலைக் கோயிலை மிகுதியும் பயன் படுத்திக் கொள்ளுகிறார்கள். நான் ஒரு முறை இந்த இயக்கங்களுடன் தான் சென்றேன். உடற்பயிற்சி, விளையாட்டு, குளிப்பு, சொற்பொழிவு, உணவு, மலைக்கோயில் ஏறுதல், மாலைச்சொற்பொழிவு, பரிசு வழங்கல் முதலிய திட்டங்களை வகுத்து, ஒரு நாள் முழுவதும் உல்லாசமாக வெகு சுலபமான செலவில் நடத்தினார்கள். அது கண்டு மிகவும் மகிழ்ந்தேன். இறை வணக்கமும், உடற் பயிற்சியும், மலைப் பயிற்சியும், ஒருங்கே அமைவது மிகவும் பொருத்தமானதல்லவா? அந்த இடம் **தருமலிங்கேசர்** மலைக்கோயில் ஆகும். அன்பர்கள் ஒரு முறை சென்று வழிபடுவார்களாக!

---

## திருத்தாண்டகம்

வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி!
மீளாமே ஆள்என்னைக் கொண்டாய் போற்றி!
ஊற்றாகி உள்ளே ஒளித்தாய் போற்றி!
ஓவாத சத்தத்து ஒலியே போற்றி!
ஆற்றாகி அங்கே அமர்ந்தாய் போற்றி!
ஆறங்கம் நால்வேதம் ஆனாய் போற்றி!
காற்றாகி எங்கும் கலந்தாய் போற்றி!
*கயிலை மலையானே போற்றி போற்றி!

— திருநாவுக்கரசர்.

# திருஞான சம்பந்தர் பிள்ளைத் தமிழ்

ஸ்ரீலஸ்ரீ மாணிக்க வாசக ஞான தேசிக சுவாமிகள்
(சிவராஜ யோக மடம், மேலையூர், திருவெண்காடு.)

## சிறுபறைப் பருவம்

ஆனந்தம் உயிரென்ன ஞானமே வடிவென்ன
ஆகமம் எடுத்துமொழியும்

ஆதிப்பி ரான்தனது பேருண்மை நிலைதன்னை
ஆன்மாக்கள் அறிவரிதெனத்

தானுந்து பேரருளின் ஐவகைய சத்தியாய்ச்
சாதாக்கியம் ஐந்துமாய்த்

தாமவை திரண்டநிட் களசகள மூர்த்தியாய்த்
தாவிலாத் தியானயோகர்

மோனந்த மாமுனிவர் தங்கட்கெ லாம்அருளி
முன்னிற்கவும் கருணைகூர்

முத்தொழில் இயற்றவும் மெத்திய சதாசிவ
முதல்வனை அலாது நினையாத்

தேனுந்து மாமலர்ப் பூம்பொழிற் காழிநீ
சிறுபறை முழக்கியருளே!

திருமணம் இகழ்ந்தருட் பெருமணம் நினைந்தசேய்!
சிறுபறை முழக்கியருளே! 1

மன்னுயிர் தமக்கெல்லாம் துன்பம் துடைத்தின்ப
வாரியை வழங்குதும்என

வானதிர ஆர்த்தெழூஉம் மணிமுரசு போக்கியும்,
மாயைதரு தத்துவமெனப்

பன்னவரும் ஆறும் நீத்துவளர் ஞானமாம்
பரவெளியில் நண்ணுமென்னப்

பாரகமெ லாம்அறிய வானளவு தூணமீப்
பைந்துகிற் கொடியேற்றியும்,

அன்னையொடும் மைந்தனொடும் எம்மையாள் சண்டியொடும்
அத்தனுர் இல்லந்தொறும்

ஆரருள் வழங்கவரும் மாண்விழாக் காண்மினென்று
ஆகமப் பொருண்மை தேற்றிச்

சென்னபுரி யிற்கன்னி என்பில்எழ ஏவினன்!
சிறுபறை முழக்கியருளே!

திருமணம் இகழ்ந்தருட் பெருமணம் நினைந்தசேய்!
சிறுபறை முழக்கியருளே! 2

மூவாமை தரவல்ல தேவாமிர் தத்தினுயர்
முத்தமிழ்ப் பாடலோடு

முதுமறை முழங்கிடும் 'ஆலவாய் தனில்யார்க்கும்
முன்னே முளைத்த முக்கண்

தேவாதி தேவ! நின் சீரருட் பெருமையே
திரைசூழும் உலகமெல்லாம்

சென்றுலவ நன்றருள்செய்' என்றுநீ அற்றைநாள்
செந்தமிழ் அலங்கல் கோத்தாய்!

ஆவா! நின் ஆணைமொழி நிறைவேற வேண்டுமெனும்
ஆர்வத் தொழிந்திலாதேன்

அந்திலப் பேரார்வம் ஊமன்கனவெனப்
போகாமை அருள் புரிவையோ?

சேவார்ந்த வெல்கொடிச் சிவனார் திருக்குமர!
சிறுபறை முழக்கியருளே!

திருமணம் இகழ்ந்தருட் பெருமணம் நினைந்தசேய்!
சிறுபறை முழக்கியருளே!! 3

முன்னவன் அருட்பெருமை என்னதான் மொழியினும்
மூடமதியாளர் கொள்ளார்!

மூதறிவும் நல்வினையும் ஒத்தமலப் பக்குவர்
முன்னியவ் அருளையுணரப்

பின்னம்அற எண்ணிலாப் பேரருட் செயல்செய்த
பெற்றிபோல் இன்றும்எந்தாய்!

பேரருட் செயலின்றி நின்னருள் உணர்த்துறின்
பேதையர்க்கு ஏல்வதின்றால்!

மன்னுசிவ நெறிதந்த ஞானமா மதலே! நின்
மலரடித் தொண்டர் தம்மில்

மாணருட் செயல்செய்ய வல்லஒரு தொண்டரை
மாநிலம் தழைய அருளித்

தென்னவனை வாழ்வித்த பொன்னிவளை நாட்டினன் !
சிறுபறை முழக்கியருளே !
திருமணம் இகழ்ந்தருட் பெருமணம் நினைந்துசெய் !
சிறுபறை முழக்கியருளே !! 4

அறிவழிகை முத்தியென ஞானம்உரை சாக்கியர்தம்
அவல உரை தவல, ஞாலம்
அருளிலாப் பரமனுண் டெனஓதும் அமணாதர்
ஐயஉரை பொய்ம்மை யாக,
மறைமுழுதும் ஓதியும் இறைவனிலை என்றுரைசெய்
வைதிக வழக்கு மாற,
மாண்புடைய பிரமமே நாஅன்எனும் *ஏகான்ம
வாதிகள் மயக்கம் நீங்க,
மறுமையே முத்தியெனும் மாயனார் மாயங்கொள்
வைணவக் காழ்ப்பு மாய,
மறுமையிலை இறைவனுக் குருவமிலை என்றினைய
வாதங்கள் பேதமாகிச்
சிறுமைநெறி நீங்கவரு திருஞான சம்பந்தன் !
சிறுபறை முழக்கியருளே !
திருமணம் இகழ்ந்தருட் பெருமணம் நினைந்தசெய் !
சிறுபறை முழக்கியருளே !! 5

முத்தொளிர் சங்கம் எடுத்து சுருண்டெழு
மொய்பவ ளத்திரையார்
மூரிக் கடல்நீர் ஞாலம் தழைய
முன்னவன் அமர்கோயில்
நித்திய நைமித்திகமிவை யெல்லாம்
நெறியிற் போற்றுமென
நீண்மொழி ஆணை நிறுத்திய போன்மென
நெடிய தமிழ்ப்பதிகம்
அத்தன் அமர்ந்துறை மயிலைப்பதிவாழ்
சிவநேசர்க் கருள
அங்கம் அதிற்பூம் பாவை எழும்பொழுது
அருள்செய் உரவோனே !

**மூத்தமிழ்** வல்ல முதற்சிவ ஞானி!
முழக்குக சிறுபறையே!

முதல்வன் அருட்கடல் ஆடியமுனிவன்!
முழக்குக சிறுபறையே!! 6

**சும்மை** எடுத்திடு பேறிழ வார்தரு
சுற்றத் தொடர்பொழியத்

தொண்டன் எனக்கொண் டருளிய பின்னே,
சூழ்குலம் ஆய்வதுநீ?

**கொம்மை** தரும்இள மென்முலை யமுது
கொழித்திடு மாறுஇமவான்

கோமக ளோச்சி வையைத் திருவுள்ளம்
குழையச் செய்தவனே!

**செம்மை** நலம்தெரி யாது திரிந்தலை
சிந்தையை மீட்டருளிச்

செங்கம லப்பதம் நினையஉ ணர்த்திய
செந்தமிழ் வித்தகனே!

**மும்மை** மலர்க்கருள் புரிய உதித்தவன்!
முழக்குக சிறுபறையே!

முதல்வன் அருட்கடல் ஆடிய முனிவன்!
முழக்குக சிறுபறையே!! 7

**நக்கன்** அருட்பெரு விழவு குறித்தெழு
நன்முரசு ஆர்ப்பதென

நாயனை யேன்செவி நீட்டிய ஐயிரு
நாத முழக்கமெனப்

**பொக்கமில்** அன்பர் உளத்தெழும் இன்பப்
புணரி அலைந்ததெனப்

பொற்று ளம்பெறு பரநா தத்தொனி
போற்றி யுணர்ந்ததென

**எக்கர்** எனத்திரி பிண்டியர் போதியர்
ஈறு தெரித்ததென

இறையருள் ஆர்கலி பொங்கும் முழக்கென
இனிய தவம்பயில்வார்

**முக்குண** விக்கினம் மாற்றுங் குருபரன்!
முழக்குக சிறுபறையே!


முதல்வன் அருட்கடல் ஆடிய முனிவன்!
முழக்குக சிறுபறையே!! 8

பாலமு துண்டெனை யாள உதித்த
பரஞ்சுட ரேயடியேன்
'பத்திப் பேர்வித் திட்' டென் னீயருள்
பாசுர நிலை நின்றே,
சீலமெ னும்புன லார்தடம் மூழ்கிச்
சித்தந் துரிசற்றுத்
திருவரு ளால்வினை வேர்கெட மூட்டித்
திருநீ றிடவருளாய்!
சாலிவ யற்றழை காழி வளம்பதி
தழைய உதித்தவனே!
தண்டமிழ் மாநில மீதெழு சுடராய்ச்
சைவத் தவவேந்தாய
மோலிபு னைந்தெழு ஞானக் குருசில்!
முழக்குக சிறுபறையே!
முதல்வன் அருட்கடல் ஆடிய முனிவன்!
முழக்குக சிறுபறையே!!

உருகும் மனத்தடி யார்தம் உள்ளத்து
ஊற்றெழு செந்தேனே!
உலகம் ஒதுக்கியும் நின்னடி கூடாது
உழலும் சிறுநாயேன்,
திருகும் மனக்களி யானை யடக்கிய
திண்கழல் அரியேறே!
சிவன்ரு ளாற்கனி செங்கனி யே! அக்
கனிதரு தீஞ்சாறே!
கருகும் மனத்தமண் காடெரி யூட்டிய
கடுவட வைக்கனலே!
கருணை சிறந்தருள் மாமழை பொழியும்
கன்னித் தமிழ் முகிலே!
முருகும ணங்கமழ் சோலைப் புகலி
முழக்குக சிறுபறையே!
முதல்வன் அருட்கடல் ஆடிய முனிவன்!
முழக்குக சிறுபறையே!! 1



வைத்தீசுவரன் கோயிலில், ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்களால், நமது அறநிலைய ஆணையர் அவர்களும், தஞ்சைத் துணை ஆணையர் அவர்களும் பாராட்டிச் சிறப்பிக்கப் பெறுதல்.





திரு. இராஜசிகாமணி அவர்கள் எழுதிய விளக்கவுரையுடன் கூடிய, இந்து அற நிலையச் சட்டங்களின் தொகுப்பு நூல் வெளியீட்டு விழா. அய்யா முருகப்பா கம்பெனியின் சார்பில், சென்னை, உட்லண்ட்ஸில் நிகழ்ந்தபோது திருமிகு முதலமைச்சர், உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி, நமது அற நிலைய ஆணையர் ஆகிய பெருமக்கள் கலந்து கொள்ளுதல். (9-7-'65). கபாலீசுவரர் கோயில் தேவார பாடசாலைக் சட்டடத் திறப்பு விழாவில் நடிகர் திலகம் திரு சிவாஜி கணேசன் அவர்கள் கலந்து கொள்ளுதல் (9-7-'65).



கோடைப் பயிற்சிப் பள்ளியில் கலந்துகொண்ட ஆலய நிர்வாக அதிகாரிகளுடன் நமது அற நிலைய ஆணையர், தஞ்சைத் துணை ஆணையர், உதவி ஆணையர்கள் முதலிய பெருமக்கள், வைத்தீசுவரன் கோயில் வழிபாட்டுக்குச் செல்லுதல்.

Edited and Published by the Commissioner, Hindu Religious and Charitable Endowments (Admn.) Dept. Madras-34, Printed at Manorama Press, 39, M. J. B. St., Madras-5.